பொருளியல் நோக்கு

செப்./அக்.
1984

இலங்கையில் நெற் செய்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம்

Johnson/FAO

வளர்முக நாடுகளின் பிரதான மனித நடவடிக்கையாக விவசாயம் இருந்து வருகிறது. இது கூடிய நேரத்தையும், கூடிய மனித உழைப்பையும் வேண்டி நிற்கிறது. மூன்றுவது உலகில் - குறிப்பாக ஆபிரிக்காவில் - பெரும்பாலான விவசாய வேலைகள் பெண்களினலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பிரதேசங்களில் விவசாயம் குறைந்த அளவிலேயே இயந்திரமயப்படுத்தப்பட்டுள்ளது.



தற்போதைய மதிப்பீடுகளின் பிரகாரம், 2000 ம் ஆண்டளவில் உலகின் பாலைவனப் பிரதேசங்கள் 20 சதவீதத்தால் விஸ்தரிப்படையும். ஒவ்வொரு வருடமும் 60 லட்சம் ஹெக்டயார் நிலம் இழக்கப்படுகிறது: 26 லட்சம் ஹெக்டயார் பண்ணை நிலங்களை உள்ளடக்கிய 2 கோடி ஹெக்டயார் நிலம் தரமற்றதாக மாறி வருகிறது. ஐ. நா. மதிப்பிட்டுள்ளபடி 200 கோடி ஹெக்டயார் நிலம் பாலை நிலங்களாக மாறும் அபாயம் உண்டு.

பசுமைப்புரட்சி

உஷ்ண வலய நாடுகளுக்குப் பொருத்தமான உயர் விளைச்சல் தரும் விதையினங்களின் அபிவிருத்தியுடன் ஆரம்பமான பசுமைப் புரட்சியானது பொருத்தமான தொழில் நுட்பத்துக் கான சிறந்ததோர் உதாரணமாகும். குறிப்பாக ஆசியாவிலேயே இதன் தாக்கம் நன்கு உணரப்பட்டது.

பழைய வேலைகளுக்கு புதிய உபாயங்கள்

பீடைத்தொல்லை



உணவு உற்பத்தியில் அண்மையில் பெறப்பட்ட அதிகரிப்புக்கள் பொதுவாகப் பாவிக்கப்படும் சில பீடை நாசினிகளை அடுத்து உருவாகிய பீடைகளினுல ஈடு செய்யப்பட்டது.

உணவு பதப்படுத்தல்

தொழில் செறிவு மிக்கதும், கிராமிய கைவினைஞர்களால் இலகுவில் தயார் செய்யக்கூடியதுமான இரு உபகரணங்கள், வளர்முக உலகின் சிறு விவசாயிகளிடையே பிரபல்யம் பெற்று வருகின்றன.



கையால் இயக்கக் கூடிய நிலக் கடலை பதப்படுத்தும் இயந்திரம்.

மூன்று வகையான பதர் நீக்கும் கருவிகள்.



பலகையினுலான சோளம் உதிர்க்கும் கருவி.

பெடலினுல் இயங்கும் நெல் துப்புரவாக்கும் இயந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் நோக்கு

மலர் 10 இதழ் 6/7 செப்./அக். 1984

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1276

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

நிரல்கள்

விவசாயம் 18 அரிசி விலை உயர்வு

வெளிநாட்டு செய்தித்தொகுப்பு 19 ஒபெக் – நிச்சயமற்ற எதிர்காலம்

வர்த்தகம் 20 தொலைக் காட்சிப் - பெட்டிகள் இறக்குமதி

விசேஷ அறிக்கை

3 இலங்கையில் நெற்செய்கை

உபாலி விதானபதிரன 4 ஈர வலய நெல் விளை பிரதேசங்களில் பண்ணை

எம். டி. பெர்ணன்டோ, கே. பீ. பலிபான 6 நெல் கதிரடித்தலில் இயந்திரப் பிரயோகம்

ஏ. எம். ரி. குணவர்தன 9 நெற்செய்கை தகவல் விவசாய சமூகங்களை எவ்வாறு அடைகின்றது

எஸ். எஸ். எல். சிறிவர்தன 11 இலங்கையின் பாரிய நீர்ப்பாசன திட்டமொன்றில் சிற்றுடமையாளர்கள்

சிறப்புக் கட்டுரைகள்

ஏ. சேனதிராஜா 21 ஐரோப்பிய நாணய அலகும் விசேட எடுப்பனவு உரிமைகளும்

எம். டப். பண்டித்த 23 கிராமத்துறையில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் ஆற்றும் பங்கு

ஆரிய அபேசிங்க 26 இலங்கையின் சிறிய நீர்ப்பாசன அமைப்புக்கள்

அச்சுப்பதிவில் நிகழ்ந்து வரும் தாமதங்களினால் 'பொருளியல் நோக்கு' இதழ் சற்று தாமதமாக வெளிவருகின்றது. அதன் காரணமாக சில இடங்களில் 1984 இறுதி வரையான புள்ளி விவரங்களைச் சேர்த்துள்ளோம்.

அடுத்த இதழில்

★ நீர் வழங்கலும், வடிகால் அமைப்பும்

★ சேமநல அரசு – இலங்கையில் சேமநல சேவைகள் பற்றிய ஒரு விரிவான பரிசீலனை

அட்டைப்படம்

எஸ். பாலித்த கன்னங்கரா

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண், பசளை, பயிர் முகாமை அம்சங்கள்

கடந்த சில ஆண்டுகளில் உஷ்ண வலய நாடுகளின் பயிர் உற்பத்தித்துறையில் முன்னெப்போதுமிராத வகையில் முன்னேற்றங்கள் எய்தப்பட்டுள்ளன. (குறிப்பாக அரிசியிலும், கோதுமையிலும்) புதிய இனங்களைப் பயிரிடுதலானது பசுமைப் புரட்சி என்றழைக்கப்படும் இம் முன்னேற்றங்களின் பிரதான அம்சமாக இருந்து வந்துள்ளது. இப்புதிய ரசங்கள் சிறந்த கண்காணிப்புடனுடன், கொள்வனவு செய்யப்பட்ட உள்ளீடுகளுடன் பொருத்தமான மண்ணில் பயிரிடப்பட்டபோது உயர் அறுவடைகளைப் பெற்றுத்தந்தன. இரசாயன உரவகைகள், பீடை கொல்லிகள் போன்ற உள்ளீடுகளும், இயந்திரமயமாக்கப்பட்ட உழவு, பயிரிடுதல், நீர்ப்பாசன நடவடிக்கைகளும் உயர் விளைச்சலுக்குத் துணைபுரிந்த பிரதான காரணிகளாகும். ஆனால், இப்பசுமைப் புரட்சியானது, உஷ்ண வலய நாடுகளில் வளம் குன்றிய மண்ணில் பிழைப்பூதிய மட்டத்தில் விவசாயம் செய்து வந்த பெருந்தொகையான விவசாயிகளிடம் எவ்விதமான குறிப்பிடக் கூடிய தாக்கங்களையும் ஏற்படுத்தவில்லை. உள்ளீடுகளை அவர்களால் வாங்க முடியவில்லை; அத்துடன் அவர்களது பண்ணையமைப்பு முறை 'உயர் உள்ளீட்டு' தொழில் நுட்பங்களுக்கு ஏற்றதாக இருக்கவில்லை. புதிய உள்ளீடுகளையும், தொழில் நுட்ப அறிவையும் பெற்றுக்கொள்வதில் நிலவிய சமமின்மை, நிலம், மூலதனம் என்பவற்றைப் பெறுவதில் ஏற்கனவே நிலவி வந்த சமமின்மையை மேலும் கூர்மையாக்கியது.

முன்னர் பின்பற்றியதை விடவும் மிகவும் திறமையான ஓர் அடிப்படையில் பாரம்பரிய முறைகளுக்குப் புத்துயிரூட்டி அவற்றைக் கைக்கொள்வதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு தேடப்பட்டது. இலங்கையின் இரண்டு முன்னணி விவசாய வியலாளர்களால் எடுத்துக் கூறப்பட்டுள்ள இத்தகைய ஒரு முறை 'பாதுகாப்பு பண்ணை முறை' என்றழைக்கப்படுகிறது. இம்முறை குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு உதவக்கூடியதாக இருக்கிறது. மண்ணையும், அதன் மேல் பரப்பையும், மண்ணின் வளமாக்கித் தன்மையையும், மழை வீழ்ச்சியினாலும், காட்டுத் தாவரங்களின் சுற்றோட்டத்தாலும் கிடைக்கும் நீரையும் பாதுகாப்பதன் மூலம், குறைந்த உள்ளீடுகளைக் கொண்டதும், கூடிய உற்பத்தி மட்டத்தையும், ஸ்திரத்தன்மையையும் கொண்ட ஒரு விவசாய அமைப்பை இம்முறை இலக்காகக் கொண்டுள்ளது. இவ் உற்பத்தி உணவுக்கும், சந்தைக்கும் மட்டுமன்றி விலங்குணவுக்கும், அடுப்பூதுவதற்கும் கூட பயன்படும்.

பெரும்பாலான விவசாய நிலங்கள் ஏற்கனவே சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதால், ஒவ்வோர் அலகினதும் உற்பத்திச்செறிவினையும், திறனையும் அதிகரிப்பதற்கான பண்ணை முகாமை முறைகளை விருத்தி செய்யும் நோக்கிலேயே இனி விவசாய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று 'பாதுகாப்பு பண்ணை முறை'யை ஆதரிப்போர் வாதிட்டு வருகின்றனர். மேலும், இவ்வதிகரித்த உற்பத்தி பெட்ரோலியத்தை அடிப்படையாக கொண்ட உள்வீடுகளில் மிகக்குறைந்த அளவில் தங்கியிருப்பதன் மூலமும், இயற்கை மூலவளங்களுக்கும், சூழலுக்கும் மிகச்சிறிய அளவு தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலமும் எய்தப்பட வேண்டும்.

ரே விஜேவர்தன, பராக்கிரம வைத்யநாத ஆகிய இருவரும் தொகுத்த கைநூலொன்றில் இப் பயிரிடுதல் முறை பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. 'பொருளியல் நோக்கின்' பின்னைய இதழொன்றில் இக்கை நூலிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் வெளியிடப்படும். நெற்பண்ணை அமைப்பு பற்றிய சில அம்சங்களை இந்த இதழில் தருகிறோம்.

உஷ்ண வலயத்தில் மண்ணின் அமைப்பைப் பொறுத்து பண்ணை முறை பொதுவாக இரு வகையாக பிரிக்கப்படுகிறது. மழை காலத்தில் வெள்ளப் பெருக்குக்கு உட்படும் தாழ் நிலங்கள் வடிகால் வசதி அற்றனவாயிருப்பதுடன், பள்ளத்தாக்குகளில் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



—— உற்பத்தி பிரதேசம் (1960: ஏக்./36.38 புசல்) - - - மொத்த உற்பத்தி (1960: 43,000,000 புசல்) ······ மொத்த உர வினியோகம் (1960: 20,126 தொன்)

இலங்கையில் நெற் செய்கை

1930 க்கள் அளவில் இருந்து இலங்கையில் நெல் உற்பத்தியில் விரிவானதும் செறிவானதுமான அபிவிருத்தி ஏற்பட்டது. மேலும், 1948 இல் சுதந்திரம் அடைந்த தன் பின்னர் அடுத்தடுத்து வந்த ஒவ்வொரு அரசாங்கமும் உணவில் தன்னிறைவு என்ற இலக்கினைப் பிரதானமானதாகக் கருதின.

களப்பயிர் உற்பத்தியில் நெற்செய்கை மிகப் பாரிய ஒரு அங்கமாக விளங்குகின்றது; இத்துறையில் சிறு விவசாயிகளே கூடுதலாக இருக்கின்றனர். மொத்தம் 11 லட்சம் சிறு வயல் நிலங்கள் உள்ளன; இவற்றுள் 74 சதவீதமானவை பரப்பளவில் 2½ ஏக்கருக்கும் குறைவானதாகும். நெற் செய்கை ஏறக்குறைய 800,000 மக்களின் பிழைப்பு மூலமாக இருப்பதுடன், துறை சார்ந்த பெறுமதிச் சேர்ப்பில் 22 சதவீதமாகவும், மொத்த தானிய நுகர்வில் 75 சதவீதமாகவும் இருக்கின்றது. நெல்லில் தன்னிறைவு அடைந்தால் அது வருமானம், வேலைவாய்ப்பு, பொது நலன் மட்டங்களை உயர்த்த உதவுவதுடன், அரிசி இறக்குமதிக்குச் செலவிடப்படுகின்ற பெறுமதிவாய்ந்த வெளிநாட்டுச் செலாவணியை மீதப்படுத்துவதற்கும் உதவும்.

1970 இல் 7.7 கோடி புசல்களாகவிருந்த நெல் உற்பத்தி 1981 இல் 10.7 கோடி புசல்களாக அதிகரித்த போதிலும் 1982 இல் 10.3 கோடி புசல்களாக வீழ்ச்சியடைந்தது. 1970 – 77 கால கட்டத்தில் வருடாந்தச் சராசரி வெளியீடு 6.8 கோடி புசல்களாகும். 1978 – 82 கால கட்டத்தில் மாத்திரமே உற்பத்தி மட்டத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது; இக்கால கட்டத்தில் வருடாந்தச் சராசரி உற்பத்தி 9.9 கோடி புசல்களாக இருந்தது.

1983/84 நிலைமை

1983/84 மகா போகத்தில் நாடு சிறந்த அறுவடையை எதிர்பார்த்த போதிலும் 1983 டிசம்பர் - 1984 மார்ச் காலப்பகுதியில் நாடு அனுபவித்த வழமைக்கு மாறான மழை வீழ்ச்சியின் விளைவாக இந் நம்பிக்கை தவிடு பொடியாகியது. மழை பயிர்களையும் நீர்ப்பாசன வேலைகளையும் சேதப்படுத்தியது; இதன் தாக்கம் குறிப்பாக வட மத்திய, கிழக்கு மாகாணங்களில் உணரப்பட்டது. பொலனறுவை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 80,000 ஏக்கர்களில் 20,000 ஏக்கர்கள் வெள்ளத்தால் சேதமடைந்தன. ஆரம்பத்தில் ஒரு ஏக்கரிலிருந்து 104 புசல் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தற்போது ஒரு ஏக்கரிலிருந்து 80 புசல்களே பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அனுராதபுர மாவட்டத்தில் 125,000 ஏக்கரில் உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட போதிலும் மழையின் பின்னர் இது 100,000 ஏக்கர்களாகக் குறைவடைந்துள்ளது. இம் மாவட்டத்திலிருந்து முதலில் 89 லட்சம் புசல்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தற்போது 65 லட்சம் புசல் எதிர்பார்க்கப்படுகின்றது.

1982/83 மகா போகத்தில் 169,197 ஏக்கர்களில் உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட அதே வேளை, 1983/84 மகாபோகத்தில் 159,783 ஏக்கர்களிலேயே உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வடக்கில் பெய்த பெருமழையின் காரணமாக அங்கும் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் வட மாகாணத்திலிருந்து 11,805,922 புசல்கள் எதிர்பார்க்கப்பட்டது; தற்போது இது 6,248,876 புசல்களாகவிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாணம், முல்லைத்

(32-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர வலய நெல்விளை பிரதேசங்களின் பண்ணை அமைப்பு அம்சங்கள்

காலி மாவட்டம்

— உபாலி விதானபதிரன

ஈர வலய நெல் விளை பிரதேசத்தில் விவசாய நிலத்தின் விரிவானதும், செறிவானதுமான பயிர்ச்செய்கை பண்ணை அமைப்பின் மீதும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகளின் மீதும் தங்கியுள்ளது. குறிப்பாக அளவுக்கு அதிகமான சனத்தொகையைக் கொண்ட கரையோரப் பிரதேசங்களைப் பொறுத்தவரையிலும் இந் நிலைமை பொருத்தமானதாகும்; இங்கு நிதி, தொழினுட்பவியல் அம்சங்களில் உள்ள தாமதம் என்பன விருத்தியடைந்த பயிர்ச்செய்கை முறைகளைப் பின்பற்றுவதற்குத் தடையாக உள்ளன. ஆகையால் ஒரு புறத்தில் தொடர்ச்சியான நிலத் துண்டாடலையும், மறுபுறத்தில் சிக்கலான குத்தகை முறையையும் காணலாம். 1978 இல் நடாத்தப்பட்ட விரிவான ஒரு ஆய்வின் ஆரம்ப அவதானங்களை இந்த ஆய்வு முன்வைப்பதுடன், காலி மாவட்டத்தில் பண்ணை அமைப்பின் பரிமாணத்தையும் நெற் காணிகளுடன் தொடர்புடைய சிக்கல்களையும் அடையாளம் காண முயற்சிக்கின்றது.

நெல் காலி மாவட்டத்தின் மிகப் பிரதானமான ஒரு பயிராக விளங்குகின்றது; இது மொத்த வேலைப் பட்டாளத்தில் 14.3 சதவீதமானோருக்குத் தொழில் வாய்ப்பினை அளிப்பதுடன், ஆயிரக்கணக்கான பாட்டாளி விவசாயிகளின் பிரதான பிழைப்பு மூலமாகவும் விளங்குகின்றது. மேலும் மொத்தப் பயிர்ச்செய்கை நிலத்தில் நெல் உற்பத்தி 30 சதவீதமான நிலப் பரப்பினை உள்ளடக்குவதுடன், பெருமளவிலான உழவர் விவசாயிகளின் இரண்டாந்தர, மூன்றாந்தர வருமான மூலமாகவும் விளங்குகின்றது. உதாரணமாக, மேலதிகமாகப் 10 சதவீதமான விவசாயிகள் 70 சதவீதத்திற்கும் கூடுதலான வருமானத்தை நெற்செய்கையிலிருந்து பெறுவதுடன், இன்னும் 18 சதவீதமானோர் 50 சதவீதத்திற்கும் கூடுதலான வருமானத்தை நெல்லிலிருந்து பெறுகின்றனர் என ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது. மொத்த ரீதியாக 42 சதவீதத்திற்கும் கூடுதலான விவசாயிகள் 50 சதவீதத்திற்கும் கூடுதலான வருமானத்தை நெல்லிலிருந்தே பெறுகின்றனர் எனலாம். ஆகையால் நெற்செய்கை மிக முக்கியமான வருமான மார்க்கமாகவும் வேலை வாய்ப்பு மூலமாகவும் விளங்குகின்றது எனலாம்.

1982 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்திக் கணிப்பீடுகள் அட்டவணை 1 இல் அளிக்கப்பட்டுள்ளன; இவை ஈரவலயத்திற்கும் காலி மாவட்டத்திற்கும் உரிய தனித்துவம் மிக்க அம்சங்களைக் காட்டுகின்றன. அவை பின்வருமாறு:

(அ) பயிர்ச்செய்கை, அறுவடை என்பவற்றுடன் தொடர்புடைய பருவ வேறுபாடுகள்; இவை ஒப்பீட்டு ரீதியில் அதிகரித்த மொத்த, நிகர செறிவுப் பயிர்ச் செய்கையைக் காட்டுகின்றன. பெருமளவிற்கு நம்பியிருக்கக் கூடிய சிறுபோகச் செய்கையே இதற்குக் காரணமாகும்.

(ஆ) உற்பத்தி நிலப் பரப்பிற்கும் அறுவடைசெய்யப்பட்ட பரப்பளவிற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு; வயல் நிலத்தில் உள்ள மேலதிக நீரும் கரைப் பிரதேசங்களில் உவர் நீர் வயல் நிலத்தினுள் புகுதலும் இதற்குக் காரணமாகும்.

(இ) ஒரு ஹெக்டயரிலிருந்து பெறப்படுகின்ற 2160 கி. கிராம் குறைந்த உற்பத்தி; தேசிய சராசரி உற்பத்தியில் இது 75 சதவீதமாகும்.

(ஈ) பெருமளவிற்குப் புறக்கணிக்கப்பட்ட நீர்ப்பாசனம். மேலதிக நீரைக் கட்டுப்படுத்துவதற்கும் வற்றச் செய்வதற்கும் இது முக்கியமானதாகும்.

ஆகையால் 1978 இன் இறுதிப் பகுதியில் ஜின் கங்கை அபிவிருத்திச் செயற்றிட்டப் பிரதேசத்திற்குள் வருகின்ற சில தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் ஒரு மாதிரி ஆய்வு நடாத்தப்பட்டது. நெல் விளை நிலப் பதிவிலிருந்து நெல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 349 குடும்பங்கள் ஆங்காங்கே தெரிவு செய்யப்பட்டு ஒரு ஆய்வு வினாக்கொத்து அளிக்கப்பட்டது. இவர்களுள் 336 பேர் சிறப்பாக விடையளித்தனர்.

காலி மாவட்டத்தின் பண்ணை அமைப்புப் பிரச்சினைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் போதாமையால் பண்ணை அமைப்பு மாதிரி, அதன் பரிமாணம், இத்தகைய பிரச்சினைகள் என்பன தொடர்பான மதிப்பீட்டை வெளிக்கள அவதானம், தகவல் என்பவற்றின் உதவியுடன் செய்யவேண்டியிருந்தது.

ஒரு நெற் செய்கை நிலத்தின் சராசரிப் பரப்பளவு .829 ஹெக்டயர் என ஆய்வில் கண்டறியப்பட்டது. மேட்டுநிலம், வீட்டுத் தோட்டம் என்பவற்றுடன் இந் நிலப்பரப்பளவு 1.292 ஹெக்டயர்களாகும். இந்த ஆய்வின் கீழ் தனிப்பட நெற்செய்கைப் பண்ணை அமைப்பு தொடர்பாகத் ஆராயப்பட்டதால் மேட்டுநிலம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுத் தோட்டம் என்பன பற்றி ஆய்வு செய்யப்படவில்லை. விவசாயிகளிடையே நெற்செய்கை நிலப்பரப்புப் பகிர்வு வேறுபட்டிருப்பதனால் .829 ஹெக்டயர் என்பது பூரணமற்ற ஒரு கருத்தினை அளிக்கின்றது. ஆய்வின்போது கண்டறிந்த சிறிய, பெரிய நிலப்பரப்புக்களின் வேறுபாட்டினை இது தொடர்பான புள்ளி விபரங்களிலிருந்து அறியலாம். ஆய்வில் கண்ட மிகப் பாரிய வயல் நிலப் பரப்பு 12.9 ஹெக்டயர்களாகும்; மிகச் சிறிய நிலப்பரப்பு .005 ஹெக்டயர்களாகும். தீவிரமான முறையில் நிலம் துண்டாடப் பட்டிருப்பதனாலும் செயற்பாட்டில் சாத்தியமற்ற நிலப் பரப்புக்கள் இருப்பது பண்ணை அமைப்பின் பிரதானமான ஒரு பண்பாகும்.

பண்ணை அளவின் பகிர்வு தொடர்பாகப் பின்வரும் அம்சங்களை முன் வைக்கலாம். 51 சதவீதத்திற்கும் கூடுதலான நெல் நிலங்கள் .499 ஹெக்டயர்களுக்கும் குறைவாகவிருந்தன. 21 சதவீதமானவை. 5-.999 ஹெக்டயர்களுக்கு இடைப்பட்டிருந்தன. வேறு வார்த்தைகளில் கூறினால் 28 சதவீதமான நிலங்கள் மாத்திரம் 1 ஹெக்டயருக்குக் கூடுதலாகவிருந்தன.

விவசாயிகளிடையே நிலப்பரப்பின் பகிர்வு சிறப்பற்றதாக அமைந்திருத்தல் இன்னொரு பண்பாகும். ஆங்காங்கே பேட்டி காணப்பட்ட விவசாயிகளுள் 13 சதவீதமானோர் மாத்திரமே 1.5 ஹெக்டயருக்குக் கூடுதலான வயல் நிலங்களைக் கொண்டிருந்தனர். விவசாயிகளிடையே நெல் விளை நிலங்களின் பகிர்வு தொடர்பாக ஆராய்வதற்கு ஒரு 'லோரன்ஸ் வளைவு' கீறப்பட்டபோது விவசாயிகளிடையே விவசாயத்திற்குப் பொருத்தமான நிலப்பரப்புப் பகிர்வில் சமமின்மை நிலவுவது அவதானிக்கப்பட்டது.

நெற்செய்கை நிலங்களின் பகிர்வு தொடர்பாக மாத்திரமே ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை 1

மதிப்பிடு செய்யப்பட்ட பயிர்ச் செய்கை அறுவடை நிலப்பரப்பும் விளைச்சலும்

பரப்பு / பருவம்	வயல் பரப்பளவு (ஹெக்டயார்)	பயிர்ச்செய்கை நிலப்பரப்பு (ஹெக்.)	மொத்த அறுவடைப்பரப்பளவு (ஹெக்.)	நிகர அறுவடைப் பரப்பளவு (ஹெக்.)	நிகர ஹெக்டயருக்குரிய விளைச்சல் கி./கிராம்.
பெரும்போகம்	24890	22260	21355	16713	2160
சிறுபோகம்	24890	227110	21398	16746	1950
மொத்தம்		44970	42753	33459	

மூலம்: விவசாய அபிவிருத்தி அமைச்சு.

நாவுகளைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாக இவற்றை இன்னொரு ஈர வலய மாவட்டத்துடன் ஒப்பிட முடியவில்லை. ஏனைய நிலப்பரப்புக்களும் (தேயிலை, தென்னை, இறப்பர் நிலங்களும் வீட்டுத் தோட்டங்களும்) கவனத்திற்கு எடுக்கப்பட்டிருப்பின் இச் சமமின்மை மிகப் பாரியதாகவிருக்கும். பகிர்வுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட காணிச் சீர்திருத்தம் போன்ற நடவடிக்கைகளின் பின்னணியிலேயே இவை பற்றி ஆராய வேண்டியுள்ளது. மிகக் குறுகலான நிலப் பரப்பிற்குள் நிலத் தாகம் கொண்ட விவசாயிகள் குவிந்திருப்பதனால் நிலப்பரப்பளவுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன.

ஒரு பரந்த நிலப் பரப்பு பல்வேறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்படுவதனைத் துண்டாடல் அல்லது உப பிரிவு எனலாம். இச் சிறு நிலங்கள் தொடர்ச்சியாகவோ அல்லது ஆங்காங்கே சிறு துண்டுகளாகவோ அமைந்திருக்கலாம். நில உரிமையை ஆளுகின்ற மரபுகள், சட்டங்கள் என்பவற்றின் விளைவே இதுவாகும். காலி மாவட்டத்தில், குறித்த ஒரு நிலத்தை எல்லாப் பிள்ளைகளிடையேயும் சமமாகப் பங்கிடுவதே மரபாகும். ஒருவர் பெறுகின்ற நிலத்தின் தரம், பரப்பளவு என்பவற்றில் வேறுபாடுகள் இருந்த போதிலும் இது கிராம விவசாயிகளிடையே நிலத் துண்டாடலை விரைவுபடுத்துகின்றது. குறிப்பாகத் திருமணம் போன்ற சந்தர்ப்பங்களில் இவை மேலும் துண்டாடப்பட்டு மேலும் பிரிக்கப்படுகின்றன.

துண்டாடப்பட்ட இத் துண்டு நிலங்கள் சில பண்புகளைக் கொண்டுள்ளன. மிகச் சிறிய துண்டு நிலங்கள் இதன் பிரதான பண்புகளுள் ஒன்றாகும். நிலத் துண்டு சிறிதாக இருப்பதற்கு ஏற்ப துண்டாடலும் கூடுதலாகவிருக்கின்றது. பண்ணை நிலங்களின் பரப்பளவு உற்பத்தித் திறனைப் பாதிக்கின்றது. குறிப்பாக ஈர வலயத்தில் சிறிய பண்ணை நிலங்கள் குறைந்த உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளன. எனினும், பண்ணை நிலத்தின் அளவு நேர்கணியத் தன்மைகளைக் காட்டுவதாகக் கண்டி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு காட்டுகின்றது; பண்ணை நிலத்தின் அளவினைப் பொறுத்து மீள் நடுகை, பசளைப் பிரயோகம், விவசாய இரசாயனப் பாவனை போன்ற விருத்தியடைந்த முறைகளை இலகுவாக மேற்கொள்ள முடிகின்றது. ஒப்பீட்டளவில் பாரிய பண்ணைகளில் மேற்கொள்ளப்படுகின்ற விருத்தியடைந்த நடவடிக்கைகளின் சிறந்த விளைவு, நிலத்தின் இடர் ஏற்கின்ற தன்மையில் தங்கியுள்ளது.

அதிகரித்த எண்ணிக்கையிலான சிறிய நிலத் துண்டுகளிலிருந்து இன்னும் சில அம்சங்களை நோக்கலாம். 19 சதவீதத்திற்கும் கூடுதலான பண்ணைகள் ஒவ்

(17-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல் கதிரடித்தலில் இயந்திரப் பிரயோகம்

எம். டி. பெர்னன்டோ
கே. பீ. பலிபான

இலங்கையில் நெல் கதிரடித்தல் பிரதானமாக எருமை மாடுகளாலும், உழவு இயந்திரங்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது. குறைந்த ஊழிய நுகர்வு, இயக்கச் செலவு போன்ற வாய்ப்புக்களின் காரணமாக பிரதான நெல் விளை பிரதேசங்களில் உள்ள விவசாயிகளிடையே கதிரடிப்பு இயந்திரம் பிரபல்யமாகியுள்ளது. அனுராதபுரத்தில உள்ள அரிசி பதனிடல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த எம். டி. பெர்னுந்து கே. டி. பலிபான ஆகிய இருவரதும் இக்கட்டுரை, பாரம்பரிய கதிரடித்தல் முறைகளுடன் கதிரடிப்பு இயந்திரத்தின் வேகம், திறன் இயக்கச் செலவு என்பவற்றை ஒப்பீடு செய்கின்றது.

அறிமுகம்

அறுவடை செய்யப்பட்ட நெற் கதிரிலிருந்து அரிசியை வேருக்குவதே கதிரடித்தல் எனப்படும். அயன வலய நாடுகளின் அரிசி உற்பத்தியில் இது கூடிய ஊழிய நுகர்வினைக் கொண்டதாகும். புதிய விதை நெல், சிறந்த விவசாய உற்பத்தி முறைகள் என்பவற்றின் அறிமுகத்துடன் அதிக அளவிலான தானியங்களைக் கையாள வேண்டி இருப்பதனுல் கதிரடித்தல் தொடர்பான பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இன்று இலங்கையில் எருமை மாடுகளாலும், உழவு இயந்திரங்களாலும் கதிரடித்தல் பிரதானமானதாக விளங்குகின்றது. பிரதான அரிசி விளை பிரதேசங்களில், குறிப்பாக, வட மத்திய, வட கிழக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏறத்தாள 80 சதவீதமான விவசாயிகள் கதிரடிப்பதற்கு உழவு இயந்திரங்களைப் பாவிக்கின்றனர். மேல், மத்திய மாகாணங்களில் எருமை மாடுகள் பிரபல்யம் பெற்றுள்ளன. குறைந்த ஊழிய நுகர்வு, இயக்கச் செலவு போன்ற வாய்ப்புக்களின் விளைவாக எந்திர கதிரடிப்புக்கருவி, பராம்பரிய முறைகளை விடவும் விவசாயிகளிடையே பிரபல்யம் பெற்றுள்ளது.

எருமைகளைக் கொண்டு கதிரடிக்கையில் நெற் கதிர்கள் தரையிலோ அல்லது கோணிச் சாக்குகளிலோ வட்டமாகப் பரப்பப்பட்டு, அவற்றின் மீது எருமைகள் ஓட்டப்படும்; எருமைகள் கதிர்களை மிதிப்பதனுல் நெல் உராய்விற்கு உட்பட்டுத் பிரிக்கப்படும். விதையடிப்பதற்கு உழவு இயந்திரங்களின் பாவனை பல ஆசிய நாடுகளில் பிரபல்யம் பெற்றுள்ளது. இம்முறையின் கீழ் நெற் கதிர்கள் தரையில் அல்லது கோணிச் சாக்குகளின் மீது வட்ட வடிவத்திற்குப் பரப்பப்பட்டு, அதன் மீது திரும்பத் திரும்ப உழவு இயந்திரம் செலுத்தப்படும். உழவு யந்திரச் சில்லுகளின் தாக்கத்திஞல் நெல் பிரிக்கப்பட்டு விடுகிறது.

எந்திர விதையடிப்புக் கருவியிஞல் கதிரடிக்கையில் அதிலுள்ள சக்கரம் சுழல்வதனுல் ஏற்படுகின்ற விசையினுல் கதிரில் உள்ள நெல் வேருக்கப்படுகின்றது. இக் கருவியில் இரு வகைகள் உள்ளன. ஒரு வகைக் கருவி இயங்குகையில் நெற் கதிர்களை ஒருவர் பிடித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இரண்டாவது வகையில் முழுத் தாவரத்தையும் இயந்திரத்தினுள் இடுதல் வேண்டும்; இக் கருவியினுள் உள்ள சக்கரத்தின் விசையினுல் நெல் வேருக்கப்படுகின்றது. முதலாவது வகைக் கருவியில் வெளியீடு குறைவாக இருப்பதுடன், தாவரத்தைப் பிடித்துக் கொண்டிருப்பதற்கு ஒருவர் தேவைப்படுவதனுல் ஊழியத் தேவை கூடுதலாக இருக்கின்றது. இரண்டாவது வகைக் கருவி குறைந்த ஊழியத்தை வேண்டி நிற்கின்றது. கதிரடிக்கின்ற சக்கரம் முட்களையோ அல்லது கம்பிகளையோ கொண்டிருக்கலாம். புதிய கதிரடிப்புக் கருவிகள் யாவற்றிலும் முள் பல்லுச் சக்கரங்களைக் கொண்டுள்ளன. இச் சக்கரங்கள் ஈரத் தாவரங்களை இட்டால் கூட தடைப்படாது இயங்குவதுடன், நெல் குறைந்த அளவிலேயே பாதிக்கப்படுகின்றது.

அச்சாணி விதையடிப்பு இயந்திரம் தாவரத்தை முழுமையாக ஏற்று விதையை வேறுபடுத்துகின்ற வகையைச் சேர்ந்ததாகும்; இதனை சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவகம் விருத்தி செய்துள்ளது.

ஆய்வின் நோக்கம்

அச்சாணி விதையடிப்பு இயந்திரத்தைப் பின்வரும் வகையில், உழவு இயந்திரம், எருமை என்பவற்றுடன் ஒப்பிடலாம்.

அ. சிறந்த விதையடித்தலும் விதையடிப்பு விகிதாசாரமும்.
ஆ. ஊழியத் தேவை
இ. எரிபொருள் நுகர்வு
ஈ. விதையடிப்புச் செலவு
உ. விதையடிக்கப்பட்ட நெல்லின் தரம்.

கருவிகளும் முறைகளும்

1983 மார்ச் மாதம் அனுராதபுரத்தில் உள்ள நாச்சதூவ குடியேற்றத் திட்டத்தில் மகா போகத்தின்போது விதையடிப்புக் கால கட்டத்தில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பீஜீ 94 – 1 இன நெல் பயிரிடப்பட்ட ஒரு நிலத் துண்டு மூன்று சம துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று வகை கதிரடிப்பிற்கும் உட்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலிலிருந்து 150 மீற்றர் தூரத்தில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட ஒரு நிலம் எருமை, உழவு இயந்திர விதையடிப்பிற்குப் பாவிக்கப்பட்டது. நெற் தாவரத்தை வயலிலிருந்து இந்நிலத்திற்குக் கொண்டுவருவதற்குச் செலவான மனித ஊழிய நேரம் கணிக்கப்பட்டது.

எருமை மாட்டினுல் விதையடித்தல்

நெற் கதிர்கள் 3.6 மீற்றர் சுற்றளவுள்ள ஒரு வட்டத்தில் மத்தியில் 2 மீற்றர் கனத்திற்கு விதையடி நிலத்தில் குவிக்கப்பட்டது. மணித்தியாலம் 3.6 கி. மீ. வேகத்தில், ஐந்து எருமைகள், நெல் வேருகும் வரையில் இக் குவியலை மிதித்தன. மிதிக்கையில் வைக்கோல் மனிதர்களால் வேருக்கப்பட்டது; மிதித்ததன் பின்னர் நெல் சேகரிக்கப்பட்டு, பதர்களை நீக்குவதற்குப் புடைக்கப்பட்டது; சக்கர உழவு இயந்திரம் ஒன்றினுல் இயக்கப்பட்ட விசிறியினுல் வைக்கோல் துண்டுகள் அகற்றப்பட்டன.

உழவு இயந்திரத்தினுல் விதையடித்தல்

எருமை மாடுகளால் மிதிப்பதற்கு வைக்கப்பட்டது போன்று நெற் தாவரங்கள் குவிக்கப்பட்டன; மத்தியில் இதன் கனம் 1.6 மீற்றர்களாகும். மணித்தியாலம் 8 - 12 கி. மீ. வேகத்தில் ஒரு நான்கு சக்கர உழவு இயந்திரம் அதன் மீது இயக்கப்பட்டது. இதற்குச் செலவான எரிபொருளும் அளவிடப்பட்டது. மிதிக்கப்பட்டதன் பின்னர் மனித உழைப்பின் மூலம் வைக்கோல் அகற்றப்பட்டு, நெல் சேகரிக்கப்பட்டது. வேருக்கப்பட்ட நெல் புடைக்கப்பட்டு, பதர்கள் நீக்கப்பட்டன; இரு சக்கர உழவு இயந்திரம் ஒன்றினுல் இயக்கப்பட்ட விசறியினுல் வைக்கோல் துண்டுகள் அகற்றப்பட்டன.

கதிரடி இயந்திரம்

எக்ரோ டெக்னிகா சிறிலங்கா லிமிட். நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட சுமந்து செல்லக் கூடிய ரக கருவி இதற்குப் பாவிக்கப்பட்டது. இது கதிர்களை முழுமையாக இடக்கூடிய, 5 குதிரை வலுக் கொண்ட மண்ணெண்ணெய் இயந்திரமாகும். கதிரடி சக்கரத்தின் அகலம் 70 செ. மீ.; சுற்றளவு 30 செ. மீ.; சக்கரத்தின் அரைவாசி பல் முட்களையும் மிகுதி அரைவாசி 3 மி. மீ. கனமுள்ள இறப்பர்த் துண்டுகளையும் கொண்டிருந்தது. (விளக்கப்படம்) வேருக்கப்படுகின்ற நெல்லில் உள்ள பதர்களையும் அழுக்குகளையும் நீக்குவதற்கு கருவியில் ஒரு விசிறியும் பொருத்தப் பட்டிருந்தது. இலகுவாக எடுத்துச் செல்வதற்கு வசதியாக கருவியின் மத்தியில் பொருத்தக் கூடிய ஒரு கைப் பிடியும் இருந்தது. இயந்திரம் ஒரு கன்வஸ் விரிப்பில் வைக்கப்பட்டு நெற் கதிர்கள் கைகளால் இடப்பட்டன. இயந்திரத்திலிருந்து 1.2 மீற்றர் தொலைவில் விழுந்த பதர்களில் நெல் காணப்பட்டதால், இயந்திர விசிறியினுல் மீண்டும் சுத்திகரிக்கப்பட்டு முழுமையான நெல் பெறப்பட்டது.

கதிரடிப்பு விகிதாசாரம

கதிரடிப்பதற்கு எடுக்கப்பட்ட நேரமும் வேருக்கப்பட்ட நெல்லின் நிறையும் பதியப்பட்டன.

செயற்றிறன்

கதிரிலிருந்து வேருக்கப்படாது எஞ்சியிருந்த நெல்லை எண்ணி விதையடிப்புச் செயற்றிறன் அளவிடப்பட்டது.

நெல்லின் தரம்

விதையடிப்பதற்கு முன்னரும் பின்னரும் தாவரத்தின் ஈரம் ஈரமானியாலும் உடைவுற்ற நெல் உடைவுச் சோதனைக் கருவியாலும் அளவிடப்பட்டன.

பிரதிபலன்

உயர்ந்த அளவிலான விதையடித்தல் உழவு இயந்திரத்தாலும் ஆகக் குறைந்த கதிரடித்தல் எருமை மாட்டினுலும் பெறப்பட்டுள்ளது. செயற்றிறனைப் பொறுத்தவரையிலும் இயந்திர விதையடித்தல் 99.9%; உழவு இயந்திர விதையடித்தல் 97.4%; எருமை மாட்டினுல் விதையடித்தல் 96.0% இருந்தது. வெவ்வேறு கதிரடிப்பு முறைகளின் கீழ் ஒரு தொன் நெல்லைப் பெறுவதற்குத் தேவையான ஊழியத்தை பொறுத்தவரை இயந்திர விதையடிப்பிற்குரிய ஊழியம் உழவு இயந்திர விதையடிப்பினை விடவும் 61.2 சதவீதமும், எருமை மாட்டு விதையடிப்பினை விடவும் 73.5 சதவீதமும் குறைவாகவிருந்தது. ஏனைய இரு முறைகளைப் போலன்றி, விதையடிப்பு இயந்திரத்தை வயலில் வைத்து விதையடிக்க முடிந்ததனுல் இம் முறையின் கீழ் ஊழியம் பெருமளவிற்குக் குறைவாகவிருந்தது. இயந்திரத்தை இயக்குவதற்கு குறைந்த ஊழியமே தேவைப்பட்டது.

செலவினைப் பொறுத்தவரையிலும் இயந்திர விதையடித்தலே குறைந்த செலவினை உடையதாகவிருந்தது; ஏனைய இரு முறைகளை விடவும் இம் முறையின் கீழ் ஊழியம் குறைவாகத் தேவைப்பட்டமையும், எரிபொருள் செலவு குறைவாக இருந்தமையும் இதற்குக் காரணமாகும். எருமை மாடுகளால் கதிரடிக்கையில் ஊழியம் கூடுதலாகத் தேவைப்பட்டதனுல் செலவு கூடுதலாக இருந்தது.

உழவு இயந்திரம், எருமை மாடு என்பவற்றுல் கதிரடிக்கையில் நெல்லுடன் நிலத்திலுள்ள மண் கறைகள் என்பன கலப்பதற்குரிய வாய்ப்புக் கூடுதலாகவிருந்தது. உழவு இயந்திரம் எருமை மாடுகளை விடவும் கூடுதலாக நிலத்தைப் பாதித்ததனுல், உழவு இயந்திரத்தால் வேருக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதிரடிக்கும் இயந்திரம்

நெல்லில் கூடுதலான அழுக்கு காணப்பட்டது. எனினும் எருமை மாடுகளின் சிறுநீர், சாணம் என்பனவும் நெல்லின் தூய்மையை இல்லாமலாக்கின. - உழவு இயந்திரத்தால் வேருக்கப்பட்ட நெல் கூடுதலாகப் பழுதடைந்தது; பாரம் மிக்க உழவு இயந்திரத்தின் அமுக்கம் இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். நெல்லை இயந்திரத்திலிட்டு தூய்மைப்படுத்தியதன் பின்னர் இன்னொரு அம்சம் அவதானிக்கப்பட்டது; நெல்லை இயந்திரத்தில் அரைத்ததன் பின்னர், உழவு இயந்திரத்தில் அரைத்த நெல்லிலிருந்து பெற்ற முழுமையான அரிசி இயந்திர கதிரடிப்பிலிருந்து பெறப்பட்ட முழுமையான அரிசியை விடவும் குறைவாக விருந்தது.

எனவே உழவு இயந்திரம், எருமை என்பவற்றுல் விதையடிப்பதனை விடவும் இய்ந்திர விதையடிப்பு திறமையானதாக இருந்ததுடன் தரம் மிக்க நெல்லையும் இதிலிருந்து பெறமுடிந்தது. மேலும், இதில் ஊழியத் தேவை குறைவாக இருந்ததனுல், செலவும் குறைவாகவிருந்தது.

இயந்திர விதையடிப்பின் ஒரு குறைபாடு யாதெனில், உழவு இயந்திர விதையடிப்பினை விடவும் கதிரடிப்பு விகிதாசாரம் குறைவாக இருந்தமையாகும். இக் குறைபாட்டினைப் பின்வரும் வழிகளில் நீக்கலாம்.

அ. கதிரடிப்புச் சக்கரத்தின் அளவைப் பெருப்பித்தல்

ஆ. கதிரடிப்புச் சக்கரத்தின் சுற்றளவைக் கூட்டுதல்

இவ்வாறு செய்யப்படுகின்ற மாற்றங்கள், இயந்திரத்தை இலகுவாக எடுத்துச் செல்லக் கூடிய வகையில் அமைதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத் தகவல் நெற்செய்கைச் சமூகங்களை எவ்வாறு அடைகின்றது

ஏ. எம். ரி. குணவர்தன

விவசாயத் தகவல் மூன்று வழிகளில் விவசாய சமூகங்களை அடைகின்றது. (1) விஸ்தரிப்பு ஆளணியினருடன் தனியாகவோ அல்லது சிறு குழுவாகவோ கொண்டுள்ள தொடர்பு (2) வானொலி, செய்திப் பத்திரிகை போன்ற வெகுசன ஊடகங்களில் பிரதான இடமளித்தல் (இவற்றுள் பெரும் பாலானவை விஸ்தரிப்பு முகவர்களிடமிருந்து தோற்றம் பெறுகின்றன). (3) குடும்ப அங்கத்தவர்கள், அயலவர்கள், நண்பர்கள் உறவினர்கள் போன்ற முறைசாராத மூலங்கள்.

விவசாயத் திணைக்களத்தின் விஸ்தரிப்புச் சேவையே நெற்செய்கைச் சமூகங்களுக்குத் தகவல் அளிக்கின்ற பிரதான முறைசார்ந்த மூலமாக விளங்குகின்றது. விவசாயத் தகவலைப் பரவலாக்குவதற்கு இது பல வழி வகைகளைப் பின்பற்றுகின்றது. தற்பொழுது இது பயிற்சி, விஜயம் செய்தல் ஆகிய விஸ்தரிப்பு முறையில் பெருமளவிற்குத் தங்கியுள்ளது. கிராமிய மட்டத்திலான விஸ்தரிப்பு ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்ட விவசாயத் தலைவர்களுடன் சேர்ந்து செயற்படுகின்றனர். இவ்விஸ்தரிப்புச் சேவை இலங்கைக்கு ஒரு புதிய முறையாக இருப்பதனால், இம் முறையின் கீழ் விஸ்தரிப்புச் சேவையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே தகவல் பரிமாற்றம் எவ்வாறு உள்ளது என்பது தொடர்பாகக் கருத்துரைக்க முடியாதுள்ளது.

மேற்கூறப்பட்ட விஸ்தரிப்புச் சேவை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் விவசாயிகளை அடைவதற்கு விஸ்தரிப்பு ஊழியர் பல வழிகளைப் பின்பற்றினர். விவசாயிகளிடம் நேரடியாகச் செல்லுதல், விவசாய பயிற்சி வகுப்புக்கள், செய்து காட்டல்கள், வெளிக்கள வேலை போன்ற குழுமுறை வேலைகள் பிரதான முறைகளாக விளங்கின. குழு முறையின் கீழ் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் திரைப்படம் போன்ற கட்புலச் சாதனங்களையோ அல்லது ஏனைய எளிய செய்திப் பரிமாற்றச் சாதனங்களையோ பயன்படுத்தினர்.

குழுமுறையுடன் ஒப்பிடுகையில், செய்திப் பாய்ச்சலைப் பொறுத்த வரையிலும் விஸ்தரிப்பு உத்தியோகத்தருக்கும் விவசாயிக்கும் இடையிலான தனிப்பட்ட தொடர்பு மிக முக்கியமானதாக விளங்கியதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குழு முறையை விடவும் விவசாயி — விஸ்தரிப்பு உத்தியோகத்தர் தனிப்பட்ட தொடர்பின் கீழ் தகவல் இலகுவாக விவசாயியை அடைந்தது. இதனை விவசாயி, விஸ்தரிப்பு உத்தியோகத்தர் விகிதாசாரத்தின் கீழ் நோக்க வேண்டும்; ஏனெனில், குழு முறையின் கீழ் அதிகமான விவசாயிகள் ஒரே இடத்தில் கூடுவதனால் ஆளுக்குரிய செலவு குறைவாக இருக்கின்றது.

தகவல் மூலங்களைப் பொறுத்தவரையிலும், கிடைக்கப் பெறுகின்ற தகவல் மாவட்டங்களுக்கும் விரிவான பிராந்தியங்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாட்டினைக் காட்டவில்லை. எனினும், குறித்த ஒரு பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படுகின்ற விவசாய முறைக்கும் விவசாய அபிவிருத்திக் கட்டத்திற்கும் ஏற்ப தகவல் மூலங்கள் வேறுபடுவதனை அவதானிக்கலாம். உதாரணமாக ஒரே தன்மை கொண்ட பொலனறுவை போன்ற விவசாய பிரதேசங்களில், அபிவிருத்தியின் உயர் கட்டத்தில் குழுமுறையிலான விரிவாக்கற் சேவை, வெகுசன ஊடகங்கள், அச்சிட்ட விடயங்கள் போன்றன கூடுதலாகப் பயன்பாட்டினை எதிர்பார்க்கலாம். அபிவிருத்தியடைந்த விவசாய பிரதேசங்களில் முறைசாராத தகவல் மூலங்களின் (குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள்) முக்கியமற்ற பங்கினைக் குறிப்பிடத்தக்க ஒரு வேறுபாடாகக் கொள்ளலாம். இதனைப் பிரதேச விவசாயிகளின் அறிவு மட்டத்துடன் தொடர்புபடுத்தலாம். விவசாயிகளுக்குக் கூடுதலான அறிவு இருப்பதனால் சிறப்பற்ற தகவல் மூலங்களை விடவும் சிறப்பான தகவல் மூலங்களில் தங்கியுள்ளனர் எனலாம்.

விஸ்தரிப்பு ஆளணியையும் முறை சாராத மூலங்களையும் நோக்குமிடத்து தொழினுட்பம் சாராத தகவலைப் பொறுத்த வரையிலும் முறை சாராத மூலம் முக்கியமானதாக விளங்குகின்றது. உதாரணமாக, சிறந்த ரக விதைநெல் தொடர்பான தகவலைப் பொறுத்தவரையிலும் அயலிலுள்ள விவசாயிகள் ஒரு பிரதானமான தகவல் மூலமாக விளங்கினர். பசளைப் பிரயோகம் போன்ற பெருமளவிற்குத் தொழினுட்ப தன்மை கொண்ட தகவலைப் பொறுத்தவரையிலும் முறை சாராத தகவல் மூலங்களை விடவும் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களில் பெருமளவு தங்கியிருந்தனர். குறிப்பாக, முதியோர் கல்வியில் முறை சாராத தகவல் மூலம் பாவிக்கப்படுகையில், தகவல் அளிப்பு உறவினைப் பொறுத்தவரையிலும் இந்த அவதானம் முக்கியமானதாகும். எளிய செய்திகளைப் பொறுத்த வரையிலும் முறை சாராத மூலங்கள் தாக்கம் மிக்கனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைக்காக விவசாயிகள், விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களைத் தேடிச் செல்வதும் உண்டு. பிரச்சினைகளை எதிர்நோக்குகையிலோ அல்லது விவசாய உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்கையிலோ விவசாயிகள் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களைத் தேடிச் செல்கின்றனர். நுண்ணுயிர்களும் நோய்களுமே பொதுவான பிரச்சினைகளாகும். பிரச்சினையை எவ்வாறு அடையாளம் காணலாம்? அவற்றை எவ்வாறு தீர்க்கலாம் என்பது பற்றிய தகவலே பெரும்பாலும் வேண்டப்படுகிறது. பிரச்சினை தொடர்பான சந்தர்ப்பங்கள் தவிர, அறிவை விருத்திசெய்கின்ற நோக்கத்துடன் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களைச் சந்தித்தல் மிகக் குறைவாகும். விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் கல்வியூட்டுபவர்களல்ல; நிவாரணம் அளிப்பவர்களாகும் என விவசாயிகள் கருதுவதே இதற்குக் காரணமாகும்.

விவசாயத்தில் கருத்துத் தலைமைத்துவம் என்ற விடயம் தொடர்பாக இலங்கையில் சிறிதளவு ஆராய்ச்சியே செய்யப்பட்டுள்ளது; இதனைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. கருத்துத் தலைவர்கள் சில விடயங்கள் தொடர்பாக அறிவு படைத்து இருப்பதுடன் சமூகத்தின் ஏனைய அங்கத்தவர்களால் இவர்களது கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளவும் படுகின்றன. ரோஜர்சும் சூமேக்கரும் குழுத் தலைமைத்துவத்தைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றனர். "இன்னொருவரின் கருத்துக்களையும் நடத்தைகளையும் பெருமளவிற்குத் தான் விரும்பிய அளவிற்குச் செல்வாக்குப்படுத்துவதற்கு ஒரு தனிமனிதனுக்கு உள்ள திறனின் அளவே கருத்துத் தலைமைத்துவமாகும். ஒரு தனிநபரிடம் உள்ள தொழினுட்ப அறிவு, சமூகத் தொடர்பு, முறைமையுடன் இணைதல் என்பவற்றின் அடிப்படையிலேயே இத் தலைமைத்துவம் பெறப்படுகின்றது"

நண்பர்கள், உறவினர்கள், அயலிலுள்ள விவசாயிகள் போன்றோர் பிரதான தகவல் மூலங்களாக விளங்குவதாக ஆய்வுகள் காட்டியுள்ள போதிலும், குறிப்பாக நெற்செய்கைச் சமூகங்களில் உறுதியான கருத்துத் தலைமைத்துவம் இல்லை என சான்றுகள் தெரிவிக்கின்றன. நெற்செய்கைச் சமூகங்களில் கருத்துத் தலைமைத்துவம் இன்மையால் விவசாயம் தொடர்பான அறிவில் ஒத்த தன்மை நிலவ வாய்ப்பு உண்டு. இத்தகைய ஒரு நிலைமையில் தகவற் பாய்ச்சல் மிகச் சிக்கலானதாகவும் பல திசையிலிருந்து பாய்கின்ற செய்முறையாகவும் இருத்தல் வேண்டும். கருத்துத் தலைவரிடமிருந்து ஏனைய விவசாயிகளை அடைகின்ற தகவற் பாய்ச்சல் ஒரு திசை சார்ந்ததாக அமையாது மிகச் செறிவானதாகவும் சமமான கருத்துப் பரிமாற்றம் மிக்கதாகவும் விளங்கவேண்டும். ஒரு சந்தர்ப்பத்தில் தகவல் மூலமாக விளங்குகின்ற ஒரு விவசாயி, இன்னொரு சந்தர்ப்பத்தில் தகவலைப் பெறுபவனாக விளங்கலாம். நெற்செய்கையின் கூட்டுறவுப் பண்பு, ஒரு தனித் தலைமைத்துவத்தை ஊக்குவிக்காது, கூட்டுத் தீர்மானத்தையே ஊக்குவிக்கின்றது.

குடும்ப அங்கத்தவர்கள், அயலிலுள்ள விவசாயிகள், உறவினர்கள், நண்பர்கள் போன்றோரும் விவசாயத் தீர்மானம் எடுத்தலைப் பாதிக்கின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவர்கள் ஒருவிதமான பசளை, விதைநெல், இரசாயனக் கலவைகள் போன்றவற்றைப் பாவிக்கின்றனர்; சிறந்த ரக பசளை, விதை நெல், இரசாயனக் கலவைகள் போன்றவற்றைப் பாவிக்க இவர்கள் முன்வருவதில்லை. கூடுதலான அளவு தொழினுட்பம் பாவிக்கப்படுகின்ற பிராந்தியத்திலேயே இது அவதானிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் விவசாயிகள் விருத்தியடைந்த தொழினுட்பத்தின் பயன்களை அறிந்துள்ளனர்; எனினும், தாம் தற்போது பின்பற்றுகின்ற முறையை அபிவிருத்தி செய்ய விரும்புவதில்லை.

வெகுசன ஊடகங்கள் விவசாய சமூகங்களை அடைவது தொடர்பாக ருசிகரமானதும் பயன்மிக்கதுமான அவதானத்தைச் செய்யலாம். ஏனைய பல வளர்முக நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் வெகுசன ஊடகம் மக்களை அடைவது அதிகமாகும். விவசாயச் சமூகங்களுக்கும் இது செல்லுபடியாகின்றது. இலங்கை மக்களிடையே நிலவுகின்ற கூடுதலான கல்வி விகிதாசாரம் இதற்குக் காரணமாக விளங்குகின்றது எனலாம். வெகுசன ஊடகம் சமூகத்தை அடைவது கூடுதலாகவிருந்த போதிலும், இவற்றின் வாயிலாக விவசாயத் தகவல் திருப்திகரமாகச் செல்வதில்லை எனச் சான்றுகள் தெரிவிக்கின்றன. ஒன்றில் விவசாயத் தகவல் குறைவாகும்; அல்லது விவசாயத் தகவல் மக்களைக் கவரவில்லை என நாம் எடுகோள் கொள்ளவும்.

கிராமியக் கடை போன்ற பொது இடங்களில் செய்திப் பத்திரிகைகளை வாசிப்பதற்குரிய விருப்பம் அவதானிக்கப்பட்டுள்ளது. கிராமத்தவர்களின் சமூக வாசிப்புப் பழக்கத்தை இதற்குக் காரணமாக கூறலாம். வீடுகளில் பத்திரிகை வாசிப்பவர்களாகக் குறிப்பிட்டோரின் எண்ணிக்கையை விடவும் பத்திரிகை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கை குறைவாகவிருந்தது. பத்திரிகைச் செய்தி தொடர்பாகக் கருத்துப் பரிமாற முடிவதனாலும் இவ்விடங்களில் பல பத்திரிகைகளை வாசிக்க முடிவதனாலும் மக்கள் கூட்டாக வாசிப்பதனை விரும்புவதற்குரிய காரணமாகக் கூறலாம். தமக்குப் பத்திரிகைளைப் பெறமுடிந்தால், கிராமத்தவர்கள் பல பத்திரிகைகளையும் வாசிக்க விரும்புகின்றனர். ஈர வலயப் பிராந்தியங்களை விடவும் உலர் வலயப் பிராந்தி

(17-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பாரிய நீர்ப்பாசனத் திட்டமொன்றில் சிற்றுடைமையாளர்கள்

எஸ். எஸ். எல். சிரிவர்தன

இலங்கையில் அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற குடியேற்றங்கள் 1930 க்களில் ஆரம்பித்தன. நிலத்தின் உரிமை குடியேற்ற வாசிகளுக்கு அளிக்கப்பட்டு, அவர்களுக்கு நீர்ப்பாசனமும் வழங்கப்பட்டது. இவை சிறந்த பிரதிபலனை அளிக்கவில்லை என செலவு பற்றிய ஒரு நுண்ணாய்வு தெரிவிக்கின்றது. உணவுப் பற்றுக்குறை, வேலையின்மை போன்ற தேசிய பிரச்சினைகளுக்கு இது சிறந்த தீர்வினை அளிக்கவில்லை. இவ்வாறாக சிறிய விவசாயிகளினதும், விவசாயத் தொழிலாளர்களதும் இப்பிரச்சினைகள் தொடர்ந்தும் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன. அதிகரித்து வந்த இத்தேசிய பிரச்சினைகளுக்குரிய இறுதித்தீர்வாக மகாவலி நீர்ப்பாசன, குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது நாட்டின் முன்னணி விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாக மாத்திரமன்றி, ஆசியப் பிராந்தியத்தில் உலக வங்கி, வெளிநாட்டு அரசாங்கங்கள் என்பவற்றினால் நிதிப்படுத்தப்பட்ட ஒரு பாரிய திசைதிருப்பு திட்டமாகவும் விளங்குகின்றது.

30 வருடங்களுக்குள் 15 லட்சம் மக்களைக் குடும்பப் பண்ணைகளிலிருந்து மீளக் குடியமர்த்துவதே மகாவலி செய்திட்டத்தின் பிரதான நோக்கமாகவிருந்தது. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இது ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டது. ஆகவே கால்வாய், பாதைகள், வீடுகள், பொதுவசதிகள் என்பவற்றை நிர்மாணிப்பதற்கும், தரையைச் சமப்படுத்தல், குடியேற்றம் என்பவற்றுக்கும் பெருந்தொகையான அதிகாரிகளும் தொழிலாளர்களும் தேவைப்பட்டனர். இவ்வேலைகள் யாவும் நிரந்தர திட்ட பணியாளர்களால் நிருவகிக்கப்பட்டன. 1981 அளவில் துரித மாகவலித் திட்டத்தின் மொத்தச் செலவு, அதன் ஆரம்ப மதிப்பீட்டுச் செலவான ரூபா 800 கோடியை விடவும் 400 சதவீதம் கூடுதலாகவிருந்தது.

குடியமர்வுத் திட்டமிடல்

விரிவான ஆராய்ச்சியின் பின்னர் உருவாக்கப்பட்ட குடியேற்றத் திட்டத்தில் சென்ற காலங்களில் இடம் பெற்ற தவறுகளைத் தடுப்பது தொடர்பாகக் கூடிய கவனம் எடுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட நிலத்தின் அளவு, சென்றகாலக் குடியேற்றத் திட்டங்களிலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவுக்கு வேறுபட்டிருந்தது. முன்னர் நான்கு ஏக்கர் தாழ் நிலமும், மூன்று ஏக்கர் மேட்டு நிலமும் அளிக்கப்பட்டது; இது நிருவகிக்க மிடியாதது எனக் கருதப்பட்டு, பரப்பளவு 2.5 ஏக்கர் நீர்ப்பாசன நிலமாகவும், 0.5 ஏக்கர் வீட்டுத் தோட்ட நிலமாகவும் குறைக்கப்பட்டது. சம பரப்பளவுள்ள நில ஒதுக்கீடும், விற்பனை அல்லது துண்டாடலைத் தடுப்பது தொடர்பான ஒழுங்கு விதிகளும், கிராமியத் துறையில் நிலவுகின்ற சமமின்மையை நீக்குவதற்குரிய ஒரு பிரதான மூலமாகக் கருதப்படுகின்றன. 2.5 ஏக்கர் வயல் நிலத்தைக் கொண்ட சிறு விவசாயிகள் என்ற எண்ணக் கருவும், பண்ணைச் சேவைகளின் அளிப்பும், சிறந்த மனிதக் குடியேற்றத்திற்கும் சிறந்த உற்பத்தி மட்டத்திற்கும் பொருத்தமான தாகவும், அவசியமானதாகவும் கருதப்பட்டது. நில உடைமை 2.5 ஏக்கர் அளவிற்குக் குறைக்கப்பட்டதன் மூலம் பெரிய நில உடமையாளர்களை நீக்கி, விவசாயிகளிடையே சமத்துவத்தை ஊக்குவிக்கலாம் எனக் கருதப்பட்டது. மேலதிக நிலம் கையேற்கப்பட்டு நிலம் இல்லாதோரிடையிலும், எல்லைப் பாட்டாளிகளிடையிலும் பங்கிடப்பட்டது. நில உடமையைச் சமப்படுத்துவதுடன் உற்பத்திச் செலவு இலாபம் என்பவற்றைப் பகிர்ந்து கொள்வதனையும் இது நோக்கமாகக் கொண்டிருந்தது. சேவைகள், உள்ளீடுகள் என்பன சமமாகக் குடியேற்றவாசிகளிடையே பங்கிடப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

எழுச்சியடைந்து வருகின்ற வருமான ஏற்றத்தாழ்வுகள்

மீள் குடியேற்றத்தின் பயன்கள் அடிமட்டத்தில் அவற்றை வேண்டி நிற்போரை இயல்பாகவே அடைவதில்லை என அனுபவம் காட்டுகின்றது. வருமான ஏற்றத்தாழ்வும், மறைமுகமான குத்தகையும் அதிகரித்துவந்துள்ளன. பெருந்தொகையான விவசாயிகள் வறுமையடைந்துள்ள, அதேவேளை ஒரு சிறு செல்வந்த விவசாயிகள் பெரும்பாலான மூலவளங்களைக் கட்டுப்படுத்துவதாக மகாவலிக் குடியேற்றங்களில் மேற்கொண்ட ஆய்வுகள் காட்டுகின்றன. சமூக வேறுபாடுகளின் விளைவாக வகுப்பு உருவாக்கம் ஏற்பட்டுள்ளது. மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தின் எச் 1 பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நான்கு பண்புகள் கீழே ஆராயப்படுகின்றன.

(அ) கிராம உழவர் விவசாய கட்டமைப்பின் மாற்றங்களும், நவீன நீர்ப்பாசன முகாமைக்கு ஏற்ப அனுசரித்துச் செல்வதிலுள்ள பிரச்சினைகளும்.

(ஆ) உள்ளூர் மட்டத்திலுள்ள கிராமிய நிறுவனங்களின் அழிவும், தேசிய நிறுவனங்களின் தோற்றமும்.

(இ) பிழைப்பூதியக் கிராமிய விவசாயம் வர்த்தகமயப் படுத்தப்பட்ட பணப் பயிராக மாற்றமடைதலும், புதிய பண்டப்பரிமாற்ற உறவுடனை தனியார் வர்த்தகத் தனியுரிமையின் ஸ்தாபனமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) ஒழுங்குமுறையான சந்தைப் படுத்தல் அமைப்பின் வீழ்ச்சி

(அ) குடும்ப அடிப்படையில மைந்த ஓர் உற்பத்தி முறையே குடியேற்றத் திட்டத்தின் நோக்க மாகும். விவசாயிகள் நவீன விவ சாய முறைகளைப் பாவித்து நவீன வெளியீடுகளிலும் தயாரிப்புப் பொருட்களிலும் தங்கி, செறி வான பயிர்ச் செய்கையின் வாயி லாக மிகை உற்பத்தியைத் தோற்றுவிப்பர் என எதிர்பார்க் கப்பட்டது. இம் மீள் கட்டமைப் புச் செய்முறையானது கிராமியப் பொருளாதாரத்தை மாத்திர மன்றி, அதனுடன் இணைந்த விழுமியங்களையும் அழித்துவிட் டது.

மரபு ரீதியான கிராமியப் பொருளாதாரத்தின் மிக முக்கிய மானதும், பெருமதிமிக்கதுமான ஒரு தத்துவமான கிராமிய ஒற் றுமை (கூட்டு நடவடிக்கை, ஏற் றுக்கொள்ளப்பட்ட தலைமைத்து வம், ஊழியர் பரிமாற்றமும் கால் நடைகளின் பரிமாற்றமும்), புதிய நீர்ப்பாசனக் குடியேற்றத் திட் டத்தின் கீழ் முக்கியத்துவத்தை இழந்துள்ளது. விவசாயி தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில் விவசாயம் செய்ய வேண்டி இருப் பதனுல், தனது நிலத்தை மாத் திரம் கவனித்து வேலை செய்வதற் குப்புதிய முறையில் கீழ் நிர்ப்பந் திக்கப்பட்டதால். தனது வய லுக்குப் போதிய அளவு நீரைப் பெறுவது ஒவ்வொரு விவசாயி யினதும் சொந்த நலனுகவிருந் தது. ஏனையோரைப்பற்றிக் கவ லைப்படத் தேவையில்லை. ஆகா யால் நீர் விநியோகம் தொடர் பான பிரச்சினைகள் குடியேற்ற முகாமையில் ஒரு முக்கியமான அம்சமாக விளங்கியது. நீர் விநி யோகக் கால்வாய்களின் மட் டத்தை விடவும் உயரமான இடத்திலும் தாழ்ந்த இடத்தி லும் வயல் நிலங்கள் சரிந்திருந் தன. உயர் மட்ட நிலங்களின் கால்வாய்களில் நீர் மட்டம் குறைவாக இருந்ததுடன் நீர் விநியோகம் உறுதியாகவும் இருக்கவில்லை. கால்வாய்களின் கீழ் மட்டத்தில் இருந்த விவசாயி கள் கூடுதலான நீரைப் பெறுவ தற்காக நீரை மறித்தனர். இதன் விளைவாக விவசாயிகளிடையே பிணக்குகள் ஏற்பட்டன. அவர் களது கூட்டு முயற்சிகளும், குடும்ப உறவுகளும் புறக்கணிக் கப்பட்டன.

குடியேற்றத்திற்கு முன்னர் விவசாயிகள் தமது கிராமங்களின் நீர் விநியோகத்திற்குக் கூட்டு முயற்சிகளை மேற் கொண்டனர். உதாரணமாக, 'பங்குமுறையின்' கீழ் கிடைக்கின்ற நீர் சமாதான மாகவும் நேர்மையாகவும் பங்கி டப்பட்டது. கால்வாயின் இறுதி யில் இருப்பவர்களுக்கு முதலில் நீர் வழங்கப்பட்டது. பின்னர் படிமுறையாக அடுத்தடுத்து உள்ள நிலங்கள் நீரைப் பெற் றன. வறட்சிக் காலத்தில் 'பைத்ம முறையின்' கீழ் மட்டுப் படுத்தப்பட்ட அளவிலான நீர் பங்கிடப்பட்டது. புதிய நீர் முகா மையின் கீழ் இத்தகைய முறை கள் இடம் பெறவில்லை.

கூட்டுத் தத்துவத்தின் அடிப் படையில் அமைந்திருந்த கிராமி யப் பொருளாதாரத்தின் உற் பத்த வட்டம் பெருமளவிற்குத் தனிமனித அடிப்படையானதாக மாறியது. இவ்வாருகத்தனது மட்டுப்படுத்தப்பட்ட சந்தைப் படுத்தல் உறவுகளுடனன சுதந் திரமான, பிழைப்பூதியக் கிரா மீய விவசாயத்திற்குப் பதிலாகத் தனிக் குடும்பங்கள் பணப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற ஒரு முறை இடம்பெற்றது. தமது உற்பத்தயின் விற்பனை, விவசாய உள்ளீடுகள், நுகர்வுப் பொருட் கள் என்பவற்றின் கொள்வனவு என்பவற்றுக்கு விவசாயிகள் சந்தையில் தங்கியிருக்க வேண்டிய தாயிருந்தது. தொழிநுட்ப அறிவு, சந்தை அறிவு, கடன் பற் றிய தகவல் போன்ற நவீன விவ சாயத்திற்குத் தேவையான அடிப்படைத் தேவைகள் விவ சாயிகளிடம் இருக்கவில்லை. ஆகையால் முற்போக்கான ஒரு சில விவசாயிகள் மாத்திரம் சாதாரண குடியேற்ற வாசிகளை எட்டாத இந்த அறிவியலைப் பெற்று இலாபகரமான வர்த்த கங்களை ஸ்தாபித்துக் கொண்ட னர்.

(ஆ) உள்ளூர்க் கிராமீய நிறுவ னங்கள் அழிக்கப்பட்டு, ஒரு பணி யாட்சி முறையிலான முகாமைத் துவம் ஏற்படுத்தப்பட்டமை இக் கட்டமைப்புச் செய்முறையின் இன்னெரு பண்பாகும். *1981* இன் இறுதியில் மகாவலி எச் 1 பிராந்தியத்தில் ஒவ்வொரு 18 குடியேற்றவாசிகளுக்கும் ஒரு அதி காரி (வங்கித்தொழில், சௌக்கி யம், கல்வி, நிருவாகம், சமூக அபி விருத்தி என்பன உள்ளடங்க லாக) வீதம் இருந்தனர். குடி யேற்றவாசிகள் தங்கிவாழ்கின்ற, அதிகாரம் இல்லாத ஒரு அங்க மாக மாறினர். எல்லா முடிவுக ளும் அதிகாரிகளால் எடுக்கப்பட் டன. குறைந்த கல்வி, மூலதனம் இன்மை, கலாசார வேறுபாடு கள் என்பவற்றுல் விவசாயிகள் மேலும் எல்லை களுக்கு உட்படுத் தப்பட்டனர். இதன் விளைவாக முகாமை அதிகாரிகளால் உரு வாக்கப்பட்ட விவசாயிகள் கழ கத்தில் பங்கெடுப்பு குறைவாக விருந்தது. மரபு ரீதியான தலை வர்களுக்குப் பதிலாக உயர் மட் டத்திலிருந்து அதிகாரிகள் நிய மிக்கப்பட்டனர். இவர்களுக்கு விரிவுரை சார்ந்த வகுப்பறைப் பயிற்சியை மாத்திரமே அளிக்க முடிந்தது.

விவசாயக் கழக அங்கத்தவர் கள் சமூக அபிவிருத்தி அதிகாரி களுக்கு எதிராக நம்பிக்கையில் லாத் தீர்மானம் கொண்டுவந்த தனுல் விவசாயத் தலைவர்களை மாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டனர். சில விவசாயத் தலை வர்கள் அடி மட்ட விவசாயிக ளைப் பிரதிநிதித்துவப்படுத்தா தனுல் அவர்கள் நீக்கப்பட்டனர். இன்னும் சிலர் ஒரு சில செல்வந் தர்களை மாத்திரமே பிரதிநிதித் துவப்படுத்தினர். இடமாற்றத் திற்கு உட்பட்ட விவசாயிகளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் புதிய திட்டத்திற்குள் வந்த முற்போக்கான, செல்வந்த விவசாயிகள் தாம் இழந்த நிலத்திற்கு நட்டஈடாக கூடுதலான நிலத்தைப் பெற்றனர். இதற்கு முன்னர் வர்த்தகர்களாகவும், அரசாங்க ஊழியர்களாகவும், நிலச் சொந்தக்காரர்களாகவும் அவர்கள் பெற்றிருந்த சமூக, பொருளாதார அதிகாரத்தை புதிய நிறுவனங்களில் தலைவர் பதவிகளைப் பெறுவதன் மூலம் மீளவும் ஸ்தாபித்துக்கொண்டனர். பொதுவாக நகர்ப்புற விழுமியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முகாமை அதிகாரிகள் இவர்களைப்புதிய தலைவர்களாக வரவேற்று முற்போக்கான, திறமை மிக்க விவசாயிகளாக நடாத்தினர். உள்ளூர் தலைமைத்துவத்தின் அதிகாரமும் பொறுப்பும் பறிக்கப்பட்டதனால் அது குறைந்த அந்தஸ்தைப் பெற்றது. புதிய குடியேற்றத் திட்டத்தில் விவசாயிகள் பெருமளவிற்கு அதிகாரிகளில் தங்கியிருந்தனர். இதன் விளைவாக சாதுரியமான அதிகார வர்க்கம் கூடுதலான நன்மைகளைப் பெற்றுக்கொண்டது.

(இ) மட்டுப்படுத்தப்பட்ட சந்தை உறவுகளுடனன மரபு ரீதியான பரிமாற்ற முறை சீர்குலைந்து, நவீன தீவளாவிய ரீதியிலான சந்தை அமைப்பு ஏற்படுத்தப்பட்டமை குடியேற்றப் பிராந்தியத்தை இரு கூறுக்குவதற்கு வழி வகுத்த இன்னொரு அம்சமாகும். இப்புதிய பரிமாற்ற உறவுகளின் விளைவாகப் பிழைப்பூதிய விவசாயிகள் மரபுரீதியான கிராமீயப் பரிமாற்றத்தைக் கைவிட்டு, நகர்ப்புறம் சார்ந்த நுகர்வு நடத்தையை நோக்கி அமைவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

விரிவான சுழல் முறைப் பயிர்ச்செய்கைக்குப் பதிலாக இரசாயனப்பசளை, களை கொல்லி, பூச்சி கொல்லி, கடன், இயந்திரம் போன்ற உள்ளீடுகளை வேண்டி நிற்கின்ற செறிவான பயிர்ச் செய்கை இடம் பெற்றது. கிராமங்களில் எருமைகள் இலவசமாகக் கிடைத்தன; ஆனல் புதிய முறையின் கீழ் புற்றரைகள் இல்லாமையால் இவற்றைப் பாவிக்க முடியவில்லை. ஆகையால் குடியேற்ற வாசிகள் உழவு இயந்திர உரிமையாளர்களில் தங்கியிருக்க வேண்டியிருந்தது.

புதிய சந்தைப் பரிமாற்ற முறையின்கீழ்நுகர்விற்கு உணவுப் பொருள் கிடைக்காததனல் கோதுமைக்கும் பாலுக்கும் தொடர்ச்சியான கேள்வி இருந்தது. காடுகள் சுத்திகரிக்கப்பட்டதனல் முக்கியமான மருந்து மூலிகைகளும் உள்நாட்டு வைத்தியமும் அழிந்தன. இப்பொழுது குடியேற்றவாசிகள் மேலைத்தேச வைத்தியத்தில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இதன் விளைவாக மேலைத்தேச மருந்துப் பொருட்களின் கேள்வியும் அதிகரித்தது. இத்தகைய மாற்றங்களின் விளைவாக உற்பத்திச் செலவு அதிகரித்ததுடன் நுகர்வும் அதிகரித்தது. நுகர்வுப் பொருட்களுக்குப் புதிய கேள்வி ஏற்பட்டது. இக் கேள்வியை வர்த்தக அடிப்படையிலேயே நிறைவு செய்ய வேண்டியிருந்தது. குடியேற்ற வாசிகளுக்கு 2.5 ஏக்கர் நிலம் அளிக்கப்பட்டது உண்மையாகும். ஆனல் எல்லா வசதிகளும் அளிக்கப்பட்ட போதிலும் அவற்றைப் பயன்படுத்துவதற்குக் குடியேற்றவாசிகள் வேறு ஊடகங்களை நாடவேண்டியிருந்தது. ஆகையால் அவர்கள் தமது நிலத்தில் நெல்லை விளைவித்து, தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நெல்லை விற்றுப் பணமாக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவர்களின் அதிகரித்த பொருட்தேவை பணத்தேவையை அதிகரிக்கச் செய்தது. கிராமீய வாழ்க்கையுடன் ஒப்பிடுகையில் ஒரு சில பொருட்களே தேவைப் பட்டதுடன் அவற்றின் விலைகளும் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருந்தன.

புதிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு வந்ததன் பின்னர் பல்வேறு புதிய நுகர்வுப் பொருட்களும் குடும்ப வரவு செலவுத் திட்டத்தினுள் புதுத் திருப்பத்தினை ஏற்படுத்தின. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று உற்பத்தியில் பொருளாதார மட்டத்தைப் பேணுவதற்கு விளைச்சலுக்கு உட்படுத்தப்பட்ட நிலம் செறிவுப் பயிர்ச்செய்கையை வேண்டியுள்ளது. இது உயர் ரக விதை நெல், இரசாயனப் பசளை போன்ற புதிய பண்ணை உள்ளீடுகளை நோக்கி மக்களை அசைய வைத்தது. இவற்றில் செலவு கூடுதலாக இருந்ததுடன், நிலம் அதிகரித்த முதலீட்டையும் வேண்டி நின்றது. இதனை நிதிப்படுத்துவதற்கு சிறு விவசாயிகளிடம் போதிய நிதி வளங்கள் இருக்கவில்லை. அவர்கள் நிறுவனங்களிடமிருந்தோ அல்லது தனியார் மூலங்களிலிருந்தோ கடன் பெற வேண்டியிருந்தது; கடன்களை வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டியிருந்தது. இம் முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற பயன் குறைவாக இருப்பின் கடன் பெற்றவர் தொடர்ந்தும் கடனில் மூழ்க வேண்டி ஏற்படும் நவீன தொழில் நுட்பத்தைப் பாவிக்க விரும்புகின்ற ஒரு சில விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் மூலதனம் மிக முக்கியமான ஓர் அம்சமாகும். கடனைப் பொறுத்தவரையிலும் நுகர்விற்கும் முதலீட்டிற்கும் இடையிலான தெரிவும் முக்கியம் பெறுகின்றது. சிறந்த நிகர வருமானத்தைப் பெறுவதற்கு அவனது செலவுகளை மேலும் குறைக்க வேண்டும். செலவில் அவனது மொத்த வருமானம் ரூபா 9,600/- ஆக இருந்த போது மொத்தச் செலவு ரூபா 8,575 ஆகவிருந்தது. ஆனல் அவனது மொத்த வருமானம் ரூபா 12,720 ஆக அதிகரித்தபோது அவனது செலவுகளும் ரூபா 11,450 ஆக அதிகரித்தது. மிளகாய், சோயா அவரை போன்றன சிறந்த வருமானத்தை அளித்த போதிலும் ஒரு சாதாரண குடியேற்றவாசியால் தனது பயிர்ச் செய்கை முறைகளை இலகுவாக மாற்ற முடியவில்லை. மிளகாய் மூலதனச் செறிவுமிக்க ஒரு பயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக இருப்பதனுல் குறைந்த வருமான வகுப்பினரின் சக்திக்கு உட்பட்டதாக இருக்கவில்லை. (நெல் மீதான முதலீட்டைவிடவும் மிளகாய் மீதான முதலீடு மூன்று மடங்கு அதிகமாகும்) சிறுபோகத்தில் (வறட்சிக் காலத்தில்) நீர்ப்பாசனத்தைக் குறைத்து, பணப் பயிர்களை உற்பத்தி செய்யுமாறு நிருவாகம் விவசாயிகளை ஊக்குவிக்கின்றது. ஆகையால் விவசாயிகள் பணப்பயிர்களை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. அல்லது இப் பயிர்களில் முதலீடு செய்யக்கூடியவர்களுக்குத் தமது நிலத்தை அளிக்க வேண்டியுள்ளது. இவ்வாருக வறிய விவசாயிகள் தமது நிலத்தின் மீதான உரிமையை இழக்க வேண்டியிருந்தது.

புதிய குடியேற்றப் பிராந்தியத்தில் விவசாயிகளின் நிலைமையை இது காட்டுகின்றது. விவசாயிகள் நெல்லைப் பிழைப்பூதியப் பயிராக அன்றி ஒரு பணப் பயிராக உற்பத்தி செய்கின்றனர். இது குறைந்த பிரதிபலனை அளிக்கின்றது. வர்த்தகப் பயிர்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டதனுல் நிலைமை மேலும் மோசமடைந்தது. குறிப்பாக, வறியோர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலான வருமான இடைவெளி விரிவடைந்தது. உற்பத்தி அலகுகளின் மிகை உற்பத்தி, இலாபகரமான வர்த்தக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திய வர்த்தகர்களையோ அல்லது தரகர்களையே சென்றடைந்தது. மேலும் பணப் பயிர்களின் விரிவாக்கம் பருவ ரீதியான சந்தைப்படுத்தல் மிகையைத் தோற்றுவித்தது. இது நகர்ப்புற வர்த்தகர்களைக் கவர்ந்தது. ஆகையால் பெருந்தொகையான வர்த்தகர்கள் குடியேற்றப் பகுதிகளில் கடைகளை ஆரம்பித்து, இலாபகரமான வர்த்தகத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கு குடியேற்றத் திட்டத்தின் ''வர்த்தக நிலங்களில்'' குடியேற அனுமதிக்கப்பட்டது. இவ்வாருக கிராமீய துறைக்குள் நகர்ப்புறச் சந்தை அமைப்பு புகுத்தப்பட்டது. இவ் வர்த்தக நிலத் துண்டுகள் அரசியல்வாதிகளின் விதந்துரைப்பின் கீழ் வழங்கப்பட்டதனுல், வர்த்தகர்கள் பலம் வாய்ந்த அரசியல் தலைவர்களாகவோ அல்லது முகவர்களாகவோ செயற்பட்டனர். 1978 இல் எச் 1 பிரதேசத்தில் 90 சதவீதமான கடைகள் குடியேற்றவாசிகளின் உரிமையாக விருந்தது. 1982 இல் இவற்றுள் 75 சதவீதம் வெளியூர் வர்த்தகர்களின்கைகளில் இருந்தன. ஆகையால் கிராமீய வர்த்தகர்களுக்கும் குடியேற்றவாசிகளுக்கும் இடையிலான உறவும் கிராமீய வர்த்தகர்களுக்கும் நகர்ப்புற மொத்த வர்த்தகர்களுக்கும் இடையிலான உறவும் மாற்றமடைந்தது. 1978 இல் இப்பிராந்தியத்தின் மொத்த வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் ரூபா 15,000 என மதிப்பிடப்பட்டது. 1982 இல் இது ரூபா 30,000 ஆக அதிகரித்தது. இப்பிராந்தியம் சந்தையில் அதிகரித்த அளவு தங்கியிருப்பதனை இந்த 100 சதவீத அதிகரிப்பு காட்டுகின்றது. குடியேற்ற வாசிகளின் நடத்தை ஒரு நகர்ப்புற நுகர்வோனின் நடத்தையைப் போன்று உள்ளது. குடியேற்றவாசிகள் நெல்லை உற்பத்தி செய்த போதிலும் அறுவடைக் காலத்தில் அரிசியைக் கொள்வனவு செய்கின்ற அளவிற்கு இவர்களின் சந்தைத் தங்கியிருப்பு மாறியுள்ளது. இப்பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு கடையும் ஒரு நாளைக்கு 30 கி. கி. அரிசியை விற்பனை செய்வதாகவும், கொழும்பு நுகர்வோர் விலையை விடவும் இங்கு விலை கூடுதலாக இருப்பதாகவும் 1982 இல் வர்த்தகத் துறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது.

இப்பிரதேசத்தில் வணிக வங்கிக் கிளைகளை நிறுவியதன் மூலம் வர்த்தக ரீதியான விவசாயத்திற்கு அத்தியாவசியமான நிறுவன ரீதியான கடன் அளிப்பதற்கு வசதி செய்யப்பட்டது. வளர்ச்சியடைந்து வருகின்ற ஒரு சுதந்திரமான சந்தை அமைப்பிற்குள், இக்கடனை உற்பத்தி நோக்கங்களுக்கு எவ்வாறு பாவிப்பது என்பது தொடர்பான போதிய அறிவினைக் கிராமங்களிலிருந்து வந்த, குறைந்த வருமான வகுப்பினைக் கொண்ட பெரும்பான்மையான விவசாயிகளால் பெறமுடியவில்லை. இதன் விளைவாக வருடாந்தம் கடனைத் திருப்பிச் செலுத்தாதோர் என்ற காரணத்தால் பெரும்பாலானோரின் கடன் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. 1983 இன் இறுதியில் எச் 1 பிரதேசத்தின் மொத்தக் குடியேற்றவாசிகளுள் 20 சதவீதமானோர் மாத்திரமே நிறுவன ரீதியான கடனைப் பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தனர். ஆகையால் நிறுவனக் கடன் கிடைக்காதோர் நிறுவன ரீதியற்ற கடனை நாடினர். இம்முறை சாராக்கடன் வர்த்தகத் துறையால் கட்டுப்படுத்தப்பட்டது. (குடியேற்ற வாசிகளின் உற்பத்தியையும் சந்தைப்படுத்தலையும் கடனுடன் இணைத்தனர்) உதாரணமாக எச் 1 பிராந்தியத்தில் குடியேற்றவாசிகளின் நுகர்வுப் பொருட்கள் கடனுக்கு வழங்கப்பட்டன. இக்கடனைக் குடியேற்ற வாசிகள் அறுவடையின் பின்னர் உற்பத்திப் பொருளின் வடிவில் திருப்பிச் செலுத்த வேண்டும். ஏறக்குறைய 90 சதவீதமான வர்த்தகர்கள் இதில் ஈடுபட்டனர். பணப் பயிர்ச்செய்கையின் விரிவாக்கத்துடன் இக் கடன் ஏற்பாடு மேலும் விரிவடைந்தது. இதன் கீழ் விவசாயிகள் அறுவடைக்கு முன்னரே தமது விளைபொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டியிருந்தது. இம்முறையின் கீழ் அறுவடையின் பின்னர் விவசாயிகள் தமது விளைச்சலை உடனடியாக விற்பனை செய்தனர். ஆகவே அறுவடைக்காலச் செலவினைச் சரிக்கட்டும் வகையில் தமது விளைச்சலை ஈடுவைத்தனர். 75 சதவீதமான வர்த்தகர்கள் ரூபா 291,550 அளவிற்கு முற்பணமாக வழங்கியதாக 1982இல் வர்த்தகர்கள் தொடர்பாக மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு காட்டுகின்றது. ஒரு புசல் நெல்லின் சராசரிச் சந்தை விலை ரூபா 65 ஆக இருக்கையில் ரூபா 38 - 40 விலையில் வர்த்தகர்கள் நெல்லைப்பெற்றனர். இதன் விளைவாகக் குடியேற்ற வாசிகள் கடனைச் செலுத்தியதன் பின்னர் மிகச் சிறிய இலாபத்தைப் பெற்றதுடன், வர்த்தகர்கள் தாம் கழித்த கடனிலிருந்து 62 சதவீத வட்டியைப் பெற்றனர்.

பணப்பயிர்ச்செய்கை அறுவடையின்போது சந்தைப்படுத்தக்கூடிய மிகையைத் தோற்றுவிக்கின்றது. இதனை நகர்ப்புற மொத்த விற்பனையாளர்கள் கொள்வனவு செய்கின்றனர். அறுவடைக்கு முன்னர் நகர்ப்புற வர்த்தகர்கள் கிராம வர்த்தகர்களுக்கு முற்பணம் வழங்குகின்றனர். ஆகையால் தம்மிடமிருந்து முற்பணத்தையும், நுகர்வுப் பொருட்களையும் பெற்றுள்ள குடியேற்றவாசிகளிடமிருந்து கிராமிய வர்த்தகர்களுக்கு மிகக் குறைந்த விலையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும். பாதைகளின் அபிவிருத்தியினால் கிராமிய வர்த்தகர்களுக்கும், நகர்ப்புற மொத்த விற்பனவு வர்த்தகர்களுக்கும் இடையிலான நேரடி உறவு பலப்படுத்தப்பட்டது. பாதைகளின் வாயிலாக மொத்த விற்பனை வர்த்தகர்கள் இலகுவாகக் கிராமத்தை அடைந்தனர். 1981/82 சிறு போகத்தில் எச் 1 பிராந்தியத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பயிர்களுள் 80 சதவீதம் கிராமிய வர்த்தகர்களாலும், நகர்ப்புற மொத்த விற்பனை வர்த்தகர்களாலும் கொள்வனவு செய்யப்பட்டது. மேலும் இப்பயிர்களை உற்பத்தி செய்வதற்கு வர்த்தக மூலதனம் முதலீடு செய்யப்பட்டிருந்தது. ஒரு வர்த்தகர் சராசரி 4.3 ஏக்கர்களில் மிளகாய் விளைவித்த அதேவேளை ஒரு குடியேற்றவாசி சராசரி 1 ஏக்கரில் மாத்திரமே மிளகாய் விளைவித்தனர்.

(இ) குடியேற்றப் பிராந்தியத்திற்குரிய சமூகப்பொது முதலீடுகளாக இடம்பெற்ற அரசாங்க முதலீடும் அதனுடன் இணைந்த வகையிலான சிறந்த சந்தைப் போட்டியும் தனியார் வர்த்தகர்கள் தனியுரிமையின் அபிவிருத்திக்கு வழிவகுத்தது. ஆரம்பக் கட்டத்தில் பிரதான பங்கினை வகித்த முறையான சந்தைப் படுத்தல் அமைப்புக்களான கூட்டுறவுத் துறையும், சந்தைப்படுத்தற் திணைக்களமும் பலவீனமடைந்து பெயரளவில் மாத்திரமே இயங்கின.

விவசாய நடவடிக்கையின் ஒவ்வொரு அம்சத்திற்கும் நிறுவனங்களை அளிப்பதே எச். 1 பிராந்தியக் குடியேற்றத்தின் பின்னுள்ள அடிப்படைக் கொள்கையாகும். கூட்டுறவுத்துறை, சந்தைப்படுத்தற் திணைக்களம் என்பன தவிர மகாவலி அதிகார சபையினால் தனியாக ஏற்படுத்தப்பட்ட ஒரு தனி அலகு என்பனவும் நிறுவனரீதியான சந்தைப் படுத்தல் அமைப்பாகும்.

மகாவலித் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே கூட்டுறவுக் கடைகள் நுகர்வுப்பொருட்களைச் சந்தைப்படுத்துகின்ற பிரதான மூலங்களாக இயங்கின. இது மாத்திரமன்றிக் கூட்டுறவுக் கடைகள் விவசாயப் பொருட்களின் கொள்வனவாளர்களாகவும் விளங்கின. மேலும் இவை மக்கள் வங்கியுடன் இணைந்து நிறுவன ரீதியான கடனளிப்பிலும் பிரதான இடம் வகித்தன.

கூட்டுறவு முறையின் கீழ் மூன்று கிராமிய வங்கிக் கிளைகள் இருந்தன. இவை விவசாயிகளுக்கு மாத்திரம் கடனளிக்கின்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. கிராமிய வங்கி, கூட்டுறவு வங்கி என்பவற்றிலிருந்தும், தனித்த வகையிலும் மக்கள் வங்கி கடன் விஸ்தரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதன் விளைவாகக் கிராமிய வங்கிகளின் வருமானம் குறைந்ததுடன், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் மக்கள் வங்கிக்கும் இடையிலான உறவும் முறிவடைந்தது. கூட்டுறவுக் கடைகளுக்கு அளிக்கப்பட்ட மேலதிகப் பற்று குறைக்கப்பட்டது. தாய்ச் சங்கத்தில் போதிய நிதி இன்மையாலும், கூட்டுறவுச் சில்லறை விற்பனை நிலைய முகாமையாளர்களின் திறமையின்மை, ஊழல் என்பனவற்றாலும் கூட்டுறவு சங்கங்களின் கொள்வனவுச் சக்தி வீழ்ச்சியடைந்தது. கூட்டுறவு அமைப்பு இடர்களை அனுபவித்த வேளையில் 1977 இல் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதனால் தனியார்துறை வர்த்தகர்கள் கூட்டுறவுத் துறையுடன் சுதந்திரமாகப் போட்டியிட அனுமதி அளிக்கப்பட்டது. இது கூட்டுறவுத் துறையை முரணான வழியில் பாதித்தது. நுகர்வுப் பொருட்களை நிரம்பல் செய்வதில் 12 கூட்டுறவுச் சில்லறைக் கடைகளின் சந்தைப்படுத்தல் பங்களிப்பு பின்வரும் காரணங்களின் விளைவாக வீழ்ச்சியடைந்தது. இந்தப் பிரதேசத்தில் விவசாயக் குடும்பங்களைக் குடியேற்றி ஒரு வருடத்தின் பின்னர் (1978 இல்) மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இதனை தெரிவிக்கின்றது.

(1) கூட்டுறவுக் கடைகளில் தேவையான பொருட்களை விற்பனைக்கு இன்மை.

(2) கூட்டுறவுக் கடைகளின் விலைகளும் திறந்த சந்தை விலைகளும் ஒன்றாக இருந்தமை.

(3) கடன் வசதி இன்மை; இதன் விளைவாக நுகர்வோருடன் தொடர்பினை ஏற்படுத்த முடியவில்லை.

பிரதான விவசாய உற்பத்திப் பொருளான நெல் கொள்வனவைப் பொறுத்த வரையிலும் கூட்டுறவுக் கடைகளுக்கும் தனியார் துறைக்கும் இடையே தீவிர போட்டி நிலவியது. கூட்டுறவுத் துறை வழங்கிய விலையை விடவும் கூடுதலான விலையைத் தனியார் துறையினரால் வழங்க முடியாததனால் நெல் கொள்வனவில் கூட்டுறவுத்துறை முன்னணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. கூட்டுறவு நெற் களஞ் சியங்களில் ஏற்பட்ட தாமதம், நெல்லைத் தரப்படுத்தியதனுல் சில சமயங்களில் நிராகரிக்கப் பட்டமை, கூட்டுறவு உத்தி யோகத்தரின் ஊழல் என்பவற் றின் விளைவாக விவசாயிகள் குறைந்த விலையில் கூட நெல்லைத் தனியார் துறையினருக்கு விற் பனை செய்தனர்.

தனியார் துறை வர்த்தகர் கள் விதையடிக்கின்ற நிலத்தில் வைத்து நெல்லைக் கொள்வனவு செய்து உடனடியாகப் பணத்தை வழங்கினர். விலையைப் பொறுத்த வரையிலும் கூடிய வித்தியாசம் இருக்கவில்லை. ஒரு புசல் நெல் லுக்குக் கூட்டுறவுத்துறை ரூபா 40 செலுத்திய அதேவேளை தனி யார் துறையினர் ரூபா 36 செலுத் தினர். 1982 அளவில் கூட்டுற வுத் துறையினரின் விவசாயப் பொருட் கொள்வனவு முழுமை யாகவே தடைப்பட்டது. கூட் டுறவு உத்தியோகத்தரின் திறமை யின்மை மாத்திரம் இதற்குக் காரணமாக இருக்கவில்லை. தனி யார் துறையினர் உத்தரவாத விலையிலும் கூடிய விலையை அளித் தமையும் ஒரு காரணமாகும். இவ்வாறாக 1978 இல் நெல் கொள்வனவில் முன்னணியிலி ருந்த கூட்டுறவுத்துறை 1982 அளவில் முழுமையாகவே ஸ்தம் பித நிலையை அடைந்தது. 1982 அளவில் நெற் சந்தைப்படுத்தற் சபையும் மகாவலி அதிகாரசபை யின் சந்தைப்படுத்தற் கிளையும் மாத்திரமே இத்துறையில் ஈடு பட்டிருந்த இரு நிறுவனங்களா கும். எனினும், பின்வரும் கார ணங்களின் விளைவாக இவற்றுக்கு தனியார் துறையுடன் போட்டி யிட முடியவில்லை. (அ) கவர்ச்சி கரமான விலைகளை அளிக்க இய லாமை. (ஆ) நிறுவனரீதியான துறைக்கு நெல்லை விற்கையில் விவசாயிகள் எதிர்நோக்கிய 'இடர்பாடுகள்'. 1981/82 சிறு போகத்தில் இவ்விரு நிறுவனங் களை விடவும் இருபது மடங்கு கூடுதலான மிளகாயை உள்ளூர் வர்த்தகர்கள் கொள்வனவு செய் தனர். வெளியூர் வர்த்தகர்கள் விவசாயிகளிடமிருந்து நேரடியா கக் கொள்வனவு செய்தமை தொடர்பாகச் சரியான தரவுகள் கிடைக்கப்பெறவில்லை; எனினும், இவர்களது கொள்வனவு நிறுவன ரீதியான துறையை விடவும் 25 மடங்கு அதிகமாகும் என மதிப் பிடலாம். தனியார் துறையினர் வழங்கிய விலைகளை விடவும் நிறு வன ரீதியான துறையின் விலைகள் கூடுதலாகவிருந்த போதிலும் இந் நிறுவனங்கள் தனியார் துறையினரின் முகவர்களாகச் செயற்படுவது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. 1981/82 சிறு போகத்தில் விவசாயிகளிட மிருந்து குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்ட மிள காய், விவசாயிகளின் பெயரில் கீழ் மகாவலி அதிகாரசபையின் சந்தைப்படுத்தற் கிளைக்கு விற்கப் பட்டிருந்தது.

இத்தகைய கொடுக்கல் வாங் கல்களில் சில அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக மகா வலி அதிகார சபையின் சந்தைப் படுத்தல் உதவியாளர்களால் அளிக்கப்பட்ட தகவலிலிருந்து அவதானிக்க முடிகின்றது. சந் தைப்படுத்தற் கிளைக்கு விவ சாயப் பொருட்கள் விவசாயிக ளால் விற்கப்படாது, வர்த்தகர் களால் விற்பனை செய்யப்பட்டது. திறந்த, போட்டிமிக்க ஒரு வர்த் தக முகாமையிலுள்ள நிறுவன ரீதியான துறையினரின் பங்கு மட் டுப்படுத்தப்பட்டிருப்பதனை இங்கு அவதானிக்க முடிகின்றது.

ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட காலகட்டத்தில் விவசாய இர சாயனப் பொருட்களுக்கும் பசளைக்கும் கேள்வி கூடுதலாக இருந்தது. மக்கள் வங்கியிட மிருந்து விவசாயக் கடன் பெற் றோருக்கு, வங்கி இப்பொருட்க ளைக் கூட்டுறவுக் கடைகளின் ஊடாக வழங்கியது. இதன் விளை வாக 12 கூட்டுறவுக் கடைகளில் இப்பொருட்களின் நாளாந்த விற்பனை ரூபா 17,000 அளவில் இருந்தது. இவ்விற்பனையைக் கழித்தால் கூட்டுறவுக் கடைக ளின் நாளாந்த விற்பனை ரூபா 225 ஆகவிருந்தது. இப்பிராந் தியத்தில் உள்ள ஒரு மிகச் சிறிய கடையின் விற்பனைக்கு இது சம மாகும். பெரும்பாலான சந்தர்ப் பங்களில் கூட்டுறவு ஊழியர் களுக்குச் சம்பளம் அளிப்பதற்குக் கூட இவ்வருமானம் போதியதாக இருக்கவில்லை எனக் கூட்டுறவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பில் மொத்தக் கொள்வனவிற்கு அளிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனக் காசோலை கள் பெரும்பாலான சந்தர்ப்பங்க ளில் திருப்பி அனுப்பப்பட்டன. ஆகையால் கொழும்பு மொத்த விற்பனையாளர்கள் கூட்டுறவுக் கடைகளை விடவும் தனியார் வர்த்தகர்கள் மீது கூடிய நம் பிக்கை வைத்தனர். 1978 இல் கல்னேவ நகரத்தில் கூட்டுறவு விற்பனை நிலையங்களும், சந்தைப் படுத்தல் திணைக்களமும் முன் னணி விற்பனை நிலையங்களாக விளங்கின. 1982 அளவில் அவற் றின் அந்தஸ்து குறைவடைந்தது. அவை தனியார் கடைகளை விட வும் அந்தஸ்து குறைந்தன வாகவே கருதப்பட்டன. கூட் டுறவுக் கடையின் நாளாந்த நுகர்வுப் பொருள் விற்பனை ரூபா 400 ஆகவும், சந்தைப்படுத்தற் திணைக்கள விற்பனையகத்தில் நாளாந்த விற்பனை ரூபா 250 ஆகவும் இருந்தது. ஊழியர்க ளின் வேதனத்துடன் இதனை ஒப்பிடுகையில் இவற்றைப் பரா மரிப்பது மிகவும் கடின காரிய மாகவிருந்தது.

முடிவுரை

ஒரு பெரிய நீர்ப்பாசன குடி யேற்றத்திட்டத்தின் நவீன முகா மையும், அபிவிருத்தியும் தொழி நுட்ப அணுகுமுறைகளிலும், கடன், விஸ்தரிப்புச் சேவைகள் போன்ற உள்ளீடுகளிலும் தங்கி யுள்ளது. தமது திணைக்களத் தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருந்தொகையான பணியக ஊழியர்களைக் கொண்ட அர சாங்க நிறுவனங்களிலும் இது தங்கியுள்ளது. எனினும் இப்பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யக ஊழியர்கள் தமது நகர் சார்ந்த விழுமியங்களுக்குப் பெயர் பெற்றவர்களாவர். புதிய நிறுவனங்களின் திறமை, அபிவிருத்தி என்பன தொடர்பாக இவர்கள் விவசாயிகளிடமிருந்து எதிர்பார்க்கின்ற திறமை, பணப் பயிர் உற்பத்தி, சந்தைப்படுத்தல் என்பவற்றின் மூலம் இப் பிராந்திய வருமானத்தில் கூடுதலான பங்கினையும் அரசியல் அதிகாரத்தையும், உள்ளூர் தலைமைத் தனத்தையும் ஏற்றுள்ள வர்த்தக முயற்சியாளர்களாலேயே உருவாக்கப்படுகின்றது.

நில உடைமையுடன் கூடிய குடும்பக் குடியிருப்புச் செய்முறையின் விளைவாகக் கிராமங்கள் சுதந்திரமான பொருளாதார சமூக அலகாகத் தொடர்ந்தும் இயங்க முடியவில்லை. கிராமங்கள் "தங்கியிருப்பு உற்பத்திக் குடும்ப அலகுகளாக" மாறின. இப்புதிய அமைப்பு பணத்தையும் கடனையும் பெருமளவிற்கு வேண்டி நின்றதால் பிழைப்பூதிய விவசாயம் வலுவிழந்தது. எனினும், இம் முதலாளித்துவ அமைப்புகள் முற்போக்கான விவசாயிகளும் வர்த்தகர்களும் தம்மைச் சிறப்பாக ஸ்தாபித்துக் கொள்ள முடிந்தது.

மறுபுறத்தில் குறைந்த வருமான வகுப்பினர் எருமைப் பாவனை, தரம் குறைந்த விதை நெல், பசளைப் பாவனையின்மை போன்ற பாரம்பரிய முறைகளைப் பின்பற்ற முற்படுகின்றனர். புதிய உள்ளீடுகளின் அதிகரித்த விலைகளின் விளைவாக உற்பத்திச் செலவு அதிகரித்தல், அதிகரித்த நுகர்வுச் செலவு, கடனைத் திருப்பிச் செலுத்தல் என்பவற்றின் விளைவாக பிழைப்பூதிய விவசாயிகளால் மிகை இலாபத்தைப் பெற முடியவில்லை. அவர்கள் பிழைப்பூதிய விவசாயத்தைப் பின்பற்ற முற்படுகின்றனர். ஒரு பலமான உழவர் விவசாயிகள் குழு எழுச்சியடையாததால் பணம் படைத்தவர்கள் நிலைமையை கட்டுப்படுத்த முயல்கின்றனர்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வொன்றும் மூன்று சிறுநிலத் துண்டுகளைக் கொண்டுள்ளன என ஆய்வு அறிக்கை காட்டியது. இரண்டு சதவீதமான பண்ணைகள் மாத்திரமே ஆறு நிலத் துண்டுகளைக் கொண்டிருந்தன. ஆகக் கூடிய நிலத் துண்டுகளின் எண்ணிக்கை 10 ஆகும். இந்நிலத் துண்டுகள் ஆங்காங்கே பரந்து அமைந்திருப்பது செயற்பாட்டுப் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது; நிலத்திற்கும் வீட்டிற்கும் இடையிலான தூரம் இதில் குறிப்பிடத்தக்கதாகும். ஆகக் குறைந்த சராசரித் தூரம் 15 மீற்றர்களாகும்; இத்தூரம் எத்தகைய செயற்பாட்டுப் பிரச்சினையையும் தோற்றுவிக்கவில்லை. வீட்டுக்கும் நிலத்திற்கும் இடையிலான ஆகக் கூடிய தூரம் 29.6 கி. மீற்றர்களாகவிருந்தது. வீட்டுக்கும் நிலத்துக்கும் இடையிலான தூரம் அதிகரித்ததற்கு ஏற்ப வயல் நிலங்கள் புறக்கணிக்கப்பட்டன.

பண்ணை நிலத் துண்டாடலின் இன்னொரு பிரதான அம்சம் நிலத்தின் உருவ அமைப்பாகும். துண்டாடல் அதிகரித்ததற்கு ஏற்ப நிலத்தின் அமைப்பு பல வழிகளில் குறுகியது. இதன் விளைவாக நிலத்தைப் பண்படுத்தல், மீள் நடுகை, வரிசையாக நடுதல், இரசாயனப் பாவனை போன்ற நவீன பயிர்ச்செய்கை முறைகளைக் கைக்கொள்வது கடினமாக விருந்தது.

காலி மாவட்டத்தின பண்ணை அமைப்பு தொடர்பாக இதுவரையிலும் ஆராயப்பட்ட அம்சங்களை ஏனைய இரு ஈரவலயப் பிரதேசங்களான கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கும் பொதுவானவையாகக் கொள்ளலாம். எனினும், இந்த ஆய்வு பெருமளவிற்கு ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட பிரதேசத்தின் நில அமைப்பிற்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பண்ணை அமைப்பு தொடர்பான அம்சத்தை விரிவாக ஆராயின் குத்தகை தொடர்பான பிரச்சினைகளையும் ஆராயலாம். இவை நிலத்தின் அளவையும் உற்பத்தி இயல்திறனையும் தீர்மானிப்பதில் முக்கிய இடம்வகிக்கின்றது.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யங்களில் சமூக வாசிப்பிற்குரிய விருப்பு கூடுதலாக விருக்கின்றது. பத்திரிகைகளைப் போலன்றி, வானொலி கேட்கின்ற பிரதான இடமாக வீடு விளங்குகின்றது. வானொலி வைத்திருப்போரின் எண்ணிக்கையும் வானொலி கேட்போரின் எண்ணிக்கையும் பத்திரிகைகளை விடவும் கூடுதலாகும்.

பத்திரிகை வாசிப்பதற்கும் வானொலி கேட்பதற்கும் உரிய பிரதான காரணம், மேலதிக கிராமச் செய்திகளைப் பெறுவதாகும். அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளைப் பெறுவது பத்திரிகை வாசிப்பதற்குரிய இரண்டாவது காரணமாக உள்ள அதேவேளை, வானொலியைப் பொறுத்தவரையிலும் பொழுது போக்கே பிரதான காரணமாகும். அபிவிருத்தி தொடர்பாகவும் இது பற்றிய செய்தி தொடர்பாகவும் சாதாரண கிராமத்தவர் காட்டுகின்ற விருப்பத்தினை இந்த அவதானம் தெளிவாகக் காட்டுகின்றது. பொதுவாக நோக்குமிடத்து, வெகுசன ஊடகம் சிறப்பாகப் பாவிக்கப்பட்டால், அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பணியை ஆற்றலாம். கல்வி தொடர்பாக வெகுசன ஊடகத்தின் பங்களிப்பு அங்கீகரிக்கப்படுதல் மிக முக்கியமாகும்.

விஸ்தரிப்பு முகவர்களால் அளிக்கப்படுகின்ற வெகுசனத் தொடர்பு பற்றிய அறிவு இருந்த போதிலும் அவற்றை வைத்திருப்பதும் அவற்றின் வாசிப்பும் குறைவாகும். இவற்றின் விநியோகம், விடயங்களின் முன்வைப்பு, வாசிப்புப் பழக்கம் என்பன இந்த இடைவெளிக்குக் காரணமாக விருக்கலாம். பொதுவாக சஞ்சிகை வாசிப்புப் பழக்கம் இல்லை எனலாம். எனினும், வாராந்தப் பத்திரிகைகள் வேகமாகப் பிரபல்யமடைந்து வருகின்றன. கல்வி விகிதாசார மட்டம் கூடுதலாகவிருந்தபோதிலும், பெரும்பான்மையானோர் ஆரம்பக் கல்வியை மாத்திரம் பெற்றிருப்பது வாசிப்புப் பழக்கத்தைப் பாதிக்கின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசியின் சில்லறைச் சந்தையில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்கள்

1983/84 பெரும் போகத்தில் நெல் உற்பத்தி 6.5 கோடி புசல்களாக வீழ்ச்சியடைந்தது; 1971 ன் பின்னர் மகா போகத்திற்குப் பதிவுசெய்யப்பட்ட ஆகக் குறைந்த உற்பத்தி மட்டம் இதுவாகும். 1984 ஆரம்பப் பகுதியில் நிலவிய சாதகமற்ற காலநிலையே இதற்குக் காரணமாகும். 2 கோடி 40 லட்சம் புசல்களால் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது; இது முன்னைய மகா போக உற்பத்தியில் ¼ பங்காகும். 1984 இன் உற்பத்தி வீழ்ச்சியை நிவர்த்திப்பதற்கு சிறு போகத்தில் பெறப்பட்ட அதிகரித்த உற்பத்தி உதவிய போதிலும், 1983/84 மகா போகத்தில் பாதிப்படைந்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ள 15 சதவீதத்தையும் சமாளிப்பது கடினமாகும். உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் 1984 இல் நெற் சந்தைப் படுத்தற் சபையின் நெற் கொள்வனவு 50 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை இதன் ஒரு பிரதான விளைவாகும். கொள்வனவுக்கு குறைந்த அளவிலான நெல் கிடைக்கின்ற அதேவேளை, வட பிரதேச மாவட்டங்களில் நிலவுகின்ற ஸ்தீரமற்ற நிலைமையின் விளைவாக நெற் சந்தைப்படுத்தற் சபையினால் தனது வழமையான கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. மேலும் திறந்த சந்தையில் நெல்லின் விலை நெ.ச.ச உத்தரவாத விலையை விடவும் கூடுதலாகவிருந்தது; 1984 இல் ஒரு புசலுக்கான உத்தரவாத விலை ரூ. 62/50 ஆகும்; திறந்த சந்தையில் ஒரு புசல் நெல்லின் விலை ரூபா 78 ஆகவிருந்தது. 1984 இன் முதலரைப் பகுதியில் திறந்த சந்தை விலை உத்தரவாத விலையை விடவும் ரூபா 15/- கூடுதலாகவிருந்தது; வருடத்தின் பின்னரைப் பாகத்தில் இது ரூபா 16.50 ஆக அதிகரித்தது. 1984 இல் திறந்த சந்தை விலை அதிகரித்த போதிலும் உற்பத்திச் செலவு (பிரதான உற்பத்தி மாவட்டங்களில் உற்பத்தி செலவு அதிகரிப்பு 15 சதவீதமாக விருந்தது) அதிகரித்ததனால் உற்பத்தியாளரின் இலாபம் குறைவடைந்தது. 1983 மார்ச் மாதத்திலிருந்து ஒரு புசல் ரூபா 62.50 ஆக நிலையாகவிருந்த நெல்லின் உத்தரவாத விலையை அதிகரிப்பதற்குரிய அவசியத்தை இது உணர்த்தியது. மேலும் இவ் விலையின் விளைவாக நெற் சந்தைப்படுத்தற் சபையினால் தனியார் துறைக் கொள்வனவாளருடன் போட்டியிட முடியாத நிலையும் நிலவுகின்றது.

சில நெல் உற்பத்திப் பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு சென்ற வருடம் மகா போகத்தில் குறைந்த அளவு நெல் கொள்வனவு செய்யப்பட்டமைக்குரிய ஒரு காரணமாகும். அரசாங்க அறிவுறுத்தலின்படி கூட்டுறவுக் கடைகள், விவசாய சேவை நிலையம் என்பவற்றை நெற் சந்தைப்படுத்தற் சபையின் முகவர்களாகப் பாவிப்பது நிறுத்தப்பட்டமையும் கொள்வனவு குறைந்தமைக்குரிய இன்னொரு காரணமாகும்.

1984 பெப்ரவரி நடுப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் விளைவாக 1983/84 மகா போகத்தில் பெருமளவிற்குப் பயிர் சேதமடைந்தது. இதனால் பாதிக்கப்பட்ட அம்பாறை, திருகோணமலை அனுராதபுரம், பொலனறுவை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் நெற் சந்தைப்படுத்தற் சபையின் மொத்த நெல் கொள்வளவில் ஏறக்குறைய 60 சதவீதத்தைக் கொண்டுள்ளன. வெள்ளப் பெருக்கின் விளைவாக இப் பிரதேசங்களின் அரிசி -ஆலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

1983/84 மகா போகத்தில் மொத்த நெல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, எல்லா ரக நெல்லினதும் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு, சிறந்த சந்தைப் படுத்தல் நடவடிக்கைகளில் நிலவிய தடைகள் என்பவற்றின் விளைவாக 1984 இன் பிற் பாகத்தில் அரிசியின் சில்லறை விலைகள் அதிகரிப்பதற்கான குறிகள் தென்பட்டன. எனினும், உணவு ஆணையாளர் திணைக்களம், நெ.ச.ச. என்பன மொத்த விற்பனைக்கு அரிசி இருப்பினை வினியோகிக்கின்ற திறமை, தனியார் துறைக்குப் போட்டியாக சில்லறை விலையில் அரிசி விற்பனை செய்கின்ற கூட்டுறவுக் கடைகள், நெ.ச.ச. விற்பனை நிலையங்கள் என்பவற்றின் திறமை ஆகிய காரணிகளால் இவ்விலை அதிகரிப்பு பாதிக்கப்படலாம். நெற் சந்தைப்படுத்தும் சபை அதன் தடையற்ற இயக்கத்திற்கு உணவு ஆணையாளர் திணைக்களத்தில் தங்கியுள்ளது. உணவு முத்திரைத் திட்டத்திற்குத் தேவையான அரிசியை வழங்குவதற்கு உணவு ஆணையாளர் திணைக்களம் முறையான இருப்பினை வைத்திருக்க வேண்டி இருப்பதனால் நெற் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து இத் திணைக்களத்திற்குத் தொடர்ச்சியான அரிசி நிரம்பல் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். நெற் கொள்வளவு, அரிசியைச் சந்தைப்படுத்தல் என்பவற்றைப் பொறுத்தவரையிலும் இவ்விரு நிறுவனங்களுக்கும் இடையில் நெருங்கிய ஒன்றிணைப்பு அவசியமாகும். இவற்றின் பணிகளை எல்லாம் ஒன்றிணைத்து ஒரு தனி நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டால் திறமையான செயற்பாட்டை உறுதிப்படுத்தலாம் என மத்திய வங்கி ஆலோசனை கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு

ஒபெக் - நிச்சயமற்ற எதிர்காலம்

சிறந்த ரக சுத்திகரிக்கப்படாத எண்ணெய் விலைகளைக் குறைப்பதற்கு அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஒபெக் எண்ணெய் அமைச்சர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. மிகையான நிரம்பல், மோசமான கேள்வி என்பவற்றுக்கு மத்தியில் இவ்விலைக் குறைப்பு தவிர்க்க இயலாததாகும். ஒரு பீப்பாய் 29 டொலர் என்ற காரியசாத்தியமற்ற உயர் விலை மட்டத்தைப் பேணுவதற்கு பெற்ரோலிய ஏற்றுமதி நாடுகள் தாபனம் எடுத்த முயற்சிகளின் விளைவே அதிகரித்த எண்ணெய் நிரம்பலாகும்.. ஒரு 'கார்டல்' அமைப்பாக இயங்குவதன் மூலம் ஒபெக் இதனைச் சாதிக்க முயற்சிக்கின்றது; அதாவது சமுகமான இணக்கத்தின் மூலம் உற்பத்தியை மட்டுப்படுத்தி, எண்ணெய்ப் பற்றுக் குறையைத் தோற்றுவிப்பதே இதுவாகும். மிகை உற்பத்தி ஒபெக் நாடுகளின் தற்போதைய வெளியீட்டுக்குப் பெரும்பாலும் சமமாக இருப்பதனுல் இது காரிய சாத்தியமாவதாகத் தென்படவில்லை. அங்கத்துவ நாடுகள் தமது நன்மை கருதி, மேலதிக எண்ணெயைக் களவாக விற்பனை செய்து சந்தையில் தமது பங்கினை அதிகரித்துக்கொள்ளவும் உடனடியாக தேவைப்பட்ட வருமானங்களைப்பெறவும் முயன்றன. ஒழுக்காறு குலைந்து விலைகள் வீழ்ச்சியடைவது தவிர்க்க முடியாததாகும்.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட வலுப் பாதுகாப்புக் கொள்கை எண்ணெய்க் கேள்வியை மந்தப்படுத்திய ஒரு காரணியாகும்; ஒபெக் நாடுகளின் மிகை நிரம்பலுக்கு வேறு காரணங்களும் உண்டு. ஐரோப்பாவில் தீவிர குளிரின் விளைவாகக் கேள்வி நிலைமை மீட்சி பெற்ருலும், இக்கேள்வி முழுமையாகவே பிரித்தானிய, நோர்வீஜிய எண்ணெயால் நிறைவு செய்யப்படும் என சந்தை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். 1974 இற்கு முன்னர் நிலவிய எண்ணெய் விலை மட்டத்திற்கு விலைகளை வீழ்த்தக் கூடிய ஒரு 'விலைப்போர்' தொடர்பாக சவூதி அரேபிய எண்ணெய் அமைச்சர் ஷேக் யமானி பகிரங்கமாக எச்சரிக்கை செய்துள்ளார். தொடர்ச்சியான மிகை எண்ணெய் நிரம்பலின் விளைவான ஒரு 'விலைப்போர்' 1981 அளவிலிருந்தே உலக எண்ணெய்ச் சந்தையின் ஒரு பண்பாக விளங்கியது.

நிரம்பல் கோட்டா, கட்டுப்பாட்டு விலை என்பவற்றை மீறுகின்ற தனது அங்கத்தவர்களைக் கட்டுப்படுத்துவது இயலாமல் இருக்கும் அதே வேளையில், தற்போதைய சந்தை நிலைமைகளையும் தன்னுல் கட்டுப்படுத்த இயலாது என்பதனை ஒபெக் நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது என்பதனை சிறந்த மசகு எண்ணெய் விலைகளைக் குறைப்பதற்கு அது எடுத்த தீர்மானம் எடுத்துக் காட்டுகிறது. இதன் விளைவாகக் குறித்த விலையிலும் குறைவாக உற்பத்தியாளர்கள் எண்ணெய் விற்பனை செய்வதனை எக்காரணியும் தடுக்க இயலாது. ஒபெக்கின் அண்மைக் காலத் தீர்மானம் தம்மைக் கட்டுப்படுத்தாது என லிபியா, அல்ஜீரியா, ஈரான், கபோன் ஆகிய நான்கு நாடுகளும் ஏற்கனவே அறிவித்துள்ளன. மெல்லிய, கனரக எண்ணெய் விலைகளில் நிலவும் வித்தியாசங்களைக் குறைப்பதற்கும், அங்கத்துவ நாடுகளின் நிரம்பல்களை சுதந்திரமாகப் பரீட்சிப்பதற்கும் உரிய ஒரு திட்டத்தை ஒபெக் ஜனவரி முற்பகுதியில் அறிவித்தது. இதனை நைஜீரியாவும் அல்ஜீரியாவும் எதிர்த்தன.

ஒபெக்கினுள் நிலவுகின்ற இம்முரண்பட்ட இலக்குகளின் விளைவாக நிலைமை மேலும் மோசமாகளாம். மேலும், விலைகள் வீழ்ச்சியடையும் என்ற எதிர்பார்ப்பினுல் உற்பத்தியாளர்கள் நடைமுறை விலைகளில் இயன்ற அளவு பெற்ரோலியத்தை விற்பனை செய்ய முன்வருவர்; மிகை இருப்பினை உடையவர்களும் அவற்றைச் சந்தையில் குவிப்பர்; இலாப நோக்கமே இதற்குரிய பிரதான காரணமாகும்.

1980 இல் 27,500 கோடி டொலர்களாகவிருந்த ஒபெக் அங்கத்தவர்களின் கூட்டு வருமானம், 1984 இல் 15,000 கோடி டொலர்களாக வீழ்ச்சியடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1981 இல் 9100 கோடி டொலர்களை மொத்த நடைமுறைக் கணக்குச் சென்மதி நிலுவையாகக் கொண்டிருந்த எட்டு வறிய ஒபெக் நாடுகளினதும் மிகை, 1984 இன் இறுதியில் இல்லாமலாகி, அவை 10,000 கோடி டொலர்களுக்கும் கூடுதலான வெளிநாட்டுக் கடனை வைத்திருந்தன. ஒபெக் நாடுகளின் எதிர்காலம் ஒளிமயமானதாக தென்படவில்லை. முற்கூற்ருக கூறமுடியாத விளைவுகளுடன் கூடிய ஒரு பாரிய நெருக்கடி ஒபெக்கினுள் உருவாகிக் கொண்டிருக்கின்றது. எண்ணெய்க் 'கார்டலின்' வீழ்ச்சி, எண்ணெய் இறக்குமதி நாடுகளின் குறைந்த இறக்குமதி பட்டியல் எனப் பொருள்படும்.

ஒபெக்கில் ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய மூன்று கண்டங்களைச் சேர்ந்த 13 அங்கத்துவ நாடுகள் அடங்கியுள்ளன. 1960 ம் ஆண்டு செப்டெம்பர் 14 ம் திகதி உருவாக்கப்பட்டபோது அதில் ஐந்து ஸ்தாபக அங்கத்துவ நாடுகள் - ஈரான், ஈராக், குவைத், சவுதி அரேபியா, வெனிசூலா - இருந்தன. பின்னர் கட்டார், இந்தோனீஷியா, லிபியா, அபூதாபி (இது 1974 ல் ஐக்கிய அரபு எமிரேட்டுகளுடன் இணைந்தது), அல்ஜீரியா, நைஜீரியா, ஈக்குவடோர், கபோன் ஆகிய நாடுகள் முழு அங்கத்துவ நாடுகளாக ஒபெக் ஸ்தாபனத்தில் சேர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக் காட்சிப் பெட்டிகளின் இறக்குமதி வீழ்ச்சி

1979 இல் இலங்கையில் முதற் தடவையாகத் தொலைக் காட்சி அறிமுகப்படுத்தப்பட்ட தன் பின்னர் தபால், தொலைத் தொடர்புத் திணைக்களத்தால் மொத்தம் 2,766 தொலைக்காட்சி உத்தரவுப் பத்திரங்கள் வினியோகிக்கப்பட்டுள்ளன. 1980 இல் இந்த எண்ணிக்கை 27,618 ஆகவும், 1984 இல் 415,308 ஆகவும் அதிகரித்தது. இந்த ஆறு வருடங்களுக்குள் வருடாந்தம் சராசரியாக 70,000 உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இறக்குமதிப் புள்ளி விபரங்களை ஒரு கணிப்பீடாகக் கொண்டால், 1984 இல் தொலைக்காட்சிகளுக்கான கேள்வி சென்ற இரு வருடங்களின் கேள்வியை விடவும் 1/3 பங்கிற்குக் குறைவாக விருந்தது. 1978 இல் 2000 ஆக விருந்த தொலைக் காட்சிப் பெட்டி இறக்குமதி, 1983 இல் 146,544 ஆக அதிகரித்தது. 1982 இல் இறக்குமதி எண்ணிக்கை இதனை விடச் சிறிதளவு குறைவாகவிருந்த துடன், இக்காலம் வரையிலும் ஒரு சாதனையாகவும் விளங்கியது. தீர்வையற்ற கடைத் தொகுதிக்கு விஜயம் செய்த இந்தியக் கொள்வனவாளர்களிடமிருந்தே கூடிய கேள்வி ஏற்பட்டதாக இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர். ஆனால், 1983 இன் பின்னர் இந்தியக் கொள்வனவாளர்களின் எண்ணிக்கை தீவிரமாக வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக 1984 இல் 46,033 தொலைக் காட்சிப் பெட்டிகள் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டதாக சுங்கப் பதிவுகள் காட்டுகின்றன.

இந்தியாவில் வர்ணத் தொலைகாட்சி அறிமுகம் செய்யப்படும் வரையிலும் இருபது வருடங்களாக அங்கு கறுப்பு வெள்ளைத் தொலைக் காட்சிப் பெட்டிகளுக்கே கூடிய கேள்வி இருந்தது. ஆனால், இலங்கையைப் பொறுத் தவரையிலும் ஆரம்பத்திலிருந்தே கறுப்பு – வெள்ளை, வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளுக்குக் கேள்வி இருந்தது.

கறுப்பு - வெள்ளைத் தொலைகாட்சி தொடர்பான விருப்பு 1981 அளவில் வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளுக்கு மாறியதனையும் மீண்டும் 1982 இல் கறுப்பு – வெள்ளைத் தொலைக் காட்சிப் பெட்டிகள் இறக்குமதியில் 65 சதவீதமாக அதிகரித்த அதேவேளை, வர்ணப் பெட்டிகளின் இறக்குமதி 35 சதவீதமாகக் குறைவு அடைவதனையும் இறக்குமதிப் புள்ளி விபரங்களிலிருந்து அறிய முடிகின்றது. 1983 இல் 62 சதவீதம் கறுப்பு - வெள்ளைப் பெட்டிகளாகவும், 38 சதவீதம் வர்ணப் பெட்டிகளாகவும் இருந்தன. எனினும், 1984 இல் இப்போக்கில் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் ஏற்படுகின்றது; இவ்வருடம் கறுப்பு - வெள்ளை பெட்டிகளை விடவும் வர்ணப் பெட்டிகளின் இறக்குமதி அதிகரித்தது; இவ்வருடம் வர்ணப் பெட்டிகள் 69 சதவீதமும், வெள்ளைப் பெட்டிகள் 39 சதவீதமுமாக இருந்தன.

இக்காலப் பகுதியில் தொலைக் காட்சிப் பெட்டிகளின் நிரம்பல் மூலங்களும் மாற்றமடைந்தன. ஜப்பான், இலங்கையின் முன்னணித் தொலைக்காட்சிப் பெட்டி ஏற்றுமதி நாடாக விளங்கியது; 1984 அளவில் ஜப்பானின் பங்கு 50 சதவீதத்திற்கும் குறைவாக விருந்தது; 1984 இல் தென் கொரியா இலங்கையின் இரண்டாவது பாரிய தொலைக்காட்சிப் பெட்டி ஏற்றுமதி நாடாக (21.2%) மாறியது; சிங்கப்பூர் மூன்றாவது (12%) இடத்தைப் பெற்றது. இதற்கு முன்னர் ஜப்பான் 69 சதவீதத்தையும், சிங்கப்பூர் 13 சதவீதத்தையும், தாய்வான் 6 சதவீதத்தையும் ஏற்றுமதி செய்தன.

1978 இல் குறைந்த அளவான 10 லட்சம் ரூபாவாக இருந்த தொலைக் காட்சிப் பெட்டிகளின் இறக்குமதிப் பெறுமானம், 1982 இல் ரூபா 39.8 கோடியாக அதிகரித்தது. அன்றிலிருந்து இத் தொகை வீழ்ச்சி அடையத் துவங்கியது. 1981 இல் இது ரூபா 27.1 கோடியாகவும், 1984 இல் 16.1 கோடியாகவும் வீழ்ச்சியடைந்தது. 1982, 1983, 1984 ஆம் வருடங்களில் தொலைக் காட்சிப் பெட்டிகள் இறக்குமதி மீதான மொத்தச் செலவில் 60 - 70 சதவீதம் வர்ணப் பெட்டிகளின் இறக்குமதிக்கே செலவிடப்பட்டது. வர்ணப் பெட்டிகளின் அதிகரித்த விலைகளே இதற்குக் காரணமாகவிருக்கலாம்.

தொலைக் காட்சிப் பெட்டிகளுக்கும், வானொலிகளுக்கும் உத்தரவுப்பத்திரங்களை வினியோகிக்கின்ற அதிகாரத்தைக் கொண்டுள்ளதால், தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின்படி 1984 இறுதியில் 415,308 தொலைத் காட்சிப் பெட்டிகளுக்கு உத்தரவுப் பத்திரங்கள் வினியோகிக்கப்பட்டுள்ளன. கூடிய தொகையானோர் இன்னும் உத்தரவுப் பத்திரங்களைப் பெறவுள்ளனர் எனத் திணைக்களம் சந்தேகிக்கின்றது. நாட்டில் உள்ள தொலைக் காட்சிப் பெட்டிகளின் சரியான எண்ணிக்கை பற்றிய பதிவு இன்மையால் உத்தரவுப் பத்திரம் பெறாத பெட்டிகளின் எண்ணிக்கையைச் சரியாகக் குறிப்பிட முடியாதுள்ளது. 1978 - 1984 இடைப்பட்ட ஏழு வருடங்களுக்குள் 457,770 பெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டதாக இறக்குமதித் தரவுகள் தெரிவிக்கின்றன. இதற்கு மேலாக வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த இலங்கையர்கள் ஏறக்குறைய 45,000 தொலைக்

(22-ம் பக்கம் பார்க்க)

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய நாணய அலகும் விசேட எடுப்பனவு உரிமைகளும்.

ஓர் ஒப்பீட்டுக் கண்ணோட்டம்

அ. சேனாதிராஜா

1984 மார்ச்சில் ஐரோப்பிய நாணய அலகு, அமுலுக்குவந்து ஐந்து வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. இவ் ஆய்வுக் கட்டுரையில் மக்கள் வங்கியைச் சேர்ந்த அ. சேனாதிராஜா, இக் கணக்கு அலகு, அது உருவாக்கப்பட்ட குறிக்கோள்களை எவ்வளவு தூரம் நிறைவேற்றியுள்ளது என்பதுபற்றி ஆராய்கிறார். சர்வதேச கணக்கு அலகுகளான விசேட எடுப்பனவு உரிமை, ஐரோப்பிய நாணய அலகு என்பவற்றின் மீதான அதிகரித்துவரும் ஆர்வம்பற்றியும், அவற்றின் பெறுபேறுகள் பற்றியும் விரிவாக இதில் ஆராயப்படுகிறது. மேலும் உறுதியற்ற நாணயங்களினால் உருவாக்கப்பட்ட நாணயமாற்று அபாயங்களை இச் சர்வதேச கணக்கு அலகுகள் குறைக்கின்றன என கட்டுரையாளர் நிரூபிக்கின்றார்.

சர்வதேச நாணய முறைமை எதிர்கொண்ட பிரச்சினைகளாலும், நாணய மாற்றுவீதத்தில் ஒரு உறுதிப்பாட்டினைப் பேண வேண்டிய தேவையினாலும், சர்வதேச ரீதியாக பொருளாதார முயற்சிகளின் விரிவாக்கலுக்கான போதியளவு திரவத்தன்மையை வழங்குவதற்காகவும் 1969 ல் சர்வதேச நாணய நிதியின் விசேட எடுப்பனவு உரிமைகள் (எஸ். டி. ஆர்.) உருவாக்கப்பட்டன. பத்து வருடங்களுக்குப் பின்பு, ஐரோப்பிய பொருளாதார சமூக அங்கத்தவர்களுக்கும் இதேபோன்ற சூழ்நிலைகள் உருவாகி, ஐரோப்பிய நாணய முறைமை (ஈ. எம். எஸ்.) என்ற அமைப்புள்ள ஒரு பொது நாணய அலகு உருவாக வழிவகுத்தன.

1978 ஜூலையில் இடம்பெற்ற ஐரோப்பிய கவுன்சிலின் கூட்டத்தில், ஐரோப்பிய நாணய முறைமையினை உருவாக்கி, அதனூடாக ஐரோப்பிய சமூகங்களிலுள்ள நாடுகளுக்கிடையே நெருங்கிய நாணய ஒத்துழைப்பினை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்ததற்கமைய, 1979 மார்ச் 13 ந் திகதியில் இந்த ஐரோப்பிய நாணய முறைமை (ஈ.எம்.எஸ்.) நடைமுறைக்கு வந்தது. முன்னைய தசாப்தத்தில் உருவாகிய தளம்பல் வீதங்களினால், நாணயமாற்றுவீத அசைவுகளில் ஏற்பட்ட மிகையான உறுதியற்ற தன்மைபற்றிய அக்கறை அதிகரித்துக்கொண்டு வந்தது. இந்தச் சூழ்நிலைக்கு ஒரு பரிகாரமாக ஐரோப்பிய நாணய முறைமை உருவாக்கம் அமைந்தது. 1984 மார்ச்சில் இந்த ஐரோப்பிய நாணய முறைமை 5 வருடங்களை நிறைவு செய்துள்ளது. ஐரோப்பிய சமூகத்துக்கிடையே மேலதிக பொருளாதார ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி நாணய மாற்றுவீத உறுதி நிலையில் ஓர் உயர் நிலையை அடைதல் என்ற முதன்மையான நோக்கத்தினை இந் நாணய முறைமை முற்று முழுதாக நிறைவேற்றியுள்ளதா? என்பதை ஆராய்வது பொருத்தமானதாகும்.

ஐரோப்பிய நாணய முறைமையானது, பரந்த நோக்கில் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் பங்குபற்றும் நாடுகளின் நாணயங்களிடையே ஒரு குறிப்பிட்டளவு நாணய மாற்றுவீத ஸ்திரத்தன்மையைக் கொண்டு வந்தது என்பதில் சந்தேகம் இல்லை. ஐரோப்பிய நாணய முறைமையில் அளிக்கப்பட்ட இன்னொரு குறிப்பிடத்தக்க பங்கு யாதெனில், அது ஐரோப்பிய நாணய அலகு (ஈ.சி.யு.) என்ற முக்கிய கலப்பு நாணய அலகினை அறிமுகம் செய்தது. ஐரோப்பிய நாணய அலகிற்கும், விசேட எடுப்பனவு உரிமைகளுக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகள் பற்றி சமீப காலமாக நோக்கப்பட்டு வந்துள்ளது.

விசேட எடுப்பனவு உரிமை - ஐரோப்பிய நாணய அலகு: உருவாக்கமும் கட்டமைப்பும்.

1960 களில் சர்வதேச திரவத்தன்மையில் நிலவிவந்த தன்னிறைவின்மை பற்றிய முக்கிய கலந்துரையாடலின் விளைவாக, அங்கத்துவ நாடுகளின் ஒதுக்கீடுகளை நிரப்பு செய்வதற்காக, ஒரு சர்வதேச ஒதுக்குச் சொத்தாக இவ் விசேட எடுப்பனவு உரிமைகள் (எஸ். டி. ஆர்.) சர்வதேச நாணய நிதியினால் 1969 ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. முன்னைய 20 வருடங்களில் நிலவிய உலகப் பொருளாதாரத்தின் பாதிக்கப்பட்ட வளர்ச்சியின் மத்தியிலும், சர்வதேச வர்த்தகத்தின் துரித வளர்ச்சியின் மத்தியிலும் உறுதியானதும், நாணயங்களுக்குச் செப்பம் செய்யக்கூடிய பெறுமதிகளைக் கொடுக்கக்கூடியதுமான பிரெட்டன்வூட்ஸ் திட்டம் மிகவும் சிறந்த முறையில் இயங்கி வந்தது. ஆனால், 1960 களில், ஐக்கிய அமெரிக்கா கொடுப்பனவுக் கஷ்டங்களை அநுபவிக்க ஆரம்பித்தது. பொன்னொதுக்கல்களின் போதிய வளர்ச்சியின்மை எனச் சில பொருளியல் அறிஞர்களால் வர்ணிக்கப்பட்டப்படி, டொலர்களை தங்கத்திற்கு மாற்றுவதில் பெரிய மாற்றங்கள் இடம் பெற்றன.

நிதி ஒப்பந்தத்தின் முதலாவது திருத்தத்தினூடாக, விசேட எடுப்பனவு உரிமைகளை உருவாக்குவதன் மூலம் இவ் ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு நிவாரணம் காண சர்வதேச நாணய நிதி முயற்சித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. இது ஐக்கிய அமெரிக்காவின் சென்மதி நிலுவையில் மேலும் குறைவு ஏற்படுவதையும், அமெரிக்காவின் பொன்னெதுக் கல்களின் மேலும் வெளியேற்றத்தையும் தடுக்காவிட்டாலும், சர்வதேச ஒதுக்கங்கள், அமெரிக்காவின் கொடுப்பனவு பற்றுக் குறைகளில் அதிகம் தங்கியிருக்காத வண்ணம், அவற்றின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. 1971 ஆகஸ்டில் தங்கத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலர் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதுடன் ஐக்கிய அமெரிக்கா, டொலரை தங்கத்திற்கு மாற்றும் மாற்றத் தகுதன்மையினை முடிவுறச் செய்தது. இதன்விளைவால் அமெரிக்க டொலருக்கும், தங்கத்திற்கு மிடையிலான தொடர்பு முறிவடைந்தது. 1971ன் இறுதிப் பகுதியில் டொலருக்கும், ஏனைய முக்கிய நாணயங்களுக்கும் சமநிலை விலை கொண்ட ஒரு புதிய மாதிரிக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. எனினும், அமெரிக்காவின் செல்மதிநிலுவை தொடர்ந்து பலங்குறைந்து கொண்டே சென்றது. இரண்டாவது நாணயமதிப்பிறக்கமும் தோல்வியில் முடிவுற்றதால், ஐக்கிய அமெரிக்கா, டொலருக்கான சமநிலைப் பெறுமதியையும் கைவிட்டது.

நாணய மாற்று வீதங்களை ஸ்திர நிலையில் பேணுவதற்காக, வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்யும்போது (அல்லது விற்கும்போது), இதற்கு குறைந்த முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்ற அபிப்பிராயத்தினை அநேக நாடுகள் கொண்டிருந்தன. அப்படியே நாணய மாற்றுவீதங்களின் அசைவிற்கும் பாரிய அளவில் சுதந்திரம் இருக்க வேண்டும். 1971 டிசம்பரில் இந்த அபிப்பிராயமானது, தளம்பல் வீதங்களின் பாரிய அளவிலான ஏற்புடைமைக்கு ஒரு அடிப்படைப் பகுத்தறிவினைக் கொடுத்தது. 1971 டிசம்பர் சிமித்சோனியன் ஒப்பந்தப்படி, ஏனைய உலக நாணயங்களும் தளம்பக்கூடியவாறு, அமெரிக்க டொலருடன், மத்திய வீதத்தின் இருமருங்கிற்கும் 2½% எல்லை அநுமதிக்கப்பட்டது. 1973 ல் எல்லா உலக நாணயங்களும் இவ்வெல்லையைத் தாண்டின. ஆரம்பத்தில் விசேட எடுப்பனவு உரிமைகளின் பெறுமதி, தங்கத்துடன் தொடர்புற்றிருந்தது. ஆனால், தளம்பக்கூடிய, நாணய மாற்றுவீதங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையாலும், தங்கத்தினது விலையை சந்தையின் மூலம் நிர்ணயத்தலை அநுமதிப்பது என்ற தீர்மானத்தினாலும் 1974 ஜூலை முதலாம் தேதியிலிருந்து விசேட எடுப்பனவு உரிமைகளின் பெறுமதியானது நாணயங்களின் கூட்டுத்தொகுதியினால் நிர்ணயிக்கப்பட்டது. இக் கூட்டுத்தொகுதியின் ஆரம்பத்தில் சர்வதேச வர்த்தகத்திலும், கொடுப்பனவுகளிலும் முதன்மை வகிக்கும் 16 நாடுகளின் நாணயங்கள் இடம்பெற்றன. இக் கூட்டுத்தொகுதியில் அநேக எண்ணிக்கையான நாணயங்கள் இடம்பெற்றமையால், சர்வதேச நாணய நிதிக்கு வெளியே விசேட எடுப்பனவு உரிமைகளின் பரந்த அளவிலான உபயோகத்திற்கு, ஒருவகையில் இது முக்கிய தடையாக இருக்கிறது எனக் கருதப்பட்டது. எனவே சர்வதேச நாணய நிதியானது 1981 ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து, இக் கூட்டுத் தொகுதியில் சில நாணயங்களைக் குறைப்பதற்கு தீர்மானித்தது. இத் தொகுதியில் இடம்பெற்ற சர்வதேச ரீதியில் பாவிக்கப்படும் 5 மிக முக்கிய நாணயங்களும், அவற்றின் நிறைகளும் பின்வருமாறு:-

நாணயம்		நிறை
அமெரிக்க டொலர்	–	42%
ஜெர்மன் மார்க்	–	19%
பிரான்ஸ் பிராங்க்	–	13%
யப்பான் யென்	–	13%
ஸ்டேர்லிங் பவுண்	–	13%
மொத்தம்		100%

(மிகுதி அடுத்த இதழில்)

(3 –ம் பக்கத் தொடர்ச்சி)

தீவு ஆகிய மாவட்டங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன; கிளிநொச்சி அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் பாரிய சேதம் ஏற்பட்டது. அம்பாறையில் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட 142,460 ஏக்கர்களில் 30,000 ஏக்கர் சேதமடைந்தது; மட்டக்களப்பில் 122,500 ஏக்கரில் 41,900 ஏக்கர் சேதமடைந்தது, திருகோணமலையில் 100,400 ஏக்கரில் 29,500 ஏக்கர் சேதமடைந்தது. மேல் மாகாணத்தில் நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கவில்லை; மழையால் ஏற்பட்ட பாதிப்பு குறைவாகவே இருந்தது. மேல் மாகாணத்தில் உரிய காலத்தில் அறுவடை மேற்கொள்ளப்பட்டு திருப்திகரமான விளைச்சல் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. மத்திய, ஊவா மாகாணங்களிலும் கூட மழையின் பாதகமான தாக்கம் உணரப்பட்டுள்ளது. சப்ரகமுவா மாகாணத்திலும் விளைச்சலில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி 2,689,900 புசல்களாகவிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(20–ம் பக்கத் தொடர்ச்சி)

காட்சிப் பெட்டிகளைக் கொணர்ந்திருப்பர் என வர்த்தக வட்டாரங்கள் மதிப்பீடு செய்துள்ளன. இவற்றின் எண்ணிக்கை சுங்கப் பதிவுகளில் இடம்பெறவில்லை. இதே போன்று தீர்வையற்ற கடைத் தொகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட பெட்டிகளும் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இவை மொத்த இறக்குமதியில் 15 – 25 சதவீதத்திற்கு இடைப்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. உள்நாட்டில் தொலைக் காட்சிப் பெட்டிகளை ஒன்று சேர்த்தல் இன்னொரு நிரம்பல் மூலமாகும். அண்மைக் காலங்களில் இம்மூலத்திலிருந்து ஏறக்குறைய 20,000 பெட்டிகள் சந்தைக்கு நிரம்பல் செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கிராமத் துறையில் கூட்டுறவுக் கிராம வங்கிகள் ஆற்றும் பங்கு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

= எம். டப். பண்டித்த

குறுந்தவணை — நடுத்தவணைக் கடன் வழங்கல்

கூட்டுறவுக் கிராம வங்கிகளின் நிதிகளுக்காகச் சங்கங்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்குத் தற்போது அறவிடப்படும் வட்டி விகிதம் ஆண்டொன்றுக்கு 18 சத விகிதமாகும். கூ. கி. வங்கிகள் ஏறக்குறைய 4 - 5 சத விகித எல்லை வைத்துக் கொண்டு, அங்கத்துவ சங்கங்களுக்கு அப்பணத்தைத் திருப்பிக் கடனுகக் கொடுக்கின்றன. மக்கள் வங்கி மேலதிகக் கடன் கொடுப்பதற்கு வட்டிவிகிதத்தைக் குறித்துச் சொல்வதில்லை. ஏற்றுக் கொள்ளத்தக்க இரு அங்கத்தவர்களின் உத்தரவாதத்துக் கெதிராக 5,000/- ரூபா வரை கடன்களைப் பெறமுடியும்; இந்த வரம்புக்கு மேற்பட்ட கடன்களுக்குப் பிணை பெறப்படுகிறது. பிரிவினையாகாத உடைமையுள்ள காணிகளைக் கூட பிணையாக ஏற்றுக் கொள்ள ஏற்பாடு உள்ளது. கிராம நொத்தாரிசுகள் சிறு விசாரணைகளையும் ஈடுகளையும் கவனிக்கிருர்கள். நிலையான வைப்புகள், சேமிப்புத் தொகைகளில் 90 சத விகிதத்துக்கெதிரான கடன்களும் வழங்கப்படுகின்றன. விதிக்கப்பட்ட வரம்புகளுக்குள்ளே, உரிமைப் பங்கு முதலைக் கோராமல், திட்டமொன்றின் முழுச் செலவுக்கும் நிதிகள் வழங்கப்படுகின்றன.

31 - 12 - 1983 ல் இருந்தவாறு, 67364 கடன்கள் சம்பந்தமாகத் தீர்க்கப்படாத நடுத்தவணை - குறுந்தவணைக் கடன்களின் தொகை 14 கோடி 77 இலட்சம் ரூபாவாகும். இந்த வசதிகளின் நோக்க வாரியான பகுப்பொன்று அட்டவணையில் தரப்படுகிறது:-

பிரதேசவாரியான பகுப்பொன்றிலிருந்து, மொத்தக் கடன் தொகையில் 92 சதவிகிதம் கொழும்பு மாவட்டத்துக்கு வெளியே வழங்கப்பட்டுள்ளதெனத் தெரியவருகிறது. இது கடன் வழங்கலில் பலத்த கிராமச் சார்பை எடுத்துக் காட்டுகின்றது.

கடன் வழங்கும் நடவடிக்கைகளும் கொடுகடன் வழங்கல்களும் எதிர்பார்த்தவாறு அமையவில்லை. கடன் வழங்குவதற்கான குறைந்த பட்ச பங்குப்பணத் தேவைகள் ஒரு புறமிருக்க, ஒப்பீட்டு ரீதியாக உயர்வட்டி விகிதங்களும் உள்ளக நிர்வாகப் பிரச்சினைகளும் சிற்றளவிலான கிராமத் திட்டங்களை இனங்கண்டு மதிப்பிடுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமையும் கூட இந் நிலைக்கு அடிகோலியுள்ளதாகத் தோன்றுகிறது.

பயிர்க் கடன்கள்

1973 ம் ஆண்டுக்குப்பின், பருவகாலப் பயிர்க் கடன்கள் வழங்குவது கூட கூட்டுறவுக் கிராம வங்கித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. நில ஆயத்தம், விதைகள், உரங்கள், விவசாய இரசாயனப் பொருள்கள் போன்ற நோக்கங்களுக்கும் அறுவடை செய்வதற்கும் கொடுகடன் வசதிகள் நெற்பயிருக்கும் பதினுறு உப உணவுப் பயிர்களுக்கும் வழங்கப்படுகின்றன. ஏக்கர் ஒன்றுக்கு வழங்கப்படும் நிதியின் அளவுகள் காலத்துக்குக் காலம் விவசாய அமைச்சால் வங்கிகளுடன் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், மத்திய வங்கி 100% மறு நிதிவசதிகளை வழங்குகிறது; மக்கள் வங்கி இந்த நிதிகளைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனுகக் கொடுக்கின்றது. ப. நோ. கூ. சங்கங்கள் முறையே இந்நிதிகளைக் கூட்டுறவுக் கிராம வங்கிகள் மூலம் அங்கத்துவ விவசாயிகளுக்குத் திருப்பிக் கடனுகக் கொடுக்கின்றது.

இத்திட்டத்தைப் பற்றி இன்னேர் ஆராய்ச்சிக் கட்டுரையில் சம்பூரணமாக ஆராயப்படுவதால், இந்தக் கடன் வழங்கல் திட்டத்தின் வீச்செல்லைகளை விரிவாக்க முக்கிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென எங்கள் வங்கி மத்திய வங்கிக்கு யோசனைகளை உறியுள்ளதென்று ஈண்டு குறிப்பிடுவது போதுமென நினைக்கிறேன். இயற்கை ஆபத்துக்களின் காரணமாகக் கடன்களைத் தீர்க்கத் தவறும் சம்பவங்களை உள்ளடக்குவதற்கான ஸ்திரப்படுத்தல் நிதியமொன்றின் வாயிலாகக் கடன்களை வழங்கும் நேர காலங்களை மாற்றியமைப்பதற்குரிய உள்ளமைந்த சூத்திரமொன்றை அமைப்பதற்கு இந்த யோசனைகளில் போதிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த இயற்கை ஆபத்துப் பிரச்சினை கடந்த காலத்திலே அநேக கடன் வழங்கல் திட்டங்களைத் தடுமாறச் செய்துள்ளது.

அடகு வைத்தல்

நகைகளை அடகுவைப்பதற்கெதிராகக் கடன் வசதிகளை வழங்கும் முறை, கூட்டுறவுக் கிராம வங்கிகளின் கடன் வழங்கல் நடவடிக்கைகளில் பெருவெற்றி பெற்றுள்ள நடவடிக்கையென்று கருதலாம். சங்கங்கள் ஒன்றில் தங்கள் சொந்த நிதிகளைக் கொண்டோ அல்லது மக்கள் வங்கியிலிருந்து மேலதிகப் பற்று வசதிகளைப் பெற்றோ அடகு வைப்பதில் ஈடுபடலாம். அங்கத்தவரல்லாதாருக்கும் அங்கத்தவர்களுக்கும் அத்தியாவசிய நோக்கங்களுக்கும் நுகர்வு நோக்கங்களுக்கும் அடகு வைப்பதற்கான கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்த முற்பணங்களை ஓராண்டுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பிக் கொடுக்கவேண்டும் எனினும், வருடாந்த வட்டியைச் செலுத்திய பின்னர் முற்பணங்களைப் புதுப்பித்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. வங்கி தற்போது ஆண்டொன்றுக்கு 23 சதவிகித வட்டியில் இந்நோக்கங்களுக்குக் கடன் கொடுக்கின்றது. கூட்டுறவுக் கிராம வங்கிகள் முறையே ஆண்டொன்றுக்கு 28 - 30 சதவிகித வட்டியில் இப்பணத்தைத் திருப்பிக் கடனாகக் கொடுக்கிறது. 31 - 12 - 83 ல் இருந்தவாறு, 3,50,265 முற்பணங்கள் சம்பந்தமாக அடகு வைப்பதற்கான முற்பணங்களின் தொகை 24 கோடி 39 இலட்சம் ரூபாவாக இருந்தது.

சேமிப்புக்களைத் திரட்டல்

கிராமங்களில் சேமிப்புக்களைத் திரட்டுவதற்குக் கூட்டுறவுக் கிராம வங்கிகள் மிகுந்த பயனுறுதி வாய்ந்த ஓர் ஊடகமாகுமென்பது நிரூபணமாகியுள்ளது. சேமிப்புக்களின் கனஅளவும் சேமிப்போரின் தொகையும் இதற்கு நல்ல சான்றாகும். 31-12-83 ல் இருந்தவாறு, வங்கிகளிருந்த சேமிப்புக்கள், நிலையான வைப்புக்ள் ஆகியவற்றின் மொத்தத் தொகை 71 கோடி 80 இலட்சம் ரூபாவாகும். இதில் ரூபா 16,12,000 சேமிப்புக்கணக்குகளில் இருந்தது. சேமிப்புக்களைத் திரட்டுவதில் காணப்பட்ட இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம், சேமிப்பு வைப்புகளில் 63 சதவிகிதமும் சேமிப்புக் கணக்குகளில் 59 சதவிகிதமும் அங்கத்தவரல்லாதாரால் போட்டுவைக்கப்பட்டிருந்ததாகும். இது கூட்டுறவுக் கிராம வங்கிகள் மீது கிராமமக்கள் வைத்த நம்பிக்கையின் அளவை எடுத்துக் காட்டுகின்றது.

31-12-1983 ல் இருந்தவாறு, கூட்டுறவுக் கிராம வங்கித் திட்டத்தின் கீழ் வைப்புகள் - முற்பணங்களின் நிலை சுருக்கமாகக் கீழ்க் கண்டவாறு இருந்தது:—

முற்பணங்கள் -	கனஅளவு (ரூபா பத்துலட்சம்)	கணக்குகளின் தொகை
(1) குறுந்தவணை - நடுத்தவணைக் கடன்கள்	147.7	67,364
(2) அடகுவைத்தல்	244.0	339,816
(3) 1973/74 லிலிருந்து பயிர்க் கடன்கள்திட்டம் (பெரும் போகம்)	507.1	
வைப்புகள்		
சேமிப்புகள்		16,12,485
நிலையான வைப்புகள்		24,765

மொத்தக் கடன்கள்/வைப்புகள் விகிதப் பொருத்தம் கடன் வழங்கலில் உபரியைக் காட்டுகிறதென்றாலும், மக்கள் வங்கிக்கு மத்திய வங்கியின் மறு நிதியளிப்பு கிடைக்கும் சாகுபடிக் கடன்களை ஒருபுறத்தில் ஒதுக்கி விட்டால், முற்பணங்கள்/வைப்புகள் விகிதப் பொருத்தம் திருப்தியில்லை.

திரட்டப்பட்ட வைப்புகளுக்கு நேர் எதிராகக் கடன் வழங்கலில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி (பற்றாக்குறை) பற்றிப் பிரமாதமாகச் சொல்லப்பட்டுள்ளது. சேமித்தவர்களில் பெரும்பாலோர் அங்கத்தவரல்லாதாராயிருப்பதால் அடகுவைப்பதற்குரிய முற்பணங்களைத் தவிர, கடன்கள் பெறுவதற்கு அவர்கள் அருகதையற்றவர்களாவர் என்ற உண்மையை ஒருவர் புறக்கணிப்பதற்கில்லை. இந்த வெளிச்சத்தில் நோக்குமிடத்து, நிலைமை அவ்வளவு பிரதிகூலமானதாகத் தோன்றவில்லை.

வழங்கல் நிதிகளின் முதலீடு

கிராம வங்கிகள் தங்களுடைய உபரிப்பணத்தை நிலையான வைப்புக் கணக்கிலும் சேமிப்புக் கணக்கிலும் முதலீடு செய்வதற்கு மக்கள் வங்கி அவற்றிற்கு வசதிகளை வழங்குகின்றது. நடப்புக் கணக்குகளில் பெருகும் உபரிப் பணத் தொகைகள் காலத்துக் காலம் சேமிப்புக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டு, நடப்புக் கணக்குகளில் தேவையான குறைந்தபட்ச பணத்தொகை மட்டுமே வைத்துக் கொள்ளப்படுகிறது. அத்துடன், கூட்டுறவுக் கிராம வங்கிகள் கூட தேசிய சேமிப்பு வங்கியின் வட்டி விகிதங்கள் மிக அனுகூலமாயிருக்கும் போது தங்களுடைய உபரி நிதிகளை அவ்வங்கியிலேயே முதலீடு செய்கின்றன. மேலும், சேமிப்புக்கணக்குகளிலுள்ள உபரிநிதிகளின் நிலை ஆரோக்கியமாயிருப்பதால், பெருந் தொகையான சங்கங்கள் தங்கள் சொந்த நிதிகளைக் கொண்டு அங்கத்தவர்களின் கடன் வசதிக் கோரிக்கையைத் திருப்தி செய்ய முடிந்துள்ளது. கடைசியாகக் கிடைத்த புள்ளி விவரங்களிலிருந்து, 843 கிராம வங்கிகளில் சில தங்கள் சொந்த நிதிகளைக் கொண்டு நிலைமையைச் சமாளித்து வருகின்றனவென்று தெரிகிறது.

ஒரு கூட்டுறவு கிராம வங்கியின் சுருக்கமான விவரம்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றின் பணிப்பாளர் சபை, பொது முகாமையாளர் வாயிலாகக் கூட்டுறவுக் கிராம வங்கியின் மீது முழு அளவிலான பொறுப்பு வகிக்கின்றது. பொது முகாமையாளருக்கு உதவியாக இருக்கும் நிர்வாகத் தரத்தைச் சேர்ந்த அதிகாரி "வங்கித் தொழில் சேவைகள் முகாமையாளர்" எனக் குறிப்பிடப்படுகிறார் வங்கித்தொழில் நடவடிக்கைகளை நிர்வகிப்பதே இவருடைய ஒரே வேலை. பொதுவாக, கூட்டுறவுக் கிராம வங்கியொன்றுக்கு 2 - 3 கிளைகள் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கிளைகள் கிளைமுகாமையாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும். முன்மாதிரியான கூட்டுறவுக் கிராம வங்கிக்கிளையொன்று ஒரு கிளைமுகாமையாளரையும் அவருக்கு உதவியாக ஓரிரு எழுதுவினைஞர்களையும் கொண்ட ஒரு நிறுவனமாயிருக்கும். தினமும், சேமிப்புக் கணக்குகள், அடகுவைத்தல், மற்றும் கடன் வழங்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சுமார் 75 - 100 கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும். பருவ காலமல்லாக் காலங்களில் மாதாந்தம். சுமார் 10 கடன் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்; சாகுபடிப் பருவ காலங்களில் வேலைப்பளு அதிகமாயிருக்கும். கடன் விண்ணப்பங்களை முடிவு செய்யும் காலம், பிணைகளின் தன்மையையும் நோக்கத்தையும் பொறுத்து, 1 வார காலத்திலிருந்து 6 வார காலம்வரை வேறுபடும்.

அங்கத்தவர்கள் கடன் கேட்கும் விண்ணப்பங்கள் கூட்டுறவுக் கிராம வங்கியின் கிளையொன்றிலோ அல்லது சங்கமொன்றிலோ ஏற்கப்படும். இவ் விண்ணப்பங்கள் கிளைமுகாமையாளராலும் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களின் கிளைக்கமிட்டியாலும் பரிசீலனை செய்யப்பட்டு, சங்கத்தின் தலைமையகத்திலுள்ள வங்கித்தொழில் சேவைகள் முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் பொதுவாகத் தலைமையகத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, பணிப்பாளர் சபையின் உப கமிட்டிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இங்கு விண்ணப்பங்களைப் பணிப்பாளர் சபைக்குச் சிபார்சு செய்வதில் பொது முகாமையாளரும் மக்கள் வங்கியின் பிரதிநிதியொருவரும் சபையின் அங்கத்தவர்கள் சிலரும் பங்குபற்றுகின்றனர். அதன் பின் இவ்விண்ணப்பங்கள் அங்கீகாரத்துக்காகப் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவசர நிலைமைகளுக்குக் கடன் வழங்க, வங்கித் தொழில் சேவைகள் முகாமையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவர் அதன் பின், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுகிறார்.

வங்கிகள் பொதுவாகக் காலை சுமார் 9 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணி வரை அலுவல்களுக்குத் திறந்திருக்கும். ஆனால் சில பகுதிகளில் இந்த வேலை நேரங்கள் பிற்பகல் 3.30 மணி வரை நீடிக்கப்படுகின்றன. பெரும்பாலான கூட்டுறவுக் கிராமவங்கிகள் அலுவல்களுக்காகச் சனிக்கிழமையிலும் திறந்திருக்கும்.

கூட்டுமொத்த இலாபத்தன்மை

கிராம வங்கிகளின் கூட்டுமொத்த இலாபத் தன்மையை ஆராய்வதும் விரும்பப்படத்தக்கதாகும். கிராம வங்கிகளின் வருவாய்க்குரிய பிரதான மூலம் அடகுவைப்பதற்கான முற்பணங்களிலிருந்து பெறப்படும் வட்டியாகும். அவற்றின் நிர்வாகச் செலவுகள் குறைவு; ஏனெனில் இந்நிறுவனங்கள் சிறு தொகையான உத்தியோகத்தர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றன. 31.12.83 ல் இருந்தவாறு, 843 கிராம வங்கிகளில் 801 இலாபத்தில் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. அவற்றின் மொத்த இலாபத் தொகை 1 கோடி 69 இலட்சம் ரூபாவாகும். எஞ்சிய 42 வங்கிகளின் மொத்த நஷ்டம் 4,14,000/- ரூபாவாகும். இவ்விதமாக, கூட்டுறவுக் கிராம வங்கிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலாபமீட்டித் தரும் முக்கிய நிலையங்களில் ஒன்றாகி விட்டன.

நிதிப் பாதுகாப்புகள்

கடன் வழங்கும் நடவடிக்கைகளின் நிதி உறுதிப்பாட்டையும் வைப்புகளின் பாதுகாப்பையும் பலப்படுத்துவதற்காகவும் சில குறிப்பிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகளின் கீழ் (1) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டுதோறும் தீர்க்கப்படாத கடன்களை மதிப்பிட்டு, "அறவிட முடியாக் கடன்களுக்காகவும் ஐயக் கடன்களுக்காகவும்" தங்கள் வருடாந்த இலாபங்களில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்க வேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகின்றன. (2) சகல கூட்டுறவுக் கிராம வங்கிகளும் கூட மக்கள் வங்கியில் "கிராம வங்கி வைப்பு உத்தரவாத நிதியம்" எனப்படும் ஒரு விசேஷ சேமிப்புக் கணக்கில் மாதந்தோறும் ஒரு தொகையை வைப்புச் செய்ய வேண்டுமென்ற விதியுண்டு. இத் தொகை பண வைப்பாளர்கள் அவற்றில் வைத்திருக்கும் நிலையான வைப்புகளிலும் சேமிப்புக் கணக்கிலும் மாதந்தோறும் போடும் மொத்தத் தொகையின் 1 சத விகிதத்தில் பத்தில் ஒரு பங்குக்குச் சமமான தொகையாக இருக்க வேண்டும். (3) அடகு வைத்தலுக்கு ஒரு அசம்பாவித (நிகழக் கூடிய) நிதியம் அமைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுக் கிராம வங்கிகள் தாங்கள் பெறும் வட்டியில் ஒரு பகுதியை மாதந்தோறும் இந்நிதியத்துக்கு அனுப்ப வேண்டும். காப்புறுதியின் நிதிப் பாதுகாப்பில் அடங்காத நஷ்டங்களை ஈடு செய்வதற்காகவே இந்நிதியம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்பார்வை — மீளாய்வு ஏற்பாடுகள்

இந்த ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் பல ஸ்தாபனங்களால் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்படுகின்றன. சங்கமே நடத்தும் உள்ளகக் கணக்காய்வுக்கு மேல், கூட்டுறவுக் கிராம வங்கிகள் தினமும் கையாளும் சகல உறுதிச் சீட்டுக்களையும் (வவுச்சர்) அவற்றின் கொடுக்கல் வாங்கல்களையும் அப்பகுதியிலுள்ள மக்கள் வங்கியின் அபிவிருத்தி உதவியாளர்களும் கணக்காய்வு செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். வழக்கமாக இந்தக் கணக்காய்வுகள்

(33-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சிறிய நீர்ப்பாசன அமைப்புக்கள் விவசாய அபிவிருத்தியில் அவற்றின் பங்கு

ஆரிய அபேசிங்கா
(துணைப்பணிப்பாளர் - அபிவிருத்தி,
விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சு)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"விவசாயிகள் பௌத்த கோவிலுக்குச் சொந்தமான குளத்திலிருந்து நீரை உபயோகித்துப் பயிர் செய்தாலும் அல்லது பௌத்த சங்கத்துக்குச் சொந்தமான காணியில் நீர்ப்பாசனத்துக்குரிய நீர்த்தேக்கமொன்றைக் கட்டினாலும், அந் நீர்த்தேக்கத்திலிருந்து நீரைப் பெற்று விளைவிக்கப்பட்ட பயிர்களின் வருமானத்தைப் பிக்குகள் ஏற்றுக் கொள்ளலாம். இத்தகைய நீரை உபயோகிக்கும் யாயாவிலுள்ள விவசாயிகள் பிக்குகளுக்கு ஒன்றும் கொடுக்கவில்லையென்றால், நீர் வழங்கலை நிறுத்துவதற்கு அனுமதியுண்டு; ஆனால், அறுவடைக் காலத்திலன்றி உழுங் காலத்திலேயே இப்படிச் செய்யப்பட வேண்டும்" என்று புத்த கோஸ கூறுகிறார்.

விஹாரகல கல்வெட்டு மூன்று வகையான குளங்களைக் குறிப்பிடுகிறது. அரசனுக்குச் சொந்தமான குளங்கள், சமூகத்துக்குச் சொந்தமான குளங்கள், தனியாருக்குச் சொந்தமான குளங்கள்; எல்லாக் குளங்கள் சம்பந்தமாகவும் நீர்முகாமை முறை பின்பற்றப்பட்டது. எனினும், எல்லாக் கல் வெட்டுகளிலும் மிக முக்கியமானது கொண்டவட்டவன் தம்பத்திலுள்ள கல்வெட்டாகும். இது சிங்கள நீர்ச் சட்டங்களைப் பற்றிய விவரங்களைத் தருகின்றது. இக் கல்வெட்டின்படி சில சாகுபடிக் குற்றங்கள் தண்டிக்கத்தக்கவையாயிருந்தன. உதாரணமாக, யாயாவிலுள்ள வயல்களில் வெள்ளம் போல நீரை நிறைப்பதை யொட்டிய குற்றமொன்றுக்கு இரு அக்க அபராதம் விதிக்கப்பட்டது. (அக்க என்பது ஒரு களந்த அல்லது கஹவனுவின் பெறுமதியில் எட்டில் ஒரு பங்குக்குச் சமமான பெறுமதியுள்ள ஒரு நாணயம்) உழுதலையொட்டிய ஒரு குற்றத்துக்கு ஒரு களந்த அபாரதம் விதிக்கப்பட்டது; காலம் பிந்தி உழுத ஒரு குற்றத்துக்கு, ஐந்து களந்த அபராதம் விதிக்கப்பட்டது. "அந்த அபராதம் நியாயமற்றதென்ற காரணத்தின் பேரில் அதைச் செலுத்தாதிருக்க எந்தக் குத்தகை விவசாயியாவது முயன்றால், கிராமத்தில் வசிக்கும் மற்றும் மக்கள் முடிவு செய்தவாறு, அந்த அபராதம் விதிக்கப்பட வேண்டும்; அதை மிஞ்சி எந்த அபராதமும் விதிக்கப்படலாகாது" என்று அக் கல்வெட்டு மேலும் குறிப்பிடுகிறது. பண்டைக்கால நீர்ச்சட்டங்கள் இப்படித்தானிருந்தன. எனவே, கடந்த காலத்திலே சில குறிப்பிட்ட நீர்க்கட்டணங்கள் இருந்து வந்தனவென்று தெரிகிறது. சாகுபடி நேர அட்டவணை உட்படச் சில குறிப்பிட்ட சாகுபடி முறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டியிருந்தது; முடிவு செய்யும் முறையில் கிராமத்திலுள்ள அனைவரும் ஜனநாயக் முறைப்படி தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பல நூற்றாண்டுகளாகக் கட்டியெழுப்பப் பட்டு, பொதுச் சேமநலத்துக்காகப் பின்பற்றப்பட்டு வந்த இந்தப் பாரம்பரியங்களும் செய்முறைகளும் படிப்படியாகச் சிதைந்தன. நிறைவைக் காணும் வழிக்கு நீர்ப் பாதுகாப்பும், காணியபிவிருத்தியும் அடிப்படைக் கொள்கையாயிருந்த முதலாம் பராக்கிரமபாகு (1153 - 1186) வின் காலத்தையடுத்து வந்த மூன்று நூற்றாண்டுகளில் இவை சீணிக்கத் தொடங்கின. ஒரு வேளை அபிவிருத்தி நடவடிக்கைகள் தம்பதெனியா, யாப்பாஹுவ, குருநாகல், கம்பளை ஆகிய தலை நகரங்களுக்கு அருகில் நடைபெற்று வந்த வேலைகளின் காரியக் கிரமத்தைப் பராமரிப்பதுடன் நின்று விட்டன போலும்.

டச்சுக்காரரின் அபிவிருத்தி வேலைகள்

போர்த்துக்கீயரின் வருகை (1505 - 1656) யுடன் நிலைமையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இலங்கை விவசாயத்தில் அவர்கள் காட்டிய அக்கறையெல்லாம் கறுவாப்பட்டையுடன் நின்று விட்டது. டச்சுக்காரர்கள் கி.பி. 1656 ஆம் ஆண்டிலிருந்து 150 ஆண்டுகள் வரை இலங்கையில் இருந்தார்கள். டச்சுக்காரர்கள் தங்களுக்கு முன்பிருந்த ஆட்சியாளர்களைப் போலன்றி உள்நாட்டு விவசாய அபிவிருத்தியில் மிகுந்த கவனம் செலுத்தினர். விவசாயத்துக்காகக் காணிகள் தாராளமாக வழங்கப்பட்டன. 1666 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒரு சட்ட விதிப்படி சொந்த நெற்காணிகளில் பயிரிடுவோரும், குத்தகை விவசாயிகளும் காணிகளைச் சாகுபடி செய்யாமல் விடுதல் தடைசெய்யப்பட்டது. 1744 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப் பட்ட இன்னோர் உத்தரவு சாகுபடி செய்யப்படாத இத்தகைய காணிகள் மிகச் சுறுசுறுப்பாகப் பயிரிடக் கூடிய மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதற்காகப் பறிமுதல் செய்யப்படுமென அறிவித்தது. தாழ்ந்த பூமியில் உள்ள சிங்களப் பகுதிகளில் விவசாயத்துக்கு ஊக்கமளிப்பதில் பயனுண்டு எனக் கண்ட டச்சுக்காரர்கள் பெருஞ் செலவில் எந்திரவியல் வேலைப் பாடுகளை நிர்மாணித்தும் புதுப்பித்தும் இதற்கு உதவி செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தாழ்ந்த பூமியில் டச்சுக்காரர்கள் செய்த மிகவும் குறிப்பிடத்தக்க சேவை என்னவென்றால், காணிகளைச் சாகுபடிக் கேற்றன வாக்குவதற்காக மித மிஞ்சிய நீரை வடிப்பதற்குரிய வடிகால்களை நிர்மாணித்ததாகும். நீர் கொழும்புக் கால்வாயும், களுத் துறைக் கால்வாயும் அமைக்கப்பட்டதனால் முத்துராஜவெல பகுதியிலும் கோட்டே பகுதியிலும் வடிகால் வசதிகள் ஏற்பட்டன. காலியில் மிகப்பெரிய நவீன கால்வாய் அமைக்கப்பட்டதனால் அயலிலுள்ள தாழ்ந்த வடிநிலங்களிலிருந்து வெள்ளப் பிரவாகம் கட்டுப்படுத்தப்பட்டது. நூப கால்வாயும், தலகஹகொட கால்வாயும் மாத்தறைப் பிரதேசத்தில் மண்ணால் அமைத்த கட்டுக் கரையோரமாகப் பயிரிடுவதற்கு உதவியாயிருந்தன. களனிகங்கையின் வட கரையோரமாக ஏழுமைலுக்கு மேற்பட்ட பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட இக் கால்வாய்கள், களனியைச் சுற்றித் தாழ்ந்த வடிநிலங்களிலுள்ள நெல்வயல்களில் குறித்த காலங்களில் ஏற்படும் வெள்ளப் பிரவாகத்தைத் தடுத்து நிறுத்தின. நில்வளகங்கையையடுத்து அமைந்துள்ள காணிகளில் வடிகால்கள் அமைக்கப்பட்டு, தகுந்த அணைக் கட்டுகள் முதலியவற்றை நிர்மாணிப்பதன் மூலம் நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. கிரம ஓய பின்னால் திருப்பப்பட்டு, அதன் நீர் திசை திரும்பி நெற் கழனிகளுக்குப் பாய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டன. டச்சுக்காரர்கள் மேற்கொண்ட மிக முக்கியமான நீர்ச் சேமிப்புப் பணி, 8,000 ஏக்கர் காணிகளின் சாகுபடியை விருத்தி செய்வதற்காக லெப். போனண்டர் 1787 ஆம் ஆண்டில் கட்டி முடித்த ஊறுபொக்க அணைக்கட்டாகும். அவர்கள் செய்த மற்றும் வேலைகளில், புனண்ட் என்பவர் இறக்காமம் அணைக்கட்டை அமைத்ததும், அம்பாரைக் குளத்தில் செய்த பழுது பார்ப்பு வேலையும், எஞ்சினியர் ஃபொர்னபர் கந்தளாய்க் குளத்தில் செய்த சீர்திருத்த வேலைகளும் அடங்கும். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வான்டிகிராஃப் அவர்களுடைய நிர்வாகக் காலத்தில், இலங்கையில் நீர்ப்பாசனத்துடனும் விவசாயத்தோடும் இணைந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் உச்சநிலையை அடைந்தன.

பிரிட்டிஷ் காலம்

1796 ஆம் ஆண்டளவில் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிய பிரிட்டிஷார் *1815* ஆம் ஆண்டில் முழு இலங்கையிலும் தங்கள் ஆதிக்கத்தை விஸ்தரித்து, *1948* ஆம் ஆண்டில் ஆட்சியதிகாரத்தை இலங்கையர்களுக்குக் கைமாற்றினர். பிரிட்டிஷ் ஆதிக்கம் நடைபெற்ற ஒன்றரை நூற்றாண்டுகளின் போது நீர்வளங்களின் அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டது. அக்காலத்தில் தேசாதிபதிகள் புதிய கற்பனைசக்தியுடன் மேற்கொண்ட தொடக்க முயற்சிகளினாலும், அவர்கள் காட்டிய உற்சாகத்தினாலும் மத்திய நீர்ப்பாசன சபையும், மாகாண சபைகளும், நீர்ப்பாசனத் திணைக்களமும் மேற் கொண்ட முயற்சிகளாலும் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றன. கட்டுக்குளத்தைப் புனரமைப்பதற்காக டச்சுக்காரர்கள் ஆராய்ச்சி நடத்தினரெனினும், *1806* ஆம் ஆண்டுவரை ஒன்றும் செய்யப்படவில்லை. அவ்வாண்டில் சேர் தோமஸ் மெயிட்லண்ட் அக்குளத்தைப்புனருத்தாரணம் செய்வதற்காகச் சில முயற்சிகளை மேற்கொண்டார். டச்சுக்காரர்கள் ஊறுபொக்க அணைக்கட்டை நிர்மாணிப்பதில் கையாண்ட முறைகளைப் பின்பற்றி 1825 ஆம் ஆண்டில் நில்வளகங்கையின் ஓர் உபநதியின் குறுக்கே கிரம அணைக் கட்டு கட்டப்பட்டது. பண்டைக் காலத்தில் குளப்பராமரிப்பில் இருந்து வந்த சமூக ஏற்பாடுகளைப் பாதித்த முக்கியமான மாறுதல்களில் ஒன்றென்னவென்றால், 1832 ஆம் ஆண்டில் இராஜகாரிய முறை நீக்கப்பட்டதாகும். சமூகத்தால் குளங்கள் பராமரிக்கப்படுவதற்கும் பழுது பார்க்கப் படுவதற்கும் எந்த மாற்று ஏற்பாடுகளும் சிபார்சு செய்யப்படவோ அல்லது அமுலுக்குக் கொண்டுவரப்படவோயில்லை. எனவே, சமூக நீர்ச் சேமிப்பு வேலைகளைப் பராமரிப்பதும், பாதுகாப்பதும் எந்தத் தனிநபரின் அல்லது குழுவின் பொறுப்பாகவும் இல்லாதிருந்தமையால், சிறு நீர்ப்பாசன அமைப்புகளும் பெரிய நீர்ப்பாசன அமைப்புகளும் பொதுச் சிதைவுக்குள்ளாகி வீணாயின. கிராமக் குளங்களை அபிவிருத்தி செய்வதற்குப் பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த முறைகள் அழிந்தொழிந்ததற்கு ஏற்கெனவே விளக்கப்பட்ட காரணிகளுக்குப் புறம்பாக இதுவும் இன்னொரு காரணியாக இருந்திருக்கலாம்.

1837 ஆம் ஆண்டில் கிரம அணைக்கட்டும் ஊறுபொக்க அணைக்கட்டும் உடைப்பெடுத்தன. *1847* ஆம் ஆண்டில் அப்போதிருந்த குடியேற்ற நாட்டு மந்திரி சேர் எமர்ஸன் டெனன்ட் நீர்ப்பாசனத் திட்டங்களைப் படிப்படியாகப் புனருத்தாரணம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்ததுடன், சட்டமியற்றும் அதிகாரத்தின் மூலம் நீர்ப்பாசன அபிவிருத்தியில் மீண்டும் அக்கறை காட்டினார். இலங்கையின் பிரிட்டிஷ் தேசாதிபதி சர். ஹென்றி வார்ட் *1856* ஆம் ஆண்டில் நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். "நெற்காணிகளின் நீர்ப்பாசனம், சாகுபடி சம்பந்தமாகப் புராதன வழக்கங்களுக்குப் புத்துயிரளித்து, அவற்றை அமுல் நடத்துவதற்கு" வசதி செய்வதே இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கமாகும். எனவே, இச்சட்டம் இயற்றப்பட்டது. இந்தச்சட்டம் *1.1.1857* இலிருந்து *1861* வரை ஐந்து வருடகாலத்துக்கு அமுலிலிருந்தது. இக்கட்டளைச் சட்டம் அதன் பிரயோக இலக்கில் வரையறுக்கப்பட்டதாயிருந்தது. ஏனென்றால், அக்கட்டளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் இலங்கையில் தனியொரு நீர்ப்பாசன அமைப்பைச் சார்ந்திருந்த நெல்வயல்களைக் கொண்ட பெரும் காணிப் பரப்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கட்டளைச்சட்டத்தின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கு மிணங்க, மட்டக்களப்பிலுள்ள இறக்காமம் அணைக்கட்டு, தெற்கிலுள்ள ஊறுபொக்க அணைக்கட்டு, கிரம அணைக்கட்டு, குறிப்பாக கெக்கனதுற, ஹாலிஎல, எல்லாவள, உடுக்கிரிவெல, திஸ்ஸமஹாராம, தெனியாய ஆகிய இடங்களிலுள்ள குளங்கள் முதலியவற்றை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கும் அவற்றை விருத்தி செய்வதற்கும் தேவையான நிதிகளை சேர் ஹென்றிவார்ட் ஒருவாறு வழங்கினார். மேலும், யாயாவிலுள்ள விவசாயிகளின் இலவச உழைப்பின் வாயிலாகக் கிராமக் குளங்களைப் பராமரிக்கும் பண்டைய வழக்கங்களுக்குப் புத்துயிரளிக்கவும், நீர் வழங்கலையும், பகிர்வையும் ஒழுங்குபடுத்தவும், சேர் ஹென்றிவார்ட் 1856 ஆம் ஆண்டில் கிராம சபைகளுக்கு அதிகாரம் வழங்கினார். இது ஏறக்குறைய தற்காலத்து நீர் முகாமைக் கருத்துக்களுக்கு ஒப்பானதாகும். 1861 ஆம் வருட நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டம் முதலாவது கட்டளைச் சட்டத்தைப் புதுப்பிப்பதாக விளங்கியது. ஆனால், 1867 ஆம் ஆண்டின் திருத்தியமைக்கப்பட்ட நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டத்தில், கிராமக் குளங்களையும், சிறு நீர்ப்பாசன அமைப்புகளையும் கூட பழுதுபார்க்கும் வேலைகளை உள்ளடக்குவதற்கான விரிவான இலக்குடன் தேவையான திருத்தங்கள் அடங்கியிருந்தன. சேர். அலெக்ஸாந்தர் ஜோன்ஸ்டனும், தோமஸ் மெயிட்லண்டும் கிராமக் குளங்களின் புனருத்தாரணம் பற்றிய யோசனைகளை வெளியிட்டனரெனினும், உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவராய் சர் ஹென்றிவார்ட் நீர்ப்பாசனத்தில் அரசாங்கத்தின் அக்கறையைத் தொழிற்படுத்தத் தொடங்கும்வரை, அவர்களுடைய யோசனைகளைக் கொண்ட திட்டங்கள் நிறைவேற்றப்படாமலேயிருந்தன. மாத்தறை நீர்ப்பாசன வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், துரதிர்ஷ்டவசமாக 1880 களில் கோப்பிச் செடிகளை நாசஞ்செய்த வெளிறல் நோயினால் நீர்ப்பாசன நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் அக்கறை குறைந்துவிட்டது. நிரந்தரவாசிகளைக் கொண்ட மாவட்டங்களிலுள்ள கிராமக் குளங்கள் மட்டுமே கவனிக்கப்பட்டன. தேசாதிபதி சேர் ஹெர்குலஸ் ரொபின்ஸன் (1865 - 1872) அவர்களால் பெருமளவில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள முடிந்தது. தமது பிரசித்திபெற்ற நெற்சாகுபடிக் கட்டளைச் சட்டத்தை அவர் பிறப்பித்தார். ரொபின்ஸனின் காலத்தில், தென்மாகாணத்தில் நான்கு திட்டங்கள் (கெக்கனதுற குளம், ஹாலி — எல குளம், திஸ்ஸமஹாராம குளம், உடுக்கிரிவெலகுளம்), வடமத்திய மாகாணத்தில் நான்கு திட்டங்கள் (தெதுறு ஓயா திட்டம், கொஸ்பொத்து ஓயா திட்டம், தினிப்பிட்டிவேவ திட்டம், வென்னெறு வேவ திட்டம்), ஊவாமாகாணத்தில் மூன்று திட்டங்கள் (ஹொரபொர வேவ, புத்தல எல, குடவேவ), கிழக்கு மாகாணத்தில் மூன்று திட்டங்கள் (பெரியகுளம், றுகம் குளம், புளுக்கவைகுளம்) புனரமைப்புச் செய்யப்பட்டுப் பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டன. மற்றும் இருபத்தைந்து கிராமப் புனருத்தாரணவேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றிற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 1,050,000 ரூபா. அவரையடுத்து வந்த தேசாதிபதி வில்லியம் கிறிகொறியும் அபிவிருத்தி வேலைகளில் கண்ணுங்கருத்துமாயிருந்தார். அபிவிருத்தி வேலைகளின் உத்வேகம் ஏறக்குறைய இரட்டித்தது. பெருந்தொகையான சிறு நீர்ப்பாசன அமைப்புகள் புனரமைக்கப்பட்டு, பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டன. ''ஒவ்வொரு வருடமும் குறைந்தபட்சம் 100 கிராமக் குளங்களாவது பழுது பார்க்கப்படவேண்டும்'' என்று அவர் விரும்பினார். புதுப்பிக்கப்பட்ட பெரிய குளங்கள், அணைக்கட்டுகளுக்கிடையே தென்மாகாணத்திலுள்ள ஊறுபொல அணைக்கட்டுக்கும், வடமத்திய மாகாணத்திலுள்ள பஸவக் குளம், மதவாச்சி குளம் கலாவே வாவிலிருந்து யோட எல, எல ஹெர கால்வாய், வடமத்திய மகாணத்திலுள்ள மகா உஸ் வேவ, கல்கமுவ குளம், கிழக்கு மாகாணத்திலுள்ள அல்லைத் திட்டம், சாகாமம் சந்தியந்தளாவ, கந்தளாய்க் குளம் ஆகியவற்றிற்கும் விசேஷ முக்கியத்துவம் அளிக்கப்பட்டன.

சேர் ஆர்தர் கோர்டன் நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகளுக்குப் புத்துயிரூட்டியதோடு, சர். வில்லியம் கிறிகொறி புறப்பட்டதுடன் தளர்ந்துவிட்ட உற்சாகத்தையும் மீண்டும் தூண்டி விட்டார். கோர்டனின் ஆட்சிக் காலத்தில் புனருத்தாரணம் செய்யப்படுவதற்காக அநேக நீர்ப்பாசன வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆறு வருட காலத்தில் 30 லட்சம் ரூபா செலவில் 42 குளங்களும், 164 மதகுகளும் பழுது பார்க்கப்பட்டுச் சீர் செய்யப்படுவதற்கு அவர் ஏற்பாடு செய்தார். புனரமைக்கப்பட்டு, பழைய நிலைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்ட பெரும் நீர்ப்பாசன அமைப்புகளில் கலாவேவ மிக முக்கியமானதாகும். அதைப் புனரமைப்புச் செய்வதற்கு 405,095 ரூபா செலவாயிற்று. கலாவேவ யோட எல (பழைய ஜய கங்கா) வைப் புனருத்தாரணம் செய்யும் வேலை 1889 ஆம் ஆண்டில் 304,484 ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டது. அதே சமயத்தில் அநுராதபுரம், நுவரெலியா, திஸ்ஸவேவ, பஸவக் குளம் ஆகிய இடங்களிலுள்ள கிராமக் குளங்களும் புனரமைக்கப்பட்டன.

நீர்ப்பாசனத்தைப் பொதுவாக நிர்வகிப்பதற்கும், வளர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்கும் தேசாதிபதியைத் தலைவராகக் கொண்ட ஒரு மத்திய நீர்ப்பாசன சபையைச் சிருஷ்டிப்பதற்காக 1887 ஆம் ஆண்டில் ஒரு கட்டளைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. மாகாண சபைகள் அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள அரசாங்க அதிபர்களைத் தலைவர்களாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டன. தத்தம் பகுதிகளில் சகல நீர்ப்பாசன வேலைகளையும் நிறைவேற்றும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், எந்த விசேஷ உத்தியோகத்தர்களும் வழங்கப்படவில்லை. பொது மராமத்துத் திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர்களே இவ்வேலைகளை நிறைவேற்றினர்கள். 1889 ஆம் ஆண்டுக்குள், 59 பெரிய குளங்களும், 2,250 சிறு குளங்களும், 245 அணைக்கட்டுகளும், 700 மைல் நீளக் கால்வாய்களும் புனரமைக்கப்பட்டன. இவ்வேலைகளை அரசாங்க அதிபர்களின் பொறுப்பிலிருந்து நீக்கி, பொதுமராமத்துப் பணிப்பாளரிடம் முற்ருக ஒப்படைப்பதென 1896 ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டது. இந் நோக்கத்துக்காக, பொது மராமத்துத் திணைக்களத்தைப் பலப்படுத்துவதற்கு ஹென்றி டபிள்யூ. பார்க்கர் என்னும் ஒரு விசேஷ நீர்ப்பாசன உதவியதிகாரியும், பல கனிஷ்ட எஞ்சினியர்களும் நியமிக்கப்பட்டனர். 1899 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட ஒரு புதிய நீர்ப்பாசனக் கைநூல், நீர்ப்பாசன வேலைகளைப் பராமரிப்பதற்கான பொறுப்பை விளக்கிக் கூறியது.

1900 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி ஒரு தனி நீர்ப்பாசனத் திணைக்களம் உதயமாயிற்று. அதன் முதலாவது பணிப்பாளராக எச். ரி. எஸ். வார்ட் நியமிக்கப்பட்டார். சகல நில அளவைகளையும் செய்வதும், புதிய நீர்ப்பாசன அமைப்புகளை நிர்மாணிப்பதும், பெரிய திட்டங்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்குரிய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதும் அவற்றைப் பராமரிப்பதும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பு. (மாகாண சபை நீக்கப்பட்டதற்குப்பின்) இப்பொழுது அரசாங்க அதிபர்களுக்கு, கிராமவாசிகளே நிறைவேற்றும் சிறு நீர்ப்பாசன வேலைகளைப் பராமரித்துவரும் கடமை வழங்கப்பட்டது. "இலங்கையில் நீர்ப்பாசனம்" என்பதுபற்றிய டபிள்யூ. எல். ஸ்ட்ரேஞ் என்பவரின் அறிக்கை பிரசுரிக்கப்பட்டதையடுத்து, 1917 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. அபிவிருத்திக்கேற்ற விதத்தில் மாறும்படியாக நீர்ப்பாசனக் கட்டணங்கள் இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டன. நீர்ப்பாசனக் கட்டணங்கள் நிலையாக இருந்து வந்த காலம் மலையேறி விட்டது. சாகுபடி சம்பந்தமான விதிமுறைகளை நிர்வகிக்கும் பொறுப்பு தொழில் நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து நீக்கப்பட்டு, இக்கடமை அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்விதமாக, நீர் நிர்வாகம், முகாமையுடன் ஒட்டிய சில கடமைகள் இப்பொழுது அரசாங்க நிர்வாகப் பகுதிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, அப்பொறுப்பு தொழில் நுட்ப அலுவலர்களிடமிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

சிறு நீர்ப்பாசன அமைப்புகளின் பெரும் பயன்பாட்டைச் சுட்டிக்காட்டிய காலத்தை 1923 ஆம் ஆண்டு குறிக்கின்றது. 1923 ஆம் ஆண்டில் நடைபெற்ற படுமோசமான ரெயில் விபத்து, இருப்புப்பாதை மீது அமைந்துள்ள ஒவ்வொரு கிராமக் குளத்தின் வெள்ளப் பிரவாகத்திலிருந்து தோன்றக்கூடிய அபாயத்துக்கு அதிகாரிகளின் கவனத்தைப் பலமாக ஈர்த்தது. எனவே, பொல்காவலைக்கும், மன்னருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே அமைந்துள்ள ஒவ்வொரு கிராமக் குளத்தின் பாதுகாப்பையும் குறித்து நீர்ப்பாசனத் திணைக்களம் பூரணமாக ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. மெஸர்ஸ் எமர்ஸன் அன்ட் பிடெல் என்னுமொரு பிரிட்டிஷ் கம்பெனி 354 கிராமக் குளங்களை ஆராய்ந்து பார்த்தது. ஆனல் பின்பு இந்த ஆராய்ச்சிச்சோதனை ஜே. எஸ். கென்னடி அவர்களாலேயே பூர்த்தி செய்யப்பட்டது. இவர் பின்னர் நீர்ப்பாசனப் பணிப்பாளரானர். இவ்வாராய்ச்சி சிறு நீர்ப்பாசன அமைப்புகளை அபிவிருத்தி செய்வதிலுள்ள பெரும் பயன்பாட்டைச் சுட்டிக் காட்டியது. எனவே, அதன்படி ஆராய்ச்சியின் இலக்கு விரிவாக்கப்பட்டது. முதல் முறையாகக் கிராமங்களிலுள்ள சிறு நீர்ப்பாசன அமைப்புகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் ஒரு விஞ்ஞான அடிப்படையில் சேகரிக்கப்பட்டு, ஒத்துப் பார்க்கப்பட்டன. அத்துடன், அவற்றை விஞ்ஞான முறையில் அபிவிருத்தி செய்வதற்கான ஒரு முறையான ஆராய்ச்சி ஏற்பாடும் செய்யப்பட்டது.

ஒரு புதிய நீர்ப்பாசனக் கொள்கை 1932 ஆம் ஆண்டில் அப்போதிருந்த விவசாய, காணி அமைச்சர் டி. எஸ். சேனநாயக்கா அவர்களால் வெளியிடப்பட்டது. அதன்படி சிறு நீர்ப்பாசன அமைப்புகளைச் சீர்படுத்தியமைக்கும் பொறுப்பு அரசாங்க அதிபர்களிடமிருந்து மீண்டும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு மாற்றப்பட்டது. அமைச்சரின் கொள்கை கீழ்க் கண்டபடி சுருக்கமாக விளக்கப்பட்டது: "நெல்லை உற்பத்தி செய்வதற்கும் அரிசிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் நாடெங்குமுள்ள கிராமங்களிலிருக்கும் எண்ணற்ற நீர்ப்பாசன அமைப்புகளில் பொதிந்துள்ள சாத்தியக் கூறுகளையே நாடு அதிகமாக நோக்கவேண்டும்." கிராம நீர்ப்பாசன அமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்காக 200,000 ரூபா மான்யம் வழங்கப்பட்டது. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ஒரு விசேஷ கிராம வேலைப்பகுதி அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசனத் திணைக்களம் அமுல் செய்த வேலைத்திட்டங்கள் முதலாவதாக முறையான பராமரிப்பு மூலமும் முறையான நீர் வழங்கல் மூலமும் சிறு நீர்ப்பாசன அமைப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதையே மையமாகக் கொண்டிருந்தன. இரண்டாவதாக, வெள்ளப்பாதுகாப்பு, சிறு வெள்ளங்களுக்கெதிரான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்காக நீர்ப்பாசனத் திணைக்களம் ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பித்தது. இத்திட்டம், வெள்ளமட்டம் அல்லது வெள்ளப்பாதுகாப்பு மட்டம் எனப்படும் முன்னரே நிர்ணயிக்கப்படும் ஒரு வெள்ள நீர் உயரம் வரை களனி கங்கையின் வெள்ளப் பிரவாகம் அண்டையிலுள்ள தாழ்ந்த வடி நிலங்களை மூழ்கடிக்காதவாறு தடுத்தது. நெற்சாகுபடி வளர்ச்சிக்கு நீர்த்தட்டுப்பாடு பிரதான தடையாக இருந்துவந்த வறண்ட பிரதேசத்தின் நன்மைக்காக மட்டும் நீர்ப்பாசனக் கொள்கை நெறிப்படுத்தப்படவில்லை. இலங்கையில் நெற்சாகுபடியை விரிவாக அபிவிருத்தி செயவதற்காகவும் விஸ்தரிப்பதற்காகவும் சிறு நீர்ப்பாசன அமைப்புகளை அபிவிருத்தி செய்வதிலேயே இது முழுக்கவனம் செலுத்தியது. நீர்ப்பாசனப் பணிப்பாளர் காலஞ் சென்ற திரு. ஜே. எஸ். கென்னடி "கிராம நீர்ப்பாசன அமைப்புகளை விஞ்ஞான முறையில் அபிவிருத்தி செய்வதன் உருவாக்கம்" என்னும் தமது ஆராய்ச்சியறிக்கையை 1933 ஆம் ஆண்டில் வெளியிட்டார். இது பிற்காலத்தில் எஞ்சினியர்களும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் பின்பற்றுவதற்கான ஒரு வேதோபதேசம் ஆகிவிட்டது. திரு. டபிள்யூ. ஏ. கத்றி 1936 ஆம் ஆண்டில் "மலை நாட்டு நீர்ப்பாசனச் சிற்றோடை (எல) களில் வண்டல் தடுப்பு நடவடிக்கைகளுக்குரிய முன்னுரை" என்னும் தலைப்பைக் கொண்ட தமது ஆராய்ச்சி நூலில் மலைநாட்டுச் சிற்றோடைகளில் வண்டல் படியும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டினர். 1939 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன வேலைகளுக்குரிய ஆயத்தங்களைச் செய்வதற்கான நடைமுறை விதிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விதிகள் கிராம நீர்ப்பாசன வேலைகளை வரைவிலக்கணம் செய்தன. "இந்த வேலைகளுக்காகக் காணிக்காரர்கள் பொதுவாக எந்தக் கட்டணமும் செலுத்துவதில்லை. ஆனல், இந் நீர்ப்பாசன அமைப்பைப் பகுதியாகவோ அல்லது முற்றுகவோ நிர்மாணித்துப் பராமரித்து வருவதற்கு அவசியமான கரைகளை அமைப்பது, காடுகளைத் துப்புரவு செய்வது ஆகிய வேலைகளை நிறைவேற்ற வேண்டும்." யுத்தத்தினுல் நீர்ப்பாசன வேலைகளின் அபிவிருத்தி எவ்விதத்தும் பாதிக்கப்படவில்லை. புதிய காணிக் கொள்கைப்படி குளங்களையும் கால்வாய் முறையையும் அமைப்பது மட்டும் போதாது; ஆனல், குடியேற்றக்காரர்கள் குடியேற்றப்படுவதற்கு முன்பு காணிகள் திறக்கப்பட்டுப் பண்படுத்தப்பட வேண்டியதவசியமாகும். 1945 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் உணவு உற்பத்தி இயக்கம் ஆரம்பமாகியது. கிராம நீர்ப்பாசன அமைப்புகள் பழைய நிலைக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டுப் பராமரிக்கப்படுவதையும், நீர்ப்பாசன நீர் முன்னைவிட நல்ல முறையில் உபயோகிக்கப்படுவதையும் கூட இது அவசர காரியமாக்கியது.

சுதந்திரத்துக்குப் பிற்பட்டகாலம்

அரசியல் சுதந்திர உதயத்துடன் அரசாங்கம் பொருளாதார விமோசனத்தில் முதல் முக்கிய கவனஞ் செலுத்துவதில் ஈடுபட்டது. இந்நோக்கத்துக்காகவே விவசாய — காணிகள் அமைச்சின் காணி — விவசாயக் கொள்கைகள் வழிப்படுத்தப்பட்டன. உள்நாட்டு நீர் விநியோகத்துக்கும், எரிசக்தி உற்பத்திக்கும் தேவையான நீர் வசதிகளுக்குரிய கட்டுமான வேலைகளைச் செய்யும் பொறுப்பு போக்குவரவு — மராமத்து அமைச்சிடம் இருந்தது. காணிகள், நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டதுடன் வேலைக்கடமைகள் மாற்றியமைக்கப்பட்டன. சிறு நீர்ப்பாசன அமைப்புகளைப் பராமரிக்கும் பொறுப்பு விவசாய — உணவு அமைச்சுக்கும், உள்நாட்டு நீர் விநியோகப் பொறுப்பு உள்ளூர் ஆட்சிமன்ற அமைச்சுக்கும் வழங்கப்பட்டன. 1949 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதியன்று அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்ட பிரமாண்டமான கல்லோயா நீர்ப்பாசனத்திட்டம் மற்றெல்லாத் திட்டங்களுக்கும் மேலாக மிகுந்த கவனத்தைப் பெற்றது. எனவே, சில குறிப்பிட்ட அளவில் விரயங்கள் நேர்ந்ததுடன் மூலவளங்களும் புறக்கணிக்கப்பட்டன.

யுத்தப்பிற்கால வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாக 1947/48 ஆம் ஆண்டுகளுக்கும் 1952/53 ஆம் ஆண்டுகளுக்குமிடையே நீர்ப்பாசன அபிவிருத்திக்காக வகுக்கப்பட்ட முதலாவது ஆறு வருட வேலைத் திட்டம், 16 பெரிய திட்டங்களில் முழுக்கவனஞ் செலுத்தியது. இதனுல் 81,912 ஏக்கர் விஸ்தீரணமுள்ள புதிய காணிகள் கிடைத்தன. முதலாவது ஆறு வருட வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 113 மைல் நீளமுள்ள குளக்கரைகளும், 54 மைல் நீளமுள்ள வெள்ள அணைகளும், 1267 மைல் நீளமுள்ள கால் வாய்களும், 363 மைல் நீளமுள்ள நீர்ப்பாசன அணுகு பாதைகளும், 634 கட்டடங்களும் பூர்த்தி செய்யப்பட்டன. இவை முறையே பெரும் திட்டங்களின் கீழ் 271,433 ஏக்கர் காணிகளையும் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 412,350 ஏக்கர் காணிகளையும் பயன்படுத்தி நீர்ப்பாசனத்துக்கு கொடுத்தன.

1956 ஆம் ஆண்டில் அரசாங்கம் மாறியதுடன் வறண்ட பிரதேச நீர்ப்பாசனத்தில் அக்கறையுள்ள காலஞ்சென்ற சி. பி. டீ. சில்வா அவர்களுக்கு நீர்ப்பாசன அமைச்சின் பொறுப்பு வழங்கப்பட்டது. அவர் பெரும்பாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய திட்டங்களையே அபி விருத்தி செய்தார். அவருக்கு முன்பு இப்பொறுப்பை வகித்த திரு. பி. புளங்குளம திஸ்ஸாவ விவசாய - காணிகள் அமைச்சர் என்ற முறையில் ராஜரட்டையில் குளங்களை அபிவிருத்திசெய்வதில் முழுக்கவனம் செலுத்தினார். 1957 ஆம் ஆண்டில் ஏற்பட்ட படுமோசமான வெள்ளங்களால் நாட்டில் பெருந்தொகையான குளங்கள் பாழாயின. இலங்கையிலுள்ள 35 பெரிய குளங்களுக்கும் 1300 சிறு குளங்களுக்கும் பாரதூரமான தேசம் ஏற்பட்டது. காலஞ்சென்ற அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தனுவின் கீழ் 1958 ஆம் ஆண்டில் நெற்காணிகள் சட்டம் இயற்றப்பட்டு, கமநல சேவைகள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டதுடன், சிறு நீர்ப்பாசனம் மீண்டும் முக்கியமாகியது. மற்றப்படி காணிகளைத் திருத்தி விருத்தி செய்யவோ அல்லது விளைச்சலை அதிகரிக்கக் கூடிய பண்படுத்து செய்கைகளை மேற்கொள்ளவோ வேண்டா வெறுப்புடனிருந்த குத்தகை விவசாயிகளுக்குக் குடிவாரப் பாதுகாப்பு வழங்குவதற்காக 1958 ஆம் வருடத்தில் நெற்காணிகள் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. புதிய சட்டப்படி குடிவார உரிமை பரம்பரையாகப் பெறக்கூடிய உரிமையாக்கப்பட்டது; அத்துடன், கிராமமட்டத்தில் 4000 சொச்ச சாகுபடிக் கமிட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டன. இச் சாகுபடிக் கமிட்டிகள் விவசாயிகளிடையேயிருந்து அவர்களாலேயே தெரிவு செய்யப்பட்டன. 1958 ஆம் ஆண்டில் ஆறு மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்ட புதிய சட்டம் 1963 ஆம் ஆண்டில் 22 மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. கிராம மட்டத்தில் அமைக்கப்பட்ட இந்தத் திட்டமிடல் — அமுல் ஸ்தாபனத்துக்கு இருந்துவந்த பல கடமைகளிடையே, நெற்காணிகளின் பதிவேடுகளைத் தயாரித்து வைத்திருப்பது, விவசாயத் தொழிலாளரின் சம்பள விகிதங்களை நிர்ணயிப்பது, நீர்ப்பாசன அமைப்புகளை அபிவிருத்தி செய்து பராமரித்து வருவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது, நெற்காணிகளைப் பயனுறச் சாகுபடி செய்வது, அவற்றின் செழுமையைப் பாதுகாப்பது போன்ற பொறுப்பான அலுவல்களுமிருந்தன. கிராமங்களில் சிறு நீர்ப்பாசன அமைப்புகளை நிர்மாணித்தல், நில அளவை செய்தல், ஆராய்ந்து பார்த்தல், அத்துடன் பராமரித்து வருதல் ஆகிய பொறுப்புகள் விவசாய சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அவர்கள் போதுமான தொழில் நுட்ப உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்ததுடன், சிறு நீர்ப்பாசன அமைப்புகளில் தேவையான பழுது பார்த்தல்களையும் அபிவிருத்திகளையும் செய்வதில் வருடந்தோறும் ஏறக்குறைய 4,000,000 ரூபாவைச் செலவிட்டு வந்தனர். விவசாய - உணவு அமைச்சின் 1966/1970 க்கான விவசாய அபிவிருத்திக்குரிய செலவுத்திட்டங்களில், சிறு நீர்ப்பாசன அமைப்புகள் சம்பந்தமாகக் கமநல சேவைகள் திணைக்களம் வருடந்தோறும் 1 கோடி ரூபாவைச் செலவிடும் திட்டமிருந்தது. விவசாய உற்பத்திச் சட்டங்களும், விவசாயக் காணிகள் சட்டங்களும் இயற்றப்பட்டதும் நீர்ப்பாசன அமைப்புகளை நிர்மாணித்தல், அவை தொடர்பான நில அளவை செய்தல், ஆராய்வுகளை நடத்துதல், ஆகிய பொறுப்புகள் மீண்டும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டன. கிராம நீர்ப்பாசன அமைப்புகள் புறக்கணிக்கப்பட்டன.

1972 ஆம் வருட 2 ஆம் இலக்க விவசாய உற்பத்திச் சட்டம், குறித்த சட்டத்தின் 3 (1) (2) பிரிவின் கீழ் நல்ல முகாமைக்கான நியமங்களை அமைக்க விவசாய உற்பத்திக் கமிட்டிகளுக்கு அதிகாரமளித்தது. எந்த விவசாயக் காணியினதும் சொந்தக்காரர் அல்லது அதில் குடியிருப்பவர் "நீர்ப்பாசன நீர் வினைத்திறமையுடன் நிர்வகிக்கப்படுவதற்கும்" "நீர்ப்பாசன அமைப்பு தொடர்பான பராமரிப்பு, பழுது பார்த்தல் வேலைகள் நிறைவேற்றப் படுவதற்கும்" வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமெனச் சட்டம் எதிர்பார்த்தது. மேலும், எந்த விவசாயக் காணியினதும் சொந்தக்காரர் அல்லது அதில் குடியிருப்பவர் "விவசாய வேலைகளை முறையாக நேரப்படுத்துவதற்கும்", "நீர் சேமிக்கப்படுவதற்கும் வடிகால் ஏற்பாடு செய்யப்படுவதற்கும்" தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். தனக்குச் சொந்தமல்லாத விவசாயக் காணியொன்றில் குடியிருப்பவர், சொந்தக்காரர் செய்ய வேண்டிய எந்தப் பராமரிப்பு அல்லது பழுது பார்த்தல் வேலைகளையும் மேற்கொள்வதற்குச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு ஏற்பாடு செய்தது. சிறு நீர்ப்பாசன அமைப்புகள் விவசாய உற்பத்திக் கமிட்டிகளின் பொறுப்பிலும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பிலும் இருந்த காலத்தில் சிறு நீர்ப்பாசன அமைப்புகள் புறக்கணிக்கப்பட்டன. இதற்குப் பின்வருவன காரணங்களாயிருக்கலாம்:

(அ) சாகுபடிக் கமிட்டிகளுக்குப் பதிலாக விவசாய உற்பத்திக் கமிட்டிகள் அமைக்கப்பட்டமை. சாகுபடிக் கமிட்டிகள் கிராம மட்டத்தில் விவசாயிகளால் தெரிவு செய்யப்பட்டன. ஆனல், விவசாய உற்பத்திக் கமிட்டிகள் பெரும்பகுதிக்கு - அதாவது விவசாய உற்பத்திப் பகுதி - த் தெரிவு செய்யப்பட்டன. எனவே, சாகுபடி செய்வோருக்கும் அவர்களுக்காகத் திட்டமிட்டு அமுல் செய்யும் ஸ்தாபனத்துக்குமிடையேயிருந்து வந்த நெருங்கிய தொடர்பு குலைந்து விட்டது;

(ஆ) விவசாய உற்பத்திக்கமிட்டிகளின் அங்கத்தவர்கள் அரசியல் காரணங்களின் பேரில் நியமிக்கப்பட்டனர்; விவசாயிகளால் தெரிவுசெய்யப்படவில்லை. இது விவசாயிகளுக்குப் பிரதிநிதித்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகிக்கும் ஒரு ஸ்தாபனமாக இருக்கவில்லை;

(இ) அரசியல் ஆதரவு இருந்து வந்த நிலைமை;

(ஈ) நீர் உபயோகம், நீர் முகாமை சம்பந்தமாகத் தகுந்த கொள்கையொன்று இல்லாமை;

(உ) பல நெல்வயல்களைக் கொண்ட பரந்த காணியான யாயாவில் உள்ள விவசாயிகள் மீது கட்டுப்பாட்டதிகாரம் செலுத்தக் கூடியவரான வெல்விதானையே பரம்பரையாக யாயாவின் நீர் முகாமையாளராக இருந்து வந்தார். ஆனால், அவர் நீக்கப்பட்டு விட்டமை;

(ஊ) சிறு நீர்ப்பாசனம் சம்பந்தமாக விவசாய சேவைகள் திணைக்களத்தின் பொறுப்பான வேலைகள் ஆகக் குறைந்த அளவுக்குக் குறைக்கப்பட்டமை;

(எ) 1974 ஆம் ஆண்டிலிருந்து வரவு செலவுத் திட்டங்கள் பரவலாக்கப்பட்டதிலிருந்து நிதிகள் ஒதுக்க்ப்படாதிருந்த நிலை;

(ஏ) முயற்சிகளனைத்தும் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களிலேயே செலுத்தப்பட்டமை.

1979 ஆம் வருட 58 ஆம் இலக்க கமநல சேவைகள் சட்டம் மறுபடியும் கமநல சேவைகள் திணைக்களத்தை ஏற்படுத்தி, சிறு நீர்ப்பாசன அமைப்புகளைப் பராமரித்து வரும் பொறுப்பை மீண்டும் இத்திணைக்களத்திடமே ஒப்படைத்தது. அரசாங்கம் பின் வருமாறு முடிவு செய்தது:

(அ) 200 ஏக்கருக்குக் கூடுதலான ஆளுகைப் பிரதேசத்திலுள்ள சகல நீர்ப்பாசன அமைப்புகளையும் பற்றி ஆராய்ந்து பார்த்தலும், வடிவமைத்தலும், நிர்மாணித்தலும் தொடர்ந்து நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பிலேயே இருந்து வரும்;

(ஆ) சகல சிறு நீர்ப்பாசன அமைப்புகளையும் பராமரித்துவரும் பொறுப்பு கமநல சேவைகள் திணைக்களத்தினுடையது;

(இ) நீர் பாய்ச்சப்படும் காணியின் பரப்பு 200 ஏக்கருக்குக் குறைவாயிருக்கும் இடங்களில் உள்ளவையே சிறு நீர்ப்பாசன அமைப்புகள். ஆற்று நீர்ப்பாசனத் திட்டங்கள், விசேஷ நீர்ப்பாசனத் திட்டங்கள், உவர் நீர்த் தடுப்புத் திட்டங்கள் ஆகியன சிறு நீர்ப்பாசன அமைப்புகளில் சேரா.

சிறு நீர்ப்பாசன அமைப்புகளைப் பராமரிப்பது என்பது இப்பொழுது கீழ்க்கண்டவாறு வரைவிலக்கணம் செய்யப்படுகிறது;

1. தலைவேலைப் பகுதியைப் பராமரிப்பது என்பது அணைக்கட்டுகளையும் குளக்கரைகளையும் பராமரித்தலாகும். இதில் கரைகளையும் மற்றும் கட்டுக் கோப்புகளையும் வடிவமைப்புப் புறவரைக்கு ஏற்ப அமைத்தல், எறும்புப் புற்றுகளை அப்புறப்படுத்தல், அலசற்பள்ளங்களையும் மற்றும் குழிகளையும் மண்போட்டு நிரப்புதல், களைகளை அகற்றுதல், பொதுவாகத் தலைவேலைப்பகுதியைச் சீரான நிலையில் வைத்திருத்தல் ஆகியன அடங்கும்.

2. மதகுகளையும் மதகுகளை அடைக்கும் கதவுகளையும் மண் வழிகளையும் நீர் வழியும் கால்வாய்களையும் பழுது பார்த்தல்; தேவைப்பட்டால் நிறுத்தற் பலகைகளை மாற்றுதல்;

3. அணைக்கட்டுகளைப் பழுது பார்த்தலும் நிறுத்தற் பலகைகளை மாற்றுதலும்;

4. அடைக்கும் ஏற்பாடுகள் உட்படக் கால்வாய்கள் நெடுக உள்ள கட்டுக் கோப்புகளைப் பழுது பார்த்தல்,

5. கால்வாய் முறைகளைப் பராமரித்தல், நீர் நிர்வாகம், வண்டலை அகற்றல், களைகளைப் பிடுங்கியெறிதல் ஆகிய வேலைகளைச் செய்வதற்கு உழவர்களையும் மற்றும் பொருத்தமான கிராம ஸ்தாபனங்களையும் ஒழுங்குபடுத்தியமைத்தல்;

6. இப்போதிருந்து வரும் திட்டங்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் பிடி சுவர்களைப் பழுது பார்த்தலும் கட்டுதலும், கால்வாய்களைப் பாதுகாப்பதற்காகக் கால் நடைகளின் கடவைகளை அமைத்தல், இயந்திரக் கலப்பைகளுக்கான கடவைகளை ஸ்தாபித்தல், நெடுஞ்சாலைத் திணைக்களம் பராமரித்துவரும் கிராம வீதிகளைத் தவிர மற்றும் கிராம வீதிகளின் குறுக்கே குழாய்ப் பாதைகளை அமைத்தல், கரைகளைக் கட்டுதல் கால்வாய்களைச் சுத்தஞ்செய்தல் ஆகிய வயல் வெளி விவசாயிகளால் செய்யமுடியாத வேலைகளைச் செய்தல், தூக்குக் கதவுகள் நிறுத்தற் பலகைகள் முதலிய வற்றை அடிக்கடி திருப்பி விடுவதன் மூலம் அவற்றைக் கிரமமாகப் பராமரித்து வருதல், நீர் பாயாத காலங்களில் இக்கதவுகளுக்கு "கிறீஸ்" பூசி விடுதல், சகல வடிகால் கதவுகளையும் தொழிற்படுத்தலும் பராமரித்தலும், கால்நடைகளின் குளியலுக்கும் ஆட்கள் குளிப்பதற்கும் துணிதுவைப்பதற்குமான இடங்களைக் குறிப்பதன் மூலம் கால்வாய்களையும் அணைக்கட்டுகளையும பாதுகாத்தல் ஆகியன.

கமநல சேவைகள் சட்டத்தின் கீழ் 4560 பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களும், ஒவ்வொரு வயல் வெளிக்கும் தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட ஒருவெல் விதானையும் நியமிக்கப்பட்டனர். 500 கமநல சேவைகள் நிலையங்களுக்கும் ஒரு பெரும்பாக அதிகாரி பொறுப்பாயிருப்பார். ஒவ்வொரு நிலையத்திலும் ஒரு கிராம வங்கியுடன் பல்வேறு திணைக்களங்களையும் சேர்ந்த விவசாய உத்தியோகத்தர்களும் இருப்பார்கள். விவசாய இரசாயனப் பொருள்கள், நடும் கன்றுகள், விதைகள், விசிறல் எந்திரங்கள் உட்பட விவசாய உபகரணங்கள் யாவும் நிலையத்தில் கையிருப்பில் இருக்கும். பண்ணைப் படலைகளில் உரங்கள் கொண்டு போய் விநியோகிக்கப்படுவதற்காக ஒவ்வொரு நிலையத்திலும் ஒரு ட்ராக்டர் இருக்கிறது. கமநல சேவைகள் கமிட்டியில் விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புள்ள 8 ஸ்தல அதிசாரிகளும், கமநில சேவைகள் கமிட்டியின் அதிகாரத்திலுள்ள பகுதியின் பிரதிநிதிகளாக 8 தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளும் இருப்பார்கள். தற்போது கமநல சேவைகள் கமிட்டி நிலையங்களில் இத்தகைய தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாகச் சுமார் 15,175 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1979 ஆம் வருட 58 ஆம் இலக்க கமநல சேவைகள் சட்டம் நீர் நிர்வாகத்துக்கும் முகாமைக்குமுரிய ஏற்பாடுகளை உறுதிப்படுத்துகின்றது. அச்சட்டத்தின் 42 (1) ஆம் பிரிவின் கீழ் நீர் நிர்வாகம் கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது;

(அ) கால நேரத்தில் கன்னு கூட்டங்களை நடத்தல்;

(ஆ) நெற் சாகுபடியைச் சரியாக நேரப்படுத்தல்;

(இ) விரயங்கள் தொடர்பாக ஸ்தாபிதமான வழமைகளை அமுல் நடத்தலும் விவசாயத் தொழிற்பாடுகளைச் சரியாக நேரப்படுத்தலும்;

(ஈ) நீர்ப்பாசன அமைப்புகளைத் திறமையாக நிர்வகித்தல்;

(உ) மண்வளத்தைப் பாதுகாப்பதற்காகக் கூட்டு நடவடிக்கைகள்;

(ஊ) பீடைகளுக்கும் நோய்களுக்கும் எதிரான பாதுகாப்பு;

(எ) மிருகங்கள் அத்துமீறிப் பிரவேசியாது தடுத்தல்;

(ஏ) விவசாயக் காணிகளை உபயோகிப்பதற்கும் அவற்றின் விளைதிறனை அபிவிருத்தி செய்வதற்கும் இத்தகைய காணிகளில் சாகுபடி செய்வோர்மீது விதிக்கப்பட்டுள்ள மற்றெந்தப் பொறுப்பும்.

(தொடரும்.)

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

வாராந்த விஜயங்களின் போதே செய்யப்படுகின்றன. அவை கூட்டுறவுத் திணைக்களத்தின் வருடாந்த கணக்காய்வுக்கும் உட்பட்டுள்ளன. கடன் வழங்கும் நடவடிக்கைகளையும் மற்றும் நடவடிக்கைகளையும் மீளாய்வு செய்வதற்காக, மக்கள் வங்கியின் பிரதேச அலுவலகங்கள் வருடந்தோறும் பரிசோதனைகளை நடத்துவதுடன் காலாண்டுக்கொரு முறை திடீர்ச் சோதனைகளையும் மேற்கொள்கின்றன. 31.12.83 ல் இருந்தவாறு, 843 கூட்டுறவுக் கிராம வங்கிகளில் 620, அவ்வருடத்தில் மக்கள் வங்கியின் பிரதேச அலுவலகங்களால் பரிசோதிக்கப்பட்டுள்ளன. அத்துடன், இலங்கை மத்திய வங்கியின் கிராமக் கொடுகடன் திணைக்களமும் எழுந்தமானமாகக் கிராம வங்கிகளைத் தெரிவுசெய்து, பரிசோதனை நடத்துகின்றன.

முடிவுரை

இப்பொழுது கூட்டுறவுக் கிராம வங்கிகள் சீராக வளர்ந்து, விரிவான பொறுப்புக்களை மேற்கொள்ளத் தங்களுக்குள்ள திறமையை எடுத்துச் காட்டியுள்ளதால், அவற்றை மேலும் விரிவாக்குவதற்கான வழி முறைகளில் சில கீழே ஆராயப்படுகின்றன:—

(அ) நடைமுறைக் கணக்குகளை அறிமுகஞ் செய்தல், மேலதிகப் பற்று வசதிகள் சுழலும் கடன் வசதிகள் முதலியன போன்ற வசதிகளை இக் கணக்குகள் வாயிலாக வழங்குதல் - இதற்காக இப்போதுள்ள சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

(ஆ) மக்கள் வங்கியின் முகவர்களாகச் செயலாற்றவும், அதிக வசதிகள் கோரி அங்கத்தவர்களும் அங்கத்தவரல்லாதாரும் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை ஏற்று, அவற்றை மக்கள் வங்கிக்கு அனுப்பவும், கூட்டுறவுக் கிராம வங்கிகளுக்கு அதிகாரம் வழங்குதல்.

(இ) ஒன்றிணைக்கப்பட்ட கிராமாபிவிருத்தித் திட்டங்கள் உலர் வலய அபிவிருத்தித் திட்டம் போன்ற விசேஷ திட்டங்களின் கீழ் கடன் கொடுக்க, கூட்டுறவுக் கிராம வங்கிகளை அனுமதிப்பதன் மூலம் இந்த ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்முறைக்கு அருகில் கொண்டு வருதல்.

எங்கள் வங்கி இந்த அடிப்படையில் தங்கள் சேவைகளை விரிவாக்கும் சாத்தியக் கூறுகளைத் தற்போது ஆராய்ந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இண்டர் நெஷனல் கிரபிக் மெகசின் லிமிடட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org